**ம.அ.3உ.செ.பொ.(மி)/ந.க.எண்/ 418 /2021**

**தீர்மானஎண்.536 / 2021** **நாள்:03-07-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-3, மின்துறை - திடக்கழிவு மேலாண்மைத்துறை - மாதவரம் சின்னசேக்காடு பகுதியில் உயிர் வாயு கலன் (Bio Gas Plant) அமைத்தல் - 3 phase HT line with separate feeder power supply - TANGEDCO வில் இருந்து மின் இணைப்பு பெறுவதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-3ல் பகுதி-7, கோட்டம்-29, மாதவரம் சின்னசேக்காடு பகுதியில் திடக்கழிவு மேலாண்மை துறையினரால் மக்கும் குப்பைகளை பதப்படுத்தி அதில் உருவாகும் இயற்கை உயிர் வாயுவை உயர் அழுத்தம் கொடுத்து அதனை நன்றாக சுத்திகரிக்கச்செய்து இயற்கை உயிர்வாயுவாக உற்பத்தி செய்து இதனை எரிபொருளாக உருவாக்குவதற்கு இயற்கை உயிர் வாயு கலன் *Phase 1&2* அமைக்க உள்ளன.

இப்பணிக்காக M/s. MAHA SAKTHI BIO ENERCON PRIVATE LIMITEDக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இப்பணிக்காக மின் இணைப்புக்கு திடக்கழிவு மேலாண்மை துறையினரால் *25.08.2020* நாளிட்ட கடிதம் பெறப்பட்டன. இதற்கிணங்க பெருநகர சென்னை மாநகராட்சியின் மின்துறை, திடக்கழிவு மேலாண்மை துறை, தமிழ்நாடு மின்சார வாரியம் (TANGEDCO) மற்றும் M/s. MAHA SAKTHI BIO ENERCON PRIVATE LIMITED ஆகியோர்கள் கூட்டாய்வு நடைபெற்றது. மற்றும் M/s. MAHA SAKTHI BIO ENERCON PRIVATE LIMITED மூலம் இயந்திரம் மற்றும் மின் நுகர்வுக்கான (501. 50 KW for Bio CNG Plant Phase 1) விவரங்கள் கடிதமாக பெறப்பட்டது.

இந்த கூட்டாய்வில் Bio CNG Plantக்கான மின் இணைப்பு எவ்வித மின் தடை மற்றும் தளர்வுகள் இன்றி வழங்குவதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் புதிய *Sub Station* அமைப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டது.

இதன் அடிப்படையில் தமிழ்நாடு மின்சார வாரியம் *Sub Station* அமைப்பதற்கு திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டு மாவட்ட வருவாய் அலுவலர், நிலம் மற்றும் உடைமைத்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் மின் மாற்றி அமைக்கும் பணிக்கு MAHA SAKTHI BIO ENERCON PRIVATE LIMITED கடிதம் 10Mx15Mக்கான இடத்தை சின்ன சேக்காடு Bio CNG Plant Ph-1 & 2 பகுதியில் ஒதுக்கியுள்ளனார்.

இதன்படி இயற்கை உயிர் வாயு கலன் *Phase - 1 &2* க்கான உயர்மின் அழுத்த மின் இணைப்புக்கு தேவையான மின் உபகரணங்கள் (Transformer and SS) அமைப்பதற்கு தோராயமாக மதிப்பீடு கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| Sl. No. | Name of Location | Power capacity Required | Power consumption details | Electrical Installations Required | Amount For |
|---|---|---|---|---|---|
| 1 | Madhavaram Chinna Sekkadu Zone-3 (Bio Gas Plant) | 1250 KVA | Phase-1=501.50KW Phase-2=501.50KW | 1250KVA Transformer with ACB Panel | 88,83,300.00 |
| **Total Amount: ( Rupee Eighty Eight Lakhs Eighty three Thousand and Three Hundred only)** | | | | | **88,83,300.00** |

**ம.அ.3உ.செ.பொ.(மி)/ந.க.எண்/ 418 /2021**

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறைக்கு மண்டலம் 3 மாதவரம் சின்னசேக்காடு பகுதியில் உயிர் வாயு கலனின் மின் இணைப்புக்காக மின் உபகரணங்கள் (Transformer and SS) அமைப்பதற்கு அனுமதி வழங்கவும்,.
2. மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.88,83,300/- (ரூபாய் எண்பத்து எட்டு இலட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து முன்னூறு மட்டும்) -ஐ FC No. 20-24-02 & DP No. 412-401-305 என்ற மின் துறையின் கணக்கு தலைப்பின் 2021 – 22 கீழ் மேற்கொள்ளவும்

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 22.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**வ.து.ந.க.எண்.தொ.உ / 2802 /2021**

**தீர்மானஎண்.537 / 2021** **நாள்:03-07-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை - கோவிட்-19, இரண்டாவது அலை காரணமாக–2021-2022ம் ஆண்டுக்கான தொழில் உரிமம் புதுப்பிக்க காலக்கெடு 31.12.2021 வரை தண்ட தொகையில்லாமல் வசூலிக்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, வருவாய் துறையின் முக்கிய வருவாய் இனமான தொழில் உரிமம் வழங்க சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம், 1919ன்படி பின்வரும் பிரிவுகளில் உரிமம் வழங்க வரையறுக்கப்பட்டுள்ளது.

| Relevant section in CCMC Act 1919 | Description |
|---|---|
| 279 | Prohibition in respect of lodging houses, eating house, etc., |
| 287 & 288 | Industries and factories, |
| 299 | Regulation of milk trade |
| 304 | Licensing of Private markets |
| 309 | Butcher's fishmonger's and poulterer's licence |

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919, உரிய பிரிவுகளின் கீழ் வழங்கப்படும் தொழில் உரிமம் அந்த நிதியாண்டு வரை செல்லத்தக்கதாகும். அவ்வாறு உரிய நிதியாண்டில் புதுப்பிக்க தவறிய உரிமங்கள் ஏப்ரல் 30ம் தேதி வரை உரிமக் கட்டணத்துடன், தண்டத் தொகையாக உரிமக் கட்டணத்தில் 50 சதவீதம் சேர்த்து வசூலிக்கவும், மே 1ம் தேதி முதல் புதுப்பிக்கப்படும் உரிமங்கள் உரிமக் கட்டணத்துடன் தண்டத் தொகையாக உரிமக் கட்டணத்தில் 100 சதவீதம் சேர்த்து உரிய நிதியாண்டு முடிய (மார்ச் 31 வரை) வசூலிக்கவும், அவ்வாறு புதுப்பிக்கத் தவறிய உரிமங்கள் அடுத்து வரும் நிதியாண்டில் எவ்வித அறிவிப்பின்றி தானாக இரத்து ஆகிவிடும் என்று மன்றத் தீர்மான எண்.44/2003, நாள் 30.01.2003ன்படி தீர்மானிக்கப்பட்டது.

*2021-2022 (01.04.2021* முதல் *31.03.2022* வரை *)* ஆம் ஆண்டுக்கான உரிமங்கள் 01.02.2021 முதல் புதுப்பிக்கப்பட்டு வந்த நிலையில், தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 06.04.2021 அன்று நடைபெறும் என *26.02.2021* அன்று இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட நிலையிலும், தேர்தல் நன்னடத்தை விதி அமலில் இருந்ததாலும் அனைத்து வருவாய் துறை அலுவலர்களும் தேர்தல் பணியினை மேற்கொண்ட காரணத்தினாலும், குறிப்பிட்ட காலத்திற்குள் உரிமங்களை புதுப்பிக்கக் கோரி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த இயலாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில் 2021-*2022 (01.04.2021* முதல் *31.03.2022* வரை*)* ஆம் ஆண்டுக்கான உரிமத்தை தண்ட தொகையின்றி 30.04.2021 வரை புதுப்பிக்கலாம் என சிறப்பு அதிகாரி மூலம் மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு (தீர்மான எண்.427/2021 நாள் 21.04.2021) . உரிமங்கள் 30.04.2021 வரை எவ்வித தண்டத் தொகையின்றி புதுப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், கோவிட்-*19* இரண்டாம் அலையின் காரணமாக ஊரடங்கு அமல்படுத்தப்பட்டதால் வணிகர்களால் உரிமங்கள் புதுப்பிக்கப்படவில்லை.

தற்போது தளர்வுகளுடன் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளதாலும், வணிகர்களின் நலன் கருதியும் தற்போது வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண்.33, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, நாள்.*01.06.2021*ன்படி "மே 2021 முதல் செப்டம்பர் 2021 வரை காலாவதியாகவுள்ள மாசு கட்டுப்பாட்டு வாரியம், தீயணைப்புத் துறை, தொழிலாளர் துறை, தொழில் பாதுகாப்புத் துறை, வணிக உரிமம் உள்ளிட்ட அனைத்து சட்டப்பூர்வமான உரிமங்கள் டிசம்பர் 2021 வரை நீட்டிக்கப்படுகின்றன."

**வ.து.ந.க.எண்.தொ.உ / 2802 /2021**

எனவே மேற்கண்ட அரசாணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியால் 2021-2022 ஆம் ஆண்டுக்கான அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மண்டலவாரியான உரிமங்களை 31.12.2021க்குள் தண்டத் தொகையின்றி புதுப்பித்திட சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 25.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

| மண்டலம் | புதுப்பிக்கப்பட்ட தொழில் உரிமம் | புதுப்பிக்கப்படவேண்டிய தொழில் உரிமம் |
|---|---|---|
| 1 | 1103 | 1278 |
| 2 | 753 | 331 |
| 3 | 2771 | 1043 |
| 4 | 4151 | 2731 |
| 5 | 7920 | 6923 |
| 6 | 3160 | 1521 |
| 7 | 3570 | 1331 |
| 8 | 4768 | 2271 |
| 9 | 5607 | 2786 |
| 10 | 3232 | 2323 |
| 11 | 2239 | 848 |
| 12 | 1715 | 597 |
| 13 | 2917 | 2018 |
| 14 | 871 | 866 |
| 15 | 1082 | 939 |
| மொத்தம் | 45859 | 27806 |

**"தொழில் உரிமங்களை தண்டத் தொகையின்றி புதுப்பித்திட, சிறப்பு அதிகாரி -நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**ம.அ3நக.எண்.அ4/2048/2021**

**தீர்மானஎண்.538/2021** **நாள்:03-07-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-3 மாதவரம் - பகுதி - 6 , 7 மற்றும் - 8 - விரிவாக்கப்பட்ட பகுதியில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட சாலை பணியாளர்கள், பூங்கா பணியாளர்கள், மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் பணியாளர்கள் ஆகியோரது (NULM) பணியாளர்களின் பணிக்காலம் 31.05.2021 உடன் முடிவடைவது - 01.06.2021 முதல் 31.08.2021 வரை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியாளர்களை பணியமர்த்த அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மாதவரம் மண்டலம்-3ல் பகுதி-6,7, மற்றும் 8 வார்டு-22 முதல் 33 வரை 40.55 சதுர கி.மீ. பரப்பளவுள்ள 12 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும் . இந்த மண்டலத்தில் 13 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 2549 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகரமயமாக்குதலுக்கு பின்னர் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கள் தொகை வளர்ச்சி அடைந்து வருகிறது.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி என்பதால் முக்கியமான தெருக்களை தவிர அனைத்து தெருக்களிலும் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள அவசரம் கருதி தீர்மான எண். 422/2016, நாள்.30.07.2016ன் படி, தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் (NULM) தற்காலிக பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மண்டலம்-3 , வார்டு 22 முதல் 33 வரை 12 வார்டுகளில் அனைத்து களப்பணிகளையும் திறம்பட மேற்கொள்ள ஏற்கனவே பணி புரிந்து வரும் நிரந்தர பணியாளர்கள் மற்றும் தொகுப்பூதிய துப்புரவு பணியாளர்களை தவிர்த்து துப்புரவு பணிக்கு 521 பணியாளர்கள் , சாலை பணிக்கு 94 பணியாளர்கள், மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் பணிக்கு 44 பணியாளர்கள் மற்றும் பூங்கா பணிகள் மேற்கொள்ள 12 பணியாளர்கள் என கூடுதலாக 671 தற்காலிக (NULM) பணியாளர்களை பணி அமர்த்தி அனைத்து பணிகளையும் திறம்பட மேற்கொள்ளப்பட்டு வந்தது. 27-02-2021 முதல் துப்புரவு பணிகள் தனியார் வசம் ஒப்பந்த அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட மன்றத்தீர்மானத்தின்படி 521 தற்காலிக NULM துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 28-02-2021 உடன் நிறைவடைந்தது. மேற்படி 521 துப்புரவு பணியாளர்கள் தவிர்த்து சாலைப்பணியாளர்கள், மழைநீர் வடிகால் பணியாளர்கள், பூங்கா பணியாளர்கள், போன்றவர்களின் அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டு முறையே பின் வருமாறு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். இவர்களை NULMன் திட்டத்தின் கீழ் பணி அமர்த்தலாம், (சாலைப்பணியார்கள் 94 , மழைநீர் வடிகால் பணியாளர்கள் 44 , பூங்கா பணியாளர்கள் 12).

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ROC.C2/7393/2018 நாள் 07-07-2020ல் வரிசை எண்.64ன் படி, துப்புரவு மற்றும் சுகாதார பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.391/- எனவும், மேற்படி பணிகளுக்கு என பணியமர்த்தப்படும் சாலை பணியாளர்கள், மழைநீர் வடிகால்வாய் பணி ,பூங்கா பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 391/- என நிர்ணயிக்காலம் .மண்டலம்-3ல் மேற்கடி சாலை பணியாளர்கள், மழைநீர் வடிகால்வாய் பணி, பூங்கா பணியாளர்களை மேற்கொள்ளவும், 01.06.2021 முதல் 31.08.2021 வரையிலும், மேலும், சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண். 133 /2021 . நாள் : 08.02.2021ன்படி தேசிய நகர்புற வாழ்தார இயக்கம் மூலம் (NULM) 94 சாலை பணியாளர்கள், 44 மழை நீர் வடிகால் வாய் பணியாளர்கள் மற்றும் 12 பூங்கா பணியாளர்கள் என மொத்தம் 150 தற்காலிக பணியாளர்களை மண்டலம்-3 (மாதவரம்)

**ம.அ3.ந.க.எண்.அ4/2048/2021**

பகுதி 6, 7 மற்றும் 8க்கு உட்பட்ட பகுதிகளில் சாலை பராமரிப்பு பணி, மழை நீர் வடிகால் வாய் பணி பூங்கா பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 3 மாத காலத்திற்க்கு 01-06-2021 முதல் 31-08-2021 வரை (92 நாட்களுக்கு) பணியமர்த்தலாம் என கருதப்படுகிறது.

மேற்படி 150 பணியாளர்களின் விவரம் பின்வருமாறு :

| வ. எண் | பணியாளர் விவரம் | தற்போது பணி புரிந்து வரும் பணியாளர்கள் | | | மொத்த NULM பணியாளர்கள் | தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | நிரந்தர பணியாளர் | NULM | மொத்தம் | | |
| 1 | சாலை பணியாளர் | 41 | 94 | 135 | 94 | (94x391x92) Rs.33,81,368/- |
| 2 | மழைநீர் கால்வாய் பணியாளர் | 0 | 44 | 44 | 44 | (44x391x92) Rs.15,82,768/- |
| 3 | பூங்கா பணியாளர் | 0 | 12 | 12 | 12 | (12x391x92) Rs.4,31,664/- |
| **மொத்தம்** | | | **150** | **191** | **150** | Rs.53,95,800/- |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, 94 பணியாளர்களுக்கு ரூ. 33,81,368/-, மழைநீர் வடிகால்வாய் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 44 பணியாளர்களுக்கு ரூ.15,82,768/- பூங்கா பணிகளுக்காக 12 பூங்கா பணியாளர்களுக்கு ரூ. 4,31,664/- ஆக மொத்தம் 92 நாட்களுக்கு ரூ. 53,95,800/- தோராய செலவு என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இப்பணிக்காக கணக்கு தலைப்பு எண். 20-21-07 கணக்கு குறியிட்டு எண் 210-100-603ன் கீழ் 2021–22 ஆம் நிதியாண்டிற்கு ரூ.53,95,800/- நிதி ஒதுக்கப்பட்டு தற்போதுரூ.20,24,816/- இருப்பில் உள்ளது. மேற்படி கடந்த 31.05.2021 வரை பணியாற்றி உள்ள 150 பணியாளர்களுக்கு ரூ.18,18,150/- சம்பள தொகை வழங்க பட உள்ளதால் மீதம் ரூ.2,06,666/- உள்ளது.

எனவே,

1. மேற்கண்ட நிகழ்வுகளை கருத்தில் கொண்டு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் 94 சாலை பணியாளர்கள், 44 மழைநீர் வடிகால்வாய் பணியாளர்கள் மற்றும் 12 பூங்கா பணியாளர்கள் ஆக மொத்தம் 150 பணியாளர்களை மண்டலம்-3(மாதவரம்) , பகுதி 6,7 மற்றும் 8க்கு உட்பட்ட பகுதிகளில் தூய்மை பணி, சாலை பராமரிப்பு பணி, மழைநீர் கால்வாய் பணி மற்றும் பூங்கா பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 3 மாத காலத்திற்கு 01.06.2021 முதல் 31.08.2021 வரை 92 நாட்களுக்கு பணியமர்த்தவும், 01.06.2021 அன்று முதல் இப்பணிக்கு அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்ட தொழிலாளர்களுக்கான குறைந்தப்பட்ச அடிப்படை ஊதியமாக 96 சாலை பணியாளர்கள், 44 மழைநீர் வடிகால்வாய் பணியாளர்கள், 12 பூங்கா பணியாளர்கள் என 150 தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமான ரூ. 391/- வீதம் 150 பணியாளர்களுக்கு மூன்று மாத காலத்திற்கு (92 நாட்கள்) ஆகும் செலவுத் தொகை 391 x 150 x 92 நாட்கள் = ரூ . 53,95,800/- என மொத்தம்

ரூ. 53,95,800/- (ரூபாய் ஐம்பத்து மூன்று இலட்சத்து தொண்ணூற்றி ஐந்தாயிரத்து எண்ணூறு மட்டும்) ஆகும். எதிர்வரும் காலங்களில் தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் தமிழக அரசால் உயர்த்தி நிர்ணயிக்கப்படின் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தை வழங்க நிர்வாக அனுமதி வேண்டியும்,

3. இப்பணிக்கான செலவினங்களை கீழ்கண்ட கணக்கு தலைப்பில் மேற்கொள்ளவும்

| வ.எண் | பணி விவரம் | கணக்கு குறியீட்டு எண் | கணக்கு தலைப்பு எண் |
|---|---|---|---|
| 1 | சாலை பணி, மழைநீர் வடிகால் மற்றும் பூங்கா பணி | 20-21-07 | 210-100-603 |

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 22.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**பொ.து.ந.க.எண்.இ7/25172/2020 &**
**பொ.சு.து.ந.க.எண். சி2/2787/2019**

**தீர்மானஎண்.539/2021** **நாள்:03-07-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - பொது சுகாதாரத்துறை - 2019-2020 ஆம் ஆண்டிற்கான 01.04.2019ஐ மைய நாளிட்டு உதவி செவிலி கண்காணிப்பாளர் - (Assistant Nursing Superintendent) பதவி உயர்வுக்கான இறுதி தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை 2019-2020 ஆம் ஆண்டிற்கான உதவி செவிலி கண்காணிப்பாளர் (Assistant Nursing Superintendent) பதவியில் ஏற்பட்டுள்ள 01 காலிப்பணியிடத்தை, ஊட்டப்பதவியான பணிச்செவிலியர் பதவியில் பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு மூலம் Level - 16, ரூ. 36,400 – 1,15,700 என்ற ஊதிய விகிதம் மற்றும் இதர அனுமதிக்கப்பட்ட படிகளுடன் நிரப்புவதற்கான பட்டியல் 01.04.2019 என்ற மைய நாளிட்டு (Crucial Date) தயாரிக்கப்படவேண்டும். பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை சார்நிலைப் பணிகளுக்கான திருத்தப்பட்ட துணை விதிகள் – 2009-ல் உதவி செவிலி கண்காணிப்பாளர் (Assistant Nursing Superintendent) பதவிக்கான நியமன முறை மற்றும் கல்வித்தகுதிகள் அடிப்படையில் நிரப்ப சிறப்பு அதிகாரி, மன்றத்தின் (தீர்மான எண். 113/2018, நாள்: 02.02.2018) அனுமதி பெறப்பட்டுள்ளது. உதவி செவிலி கண்காணிப்பாளர் (Assistant Nursing Superintendent) பதவிக்கான ஊட்டப்பதவி பணிச்செவிலியர் பதவியாகும்.

**உதவி செவிலி கண்காணிப்பாளர் (Assistant Nursing Superintendent)**

**காலிப்பணியிட விவரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 01 | பதவியின் பெயர் | உதவி செவிலி கண்காணிப்பாளர் (Assistant Nursing Superintendent) வகுப்பு-3 | | |
| 02 | மைய நாள் | 01.04.2019 | | |
| 03 | ஊதிய விகிதம் | அரசாணை நிலை எண். 303, நிதி (ஊகு) துறை நாள்:11..102017ன்படி, Level-16 , Rs. 36400 -115700 | | |
| 04 | காலிப்பணியிட விவரம் | 1. அனுமதிக்கப்பட்ட பணியிடம் மொத்தம் | - | 02 |
| | | (அ) தற்காலிக பணியிடம் | - | 00 |
| | | (ஆ) நிரந்தர பணியிடம் | - | 02 |
| | | (இ) தற்போது பணியில் உள்ளவர்களின் எண்ணிக்கை | - | 01 |
| | | 2. மைய நாளுக்கு முன்பு / பின்பு ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம் | - | 01 |
| | | (அ) மைய நாளுக்கு பின்பு ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம் | - | 01 |
| | | (ஆ)01.04.2019 முதல் 31.03.2020 வரை பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் | - | 01 |
| | | 3. பதவி உயர்வு வழங்குவதால் பட்டியலாண்டில் ஏற்பட்ட / ஏற்படவுள்ள காலிப்பணியிடம் | - | 01 |
| | | 4. அரசாணை எண். 103, பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள். 09.10.2014ன்படி 40 X 2= 0.8 / 100 | - | 01 |
| | | 5. மொத்தம் காலிப்பணியிடம் | - | 03 |

**பொ.து.ந.க.எண்.இ7/25172/2020 &**
**பொ.சு.து.ந.க.எண். சி2/2787/2019**

**உதவி செவிலி கண்காணிப்பாளர் (Assistant Nursing Superintendent)**
**பதவியின் நியமன முறை**

| வகை எண் | பதவியின் பெயர் | நியமன முறை | நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச கல்வித்தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|
| 18 | உதவி செவிலி கண்காணிப்பாளர் (Assistant Nursing Superintendent) | பணிச்செவிலியர் பதவியிலிருந்து பதவி உயர்வின் மூலம் | 1. தமிழ்நாடு அரசு அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் அளிக்கப்படும் செவிலி பட்டயம்.<br>2. தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் சட்டம் 1926ன்படி, பிரிவு 1Aன்படி அல்லது 1Bன்படி, செவிலியராக பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் | ஊதிய விகிதம் 9300 – 34800 + தர ஊதியம் 4600 (Level -16, ரூ. 36400 – 115700) நிர்ணய நாள் ஒவ்வொராண்டும் ஏப்ரல் முதல் நாள் |

பொது சுகாதாரத்துறையின் 05.10.2020 நாளிட்ட சுற்றறிக்கையின் வாயிலாக, பொது சுகாதாரத்துறையில் 2019-2020-ஆம் ஆண்டில் காலியாக உள்ள உதவி செவிலி கண்காணிப்பாளர் பதவிக்கான (Assistant Nursing Superintendent) பதவியின் காலிப்பணியிடத்தை நிரப்பும் பொருட்டு 01.04.2019 ஐ மைய நாளாகக் கொண்டு பணிச்செவிலியர் பதவியின் பணிமூப்பு அடிப்படையில் கல்வித் தகுதிகளை கொண்ட தகுதியான 01 நபர் அடங்கிய தற்காலிக தெரிவுப்பட்டியல் கீழ்கண்டவாறு வெளியிடப்பட்டது.

**உதவி செவிலி கண்காணிப்பாளர் பதவிக்கான தற்காலிக தெரிவுப்பட்டியல் விவரம்**

| வ.எண் | பெயர் / பதவி | தற்போது பணிபுரியும் இடம் | தற்போது உள்ள பதவியில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1, | திருமதி. J. கலாபூர்ணமேரி பணிச்செவிலியர் | தொற்றுநோய் மருத்துவமனை | 15.10.1990 பிற்பகல் |

மேற்கண்டவாறு, பெருநகர சென்னை மாநகராட்சி, இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 05.10.2020 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, வெளியிடப்பட்ட தற்காலிக தெரிவுப்பட்டியலை துறை / வட்டார /மண்டலங்களுக்கு சுற்றுக்கு விடப்பட்டு ஆட்சேபணை கருத்துக்கள் ஏதும் இருந்தால் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டதில் இப்பதவிக்கு ஆட்சேபணை கருத்துக்கள் ஏதும் பெறப்படவில்லை.

2019-2020 ஆம் ஆண்டில் 01.04.2019ஐ மைய நாளாக கொண்டு உதவி செவிலி கண்காணிப்பாளர் (Assistant Nursing Superintendent) பதவிக்கு ஊட்டப்பதவியான பணிச்செவிலியர் பதவியின் பணிமூப்பு அடிப்படையில் 01 நபர் அடங்கிய இறுதி தெரிவுப்பட்டியல் கீழ்கண்டவாறு அமைகிறது.

| வ. எண் | பெயர் / பதவி | தற்போது பணிபுரியும் இடம் | தற்போது உள்ள பதவியில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1, | திருமதி. J. கலாபூர்ணமேரி பணிச்செவிலியர் | தொற்றுநோய் மருத்துவமனை | 15.10.1990 பிற்பகல் |

**பொ.து.ந.க.எண்.இ7/25172/2020 &**
**பொ.சு.து.ந.க.எண். சி2/2787/2019**

மேற்கண்ட நபரின் பணிவிவரங்கள் பணிப்பதிவேட்டில் சரிபார்க்கப்பட்டுள்ளது. இத்தனியர் உதவி செவிலி கண்காணிப்பாளர் பதவிக்கு உரிய கல்வித் தகுதிகளை பெற்றுள்ளதாகவும், இப்பணியாளர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை எனவும், கடந்த 5 ஆண்டுகளில் தண்டனை ஏதும் பெறவில்லை என்றும் சம்பந்தப்பட்ட துறைத்தலைவரான இயக்குநர், தொற்று நோய் மருத்துவமனை அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் 2019 -2020 ஆம் ஆண்டில் 01.04.2019 ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட 01 நபர் அடங்கிய இறுதி தெரிவுப்பட்டியல் வெளியிட சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி வகுப்பு-3 மற்றும் 4-ம் நிலை பணியாளர்களுக்கான திருத்தப்பட்ட சார்நிலைப் பணிவிதிகள் 2009-ன்படி, 01.04.2019ஐ மைய நாளாகக் கொண்டு 2019 -2020-ம் ஆண்டிற்கான உதவி செவிலி கண்காணிப்பாளர் (Assistant Nursing Superintendent) பதவிக்கு ஊட்டப்பதவியான பணிச்செவிலியர் பதவியில் பணிமூப்பு வரிசையின் அடிப்படையில் திருமதி.J.கலாபூர்ணமேரி, பணிச்செவிலியர் அடங்கிய இறுதி தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

2. இறுதி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள திருமதி.J. கலாபூர்ணமேரி , பணிச்செவிலியர் அவர்களுக்கு பட்டியலாண்டில் ஏற்பட்டுள்ள உதவி செவிலி கண்காணிப்பாளர் (Assistant Nursing Superintendent) பதவிக்கான காலிப்பணியிடத்தில் ரூ. 9300 – 34800 + தர ஊதியம் 4600 (Level -16, ரூ. 36400 – 115700) என்ற காலமுறை ஊதியம் மற்றும் அனுமதிக்கப்பட்டுள்ள இதரபடிகளுடன் பதவி உயர்வு வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 25.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/3437/2021**

**தீர்மானஎண்.540/2021** **நாள்:03-07-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறையில் பணிபுரியும் - டாக்டர்.A.S.சாகிதா பேகம், மருத்துவ அலுவலர் அவர்களுக்கு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்க அனுமதி.**

பெருநகர மருத்துவ அலுவலர் (பொ) அவர்களின் 27.01.2021 நாளிட்ட கடிதத்தில், மருத்துவ சேவைகள் துறையில் பணிபுரியும் டாக்டர்.A.S.சாகிதா பேகம், மருத்துவ அலுவலர், அவர்களுக்கு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்கக் கோரி கோப்பு பெறப்பட்டுள்ளது.

மருத்துவ சேவைகள் துறையில் பணிபுரியும் மருத்துவ அலுவலரின் பணிக்கால விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | பெயர்/பதவி திருவாளர்கள் | பணியில் சேர்ந்த நாள். | துறைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற நாள். |
|---|---|---|---|
| 1. | டாக்டர்.A.S.சாகிதா பேகம், மருத்துவ அலுவலர் , | 26.04.2013 பி.ப | MC தேர்வு தேர்ச்சி, நாள். 16.03.2014<br>EO தேர்வு தேர்ச்சி, நாள். 16.03.2014 |

மேலும், தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை / விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் 06.01.2015 முதல் 20.01.2015 வரை 15 நாட்கள் ஈட்டிய விடுப்பு துய்த்துள்ளார்.

மேலும், ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ3/49369/2012, நாள்.24.11.2012ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு.2ன் கீழ் வரும் பதவிகளுக்கு தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்க உரிய அதிகார பங்களிப்பு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் வசம் உள்ளது.

எனவே, டாக்டர்.A.S.சாகிதா பேகம், மருத்துவ அலுவலர், ஒரகடம்நகர ஆரம்ப சுகாதார நிலையம், அம்பத்தூர் மருத்துவ மண்டலம், மருத்துவ சேவைகள் துறை, அவர்களுக்கு கீழ்கண்டவாறு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 25.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

| வ. எண். | பெயர்/பதவி திருவாளர்கள் | பணியில் சேர்ந்த நாள். | விடுப்பு துய்த்த விவரம் | பணிவரன் முறைப் படுத்த வேண்டிய நாள். | தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட நாள். | தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட வேண்டிய நாள். |
|---|---|---|---|---|---|---|
| 1. | டாக்டர்.A.S.சாகிதா பேகம், மருத்துவ அலுவலர் , | 26.04.2013 பி.ப | ஈ.வி. 06.01.2015 முதல் 20.01.2015 வரை – 15 நாட்கள். | 26.04.2013 பி.ப. | 10.05.2015 பி.ப. | 11.05.2015 மு.ப. |

**“பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

***********

**பொ.து.ந.க.எண்.ஈ2/2467/2021**

**தீர்மானஎண்.541/2021** **நாள்:03-07-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறை - டாக்டர். D. லிடியா, துணை பெருநகர மருத்துவ அலுவலர், மணலி மருத்துவ மண்டலம்-2 அவர்களுக்கு மருத்துவ அலுவலர் பதவியில் தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்தவராக அறிவித்து ஆணை வழங்கப்பட்டது - திருத்திய செயல்முறை ஆணை வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறையில் ஆணையர் அவர்களின் 03.10.2007 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, டாக்டர். D.லிடியா, அவர்கள் மருத்துவ அலுவலராக 06.10.2007 அன்று பணியில் சேர்ந்துள்ளார் என்றும், ஆணையர் அவர்களின் 29.01.2009 நாளிட்ட செயல்முறை ஆணையில் தனியருக்கு 06.10.2007 அன்று பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது என்றும், துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 23.09.2010 நாளிட்ட செயல்முறை ஆணையில் தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் 10.11.2009 அன்று தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது என்றும்,

மேலும், டாக்டர். D. லிடியா அவர்கள் 06.10.2007 அன்று மருத்துவ அலுவலராக பணி நியமனம் பெற்று, பின்பு 22.04.2020 அன்று மண்டல மருத்துவ அலுவலராக (துணை பெருநகர மருத்துவ அலுவலர்) பதவி உயர்வு பெற்று மணலி மருத்துவ மண்டலத்தில் பணிபுரிந்து வருகிறார் (ஊதியம் பெறுமிடம் மாதவரம் மருத்துவ மண்டலம்) என்றும்,

தனியரின் பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்ததில் தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்த பிறகு, தனியரின் பணிப்பதிவேட்டில் விடுப்புகள் குறித்த விவரங்கள் பதியப்பட்டுள்ளதால், தனியருக்கு 15.12.2009 முதல் தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்தவராக அறிவித்திட சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதி பெற்று திருத்திய செயல்முறை ஆணை வழங்க வேண்டி பெருநகர மருத்துவ அலுவலர் அவர்களின் 12.01.2021 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்து கோப்பு பெறப்பட்டது.

தனியரின் பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்ததில் தகுதிகாண் பருவ காலத்தில், தனியர் கீழ்கண்ட விடுப்புகள் துய்த்துள்ளார் என தெரிய வருகிறது.

| வ. எண். | விடுப்பு விவரங்கள் | விடுப்பு எடுத்த நாட்களின் விவரங்கள் | | மொத்த நாட்கள் |
|---|---|---|---|---|
| 1. | ஈட்டிய விடுப்பு | 26.05.2008 | 29.05.2008 | 4 |
| 2. | | 22.09.2008 | 26.09.208 | 5 |
| 3. | | 08.12.2008 | 16.12.2008 | 9 |
| 4. | ஊதியமில்லா விடுப்பு | 17.12.2008 | 01.01.2009 | 16 |
| 5. | மருத்துவ விடுப்பின் பேரில் ஊதியமில்லா விடுப்பு | 03.01.2009 | 10.01.2009 | 8 |
| 6. | ஊதியமில்லா விடுப்பு | 11.01.2009 | 08.02.2009 | 29 |
| மொத்த விடுப்பு நாட்கள் | | | | 71நாட்கள் |

நியமனக்குழு தீர்மான எண்302/2010, 20.09.2010 நாளிட்ட ஆணையில் வ.எண்.10ல் இடம்பெற்றுள்ள டாக்டர். D.லிடியா அவர்களுக்கு தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்ட நாள் 10.11.2009 என தவறுதலாக உள்ளதால் தனியருக்கு திருத்திய செயல்முறை ஆணை வழங்க, மீண்டும் மன்றத் தீர்மானம் பெறப்பட வேண்டியுள்ளது.

**பொ.து.ந.க.எண்.ஈ2/2467/2021**

எனவே, டாக்டர்.D.லிடியா, துணை பெருநகர மருத்துவ அலுவலர் அவர்களுக்கு மருத்துவ அலுவலர் பதவியில் கீழ்கண்டவாறு தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்தவராக அறிவித்து திருத்திய செயல்முறை ஆணை வழங்க சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 22.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் | ஏற்கனவே தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்ட நாள் | விடுப்புகளின் விவரம் | தற்போது தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட வேண்டிய நாள். |
|---|---|---|---|---|---|
| 1 | டாக்டர். D.லிடியா, மருத்துவ அலுவலர் | 06.10.2007 | 10.11.2009 | 71நாட்கள் | 15.12.2009 |

**"திருத்திய செயல்முறை ஆணை வழங்க, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

***********

**பொ.து.ந.க.எண்.இ6/5383/2021**

**தீர்மானஎண்.542/2021** **நாள்:03-07-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு. J.பிரபாகரன், வரிவசூலர், மண்டலம்-10 வரிவசூலர் பதவி உயர்வு அளிக்கப்பட்டது - தனக்கு சர்க்கரை நோய் மற்றும் இரத்தக்கொதிப்பு உள்ளதாகவும் உடல்நிலை சரியில்லாத காரணமாக வரிவசூலர் பதவியை தொடர இயலவில்லை என தெரிவித்தது - அடிப்படை சுகாதார பணியாளர் பதவிக்கு நிரந்தரமாக பதவி இறக்கம் செய்ய வேண்டியது - வரிவசூலர் பதவியிலிருந்து நிரந்தமாக பதவி இறக்கம் செய்து அடிப்படை சுகாதார பணியாளர் பதவியில் பணியமர்த்த அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, வகுப்பு 3 மற்றும் 4ம் நிலை பணிகளுக்கான திருத்தப்பட்ட சார்நிலைப்பணி துணை விதிகள் 2009, மன்றத்தீர்மான எண்.13/2015, நாள்.29.01.2015ன்படி வரிவசூலர் பதவி உயர்வுக்கு 1:2 என்ற விகிதாச்சாரத்தின் அடிப்படையில் 4-நபர்களின் பெயர்கள் அடங்கிய இறுதி தெரிவுப்பட்டியல் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் தீர்மான எண்.681/2020, நாள்.24.09.2020ன் மூலம் அங்கீகரிக்கப்பட்டதை தொடர்ந்து இறுதி தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.3ல் இடம் பெற்றிருந்த திரு. J.பிரபாகரன், அடிப்படை சுகாதார பணியாளர், மண்டலம்-12 அவர்களுக்கு வரிவசூலர் பதவி உயர்வு அளித்து, ஆணையர் அவர்களின் 06.10.2020 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி மண்டலம்-10ல் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார்.

தனியர் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு அளித்த 15.04.2021 நாளிட்ட கடிதத்தில், தனக்கு சர்க்கரை நோய் மற்றும் இரத்தக்கொதிப்பு உள்ளதாகவும் உடல்நிலை சரியில்லாத காரணமாக தான் வரிவசூலர் பணியினை தொடர இயலாத நிலையில் உள்ளதால், தன்னை வரிவசூலர் பதவியிலிருந்து அடிப்படை சுகாதார பணியாளர் பதவிக்கு நிரந்தரமாக பதவியிறக்கம் செய்யுமாறும் மீண்டும் வரிவசூலர் பதவி உயர்வு கோரமாட்டேன் என்றும் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

வரிவசூலர் பதவியிலிருந்து அடிப்படை சுகாதார பணியாளர் பதவிக்கு நிரந்தரமாக பதவி இறக்கம் செய்ய கோரி கடிதம் அளித்துள்ள திரு. J.பிரபாகரன், வரிவசூலர் அவர்கள், வரிவசூலர் பதவியில் சேர்ந்த விவரம் கீழ்கண்டவாறு அளிக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர்/பதவி/பணிபுரியும் மண்டலம் | வரிவசூலர் பதவியில் சேர்ந்த நாள். |
|---|---|---|
| 01, | திரு. J.பிரபாகரன்,<br>வரிவசூலர்,<br>மண்டலம்-10. | 13.10.2020 |

மேற்கண்ட தனியர் பணி விதிகளின்படி 1:2 (1-பதவி உயர்வு, 2-நேரடி நியமனம்) என்ற விகிதாச்சாரத்தின் அடிப்படையில், அடிப்படை சுகாதார பணியாளர் பதவியில் முதுநிலையின் அடிப்படையில் வரிவசூலர் பதவி உயர்வுக்குண்டான பணித்தகுதிகளைப் பெற்றிருந்ததால் ஆணையர் அவர்களின் 06.10.2020 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி வரிவசூலராக பதவி உயர்வு பெற்று 13.10.2020 முதல் மண்டலம்-10ல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். தனியரின் பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்ததில் தனியருக்கு வரிவசூலர் பதவியில் ஊதிய நிர்ணயம் செய்யப்படவில்லை எனவும், தனியர் மீது வரிவசூலர் பதவியில் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை எனவும் அறியப்பட்டது.

மேலும், Tamil Nadu Government Servants (Conditions of Service) Act 2016, Tamil Nadu Act No.14 of 2016 விதி 57 பிரிவு 2ல் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(2) Relinquishment of a right or privilege for a temporary period shall be accepted if it is made for a period of not less than three years, subject to the condition that after the expiry of the said period, the claim of the right or privilege relinquished will be with reference to the state of affairs that exist on the date of expiry of the period of relinquishment and without restoration of original seniority. If relinquishment of right or privilege is made permanently and is accepted, subsequent claim of the relinquished rights or privileges shall not be entertained.

மேற்கண்ட தனியரின் கோரிக்கை தமிழ்நாடு மாநில சார்நிலை பணியாளர்களுக்கான பணி விதிகள் 57(2)ன்படி வரிவசூலர் பதவியிலிருந்து நிரந்தரமாக பதவி இறக்கம் செய்யப்பட வேண்டும். மேலும், தனியர் பதவி உயர்வு வேண்டாம் என தெரிவித்துள்ளது நிரந்தரமாக நடைமுறையில் இருக்கும், இவரின் முதுநிலை அடிப்படை சுகாதார பணியாளர் பதவியில் சேர்ந்த நாளின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படும்.

எனவே, திரு.J.பிரபாகரன், வரிவசூலர், மண்டலம்-10 அவர்கள் அளித்த கோரிக்கையின் அடிப்படையில் வரிவசூலர் பதவியிலிருந்து நிரந்தமாக பதவி இறக்கம் செய்து அடிப்படை சுகாதார பணியாளர் பதவியில் பணியமர்த்த சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 27.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“வரிவசூலர் பதவியிலிருந்து நிரந்தமாக பதவி இறக்கம் செய்து அடிப்படை சுகாதார பணியாளர் பதவியில் பணியமர்த்த, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**பொ.து.ந.க.எண்.இ6/23234/2019**

**தீர்மானஎண்.543/2021** **நாள்:03-07-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.T.சுரேஷ், ஓட்டுநர் மாற்றுப்பணி அடிப்படையில் துப்புரவு ஆய்வாளர், பகுதி-38, கோட்டம்-182, மண்டலம்-13 - தனது கடமையை சரிவர மேற்கொள்ளாதது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி வகுப்பு 3ஆம் மற்றும் 4ஆம் நிலைப்பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(1)ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தி விளக்கம் கோரப்பட்டது - இறுதி ஆணையாக தனியரின் ஊதிய உயர்வினை ஓர் ஆண்டிற்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து ஆணையிடப்பட்டது - தனியரின் மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வழங்குதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பகுதி-38, கோட்டம்-182ல் மாற்றுப்பணி அடிப்படையில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்து வரும் திரு.T. சுரேஷ் ஓட்டுநர் அவர்களை, வட்டார துணை ஆணையர்(தெற்கு) அவர்கள் அறிவுறுத்தியும் மேதகு ஆளுநர் அவர்கள் செல்லும் வழியான கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள குப்பை தொட்டி மற்றும் குப்பை தொட்டியை சுற்றியுள்ள இடங்களில் சுத்தம் செய்யாமலும் இருந்தது தொடர்பாக, தனியர் மீது பெருநகர சென்னை மாநகராட்சி வகுப்பு 3ஆம் மற்றும் 4ஆம் நிலைப்பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 1983, 9(1)ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தி, 07.09.2018 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டு விளக்கம் கோரப்பட்டது. தனியர் 19.12.2018 நாளிட்ட விளக்கக்கடிதத்தில் 9(1)ன் கீழ் வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

**குற்றச்சாட்டு எண்.1**

திரு.T. சுரேஷ், துப்புரவு ஆய்வாளர், கோட்டம்-182 எனும் நீங்கள் வட்டார துணை ஆணையர்(தெற்கு) அவர்கள் அறிவுறுத்தியும், மேதகு ஆளுநர் அவர்கள் செல்லும் வழியான கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள குப்பை தொட்டி மற்றும் குப்பை தொட்டி சுற்றியுள்ள இடங்களில் சுத்தம் செய்யாமல் இருந்துள்ளீர்கள் *(for not cleaning bins and bin surrounding in EC R even after instructions)*

**குற்றச்சாட்டு எண்.1க்கு தனியரின் விளக்கம் :**

உயர்திரு வட்டார துணை ஆணையர்(தெற்கு) அவர்களின் அறிவுறுத்தலின்படி தினசரி கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள குப்பை தொட்டிகளில் உள்ள குப்பைகளை காலை, மதியம், இரவு என மூன்று வேலைகளும் சுத்தம் செய்து வருகிறேன்.

**குற்றச்சாட்டு எண்.2**

நீங்கள் உயர் அலுவலர்களின் அறிவுரைகளை உதாசீனப்படுத்தி மேதகு ஆளுநர் அவர்கள் செல்லும் வழியான கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள குப்பை தொட்டி மற்றும் குப்பை தொட்டி சுற்றியுள்ள இடங்களில் சுத்தம் செய்யாமல் இருந்துள்ளதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு தொற்று நோய் பரவுவதற்கு காரணமாகவும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்பட காரணமாக இருந்துள்ளீர்.

**குற்றச்சாட்டு எண்.2க்கு தனியரின் விளக்கம் :**

நான் உயர் அதிகாரிகளின் அறிவுரைகளை ஏற்று அதன்படி தினசரி பணிபுரிந்து வருகின்றேன். கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள குப்பை தொட்டிகளில் உள்ள குப்பைகளை காம்பாக்டர் வாகனம் மூலம் அகற்றி சுத்தம் செய்து சுண்ணாம்பு தெளிக்கப்பட்டது, இருப்பினும் மேதகு ஆளுநர் அவர்கள் வரும்போது காம்பாக்டர் வாகனம் டம்பிங் செய்ய சென்று விட்டது. அதுமட்டுமில்லாமல் அப்பகுதி வணிகப்பகுதி என்பதால் அங்குள்ள வணிகர்கள் ஒரு சில தொட்டிகளில் குப்பைகளை கொட்டியுள்ளனர். அதையும் காம்பாக்டர் வாகனம் கொண்டு அன்றைய தினமே சுத்தம் செய்யப்பட்டது.

**குற்றச்சாட்டு எண்.3**

நீங்கள் உங்களுக்கு பணிக்கப்பட்ட பணியினை சரிவர செய்யாமல் இருந்து பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களின் நடத்தை விதி 20ஐ மீறியுள்ளீர்கள்.

<u>பொ.து.ந.க.எண்.இ6/23234/2019</u>

<u>குற்றச்சாட்டு எண்.3க்கு தனியரின் விளக்கம் :</u>

நான் எனது பணியை தினமும் கண்ணும் கருத்துமாக தொய்வு நிலை ஏற்படாமல் கவனித்து வருவதுடன், என்னால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு எந்தவித அவப்பெயரும் ஏற்படாமல் இருக்க கடுமையாக உழைத்து வருகிறேன் என்பதை தங்களின் மேலான பார்வைக்கு தெரியப்படுத்த கடமைபட்டுள்ளேன் எனவும், இனி ஒருமுறை இதுபோன்ற தவறுகள் நடக்காமல் இருக்க நான் இன்னும் கூடுதலாக கவனம் செலுத்தி பணியாற்றுவேன் என குறிப்பிட்டுள்ளார்.

இதனை தொடர்ந்து 16.02.2019 நாளிட்ட வட்டார துணை ஆணையர்(தெற்கு) அவர்களின் செயல்முறை ஆணையில், இந்நேர்வு தொடர்பாக திரு.T. சுரேஷ், ஓட்டுநர் மாற்றுப்பணி துப்புரவு ஆய்வாளர் என்பவர் மீது சுமத்தப்பட்டுள்ள துணை விதி 9(1)ன் கீழ் குற்றச்சாட்டிற்கு தனியர் அளித்துள்ள விளக்கம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. தனியர் அளித்துள்ள விளக்கம் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகயில்லை என்பதால் தனியருக்கு தண்டணையாக **<u>"ஒரு வருடம் ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து"</u>** ஆணை பிறப்பிக்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியருக்கு தண்டனையாக**"ஒரு வருடம் ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து"** ஆணை பிறப்பிக்கப்பட்ட செயல்முறை ஆணையினை பெற்றுக் கொண்ட தனியர் தனக்கு வழங்கப்பட்ட தண்டனையை ரத்து செய்ய கோரி, 25.03.2019 நாளிட்ட மேல்முறையீட்டு மனுவினை சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு அளித்துள்ளார்.

தனியர் தனது மேல்முறையீட்டு மனுவில், தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு தன் விளக்கங்களை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

<u>குற்றச்சாட்டு-1க்கான தன் விளக்கம் :</u>

வட்டார துணை ஆணையர்(தெற்கு) அவர்களின் அறிவுறுத்தலின்படி தினசரி கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள குப்பை தொட்டிகளில் உள்ள குப்பை கழிவுகள் ராம்கி நிறுவன ஒப்பந்ததாரரது இலகு ரக வாகனம் வாயிலாக காலை, மதியம் மற்றும் இரவு வேளைகளில் சுத்தம் செய்து தூய்மை பணி நடைபெற்று வருகிறது. மேதகு ஆளுநர் அவர்கள் வருகை தருவாயில் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள குப்பை தொட்டிகளில் குப்பை கழிவுகள் அகற்றப்பட்டு இலகுரக வாகனம் குப்பை கழிவுகள் அகற்றிடுவதற்கு டம்பிங் யார்டு சென்று விட்டது மட்டுமின்றி அப்பகுதி வணிகப்பகுதி ஆதலால் அங்குள்ள வணிகர்கள் சில தொட்டிகளில் குப்பை கழிவுகளை இலகு ரக வாகனம் சென்றிட்ட பிறகு குப்கைகளை கொட்டியுள்ளனர் எனவும், உடன் அவற்றினை இலகு ரக வாகனம் வாயிலாக அன்றைய தினம் காலை வேளையில் சுத்தம் செய்து விட்டு குப்பை தொட்டிகள் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் சுண்ணாம்பு, கிருமி நாசினி தெளித்து தூய்மை பணி நடைபெற்றது என பணிந்து தெரிவிப்பது மட்டுமில்லாமல், தூய்மை பணி நடைபெற்றதற்குரிய புகைப்படங்களை மண்டல குழுவிற்கு "Whats App" மூலம் உதவி செயற்பொறியாளர், செயற்பொறியாளர் மற்றும் மண்டல அலுவலருக்கு அன்றைய தினம் அனுதினமும் தகவல் பரிமாற்றம் அளித்துள்ளேன் என தெரிவித்துள்ளார்.

<u>குற்றச்சாட்டு-2க்கான தன் விளக்கம் :</u>

கிழக்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ள குப்பை தொட்டிகள் யாவும் முறையே குப்பை கழிவுகள் அகற்றப்பட்டு தினசரி சுண்ணாம்பு கிருமி நாசினி தெளித்து தூய்மை பணி மூன்று வேளைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன். மேதகு ஆளுநர் வருகை புரிந்திட்ட சமயத்தில் இலகு ரக வாகனம் குப்பை கழிவுகளை அகற்றிட டம்பிங் யார்டு சென்றிட்ட காரணத்தினாலும், அப்பகுதி வணிகப்பகுதியாக அமைந்து அங்குள்ள வணிகர்கள் குப்பை கழிவுகளை குப்பை தொட்டிகளிலிருந்து அகற்றிட்ட பின்னர் குப்பை கழிவுகளை சில தொட்டிகளில் கொட்டியதால் தான் இந்நிகழ்வில் பின்னடைவு ஏற்பட்டது என பணிந்து தெரிவித்து தினசரி மூன்று வேளைகளிலும் குப்பை தொட்டிகள் சுத்தம் செய்து பராமரிப்பு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவித்து இனிவரும் காலத்தில் தவறுகள் நிகழாவண்ணம் பணியினை கடமையுணர்வோடு செய்து வருகிறேன் என

உறுதி கூறுகின்றேன். மேலும், கோட்டம்-181 மற்றும் 182ல் எவ்வித புகார்களும் எழாத வகையில் எனது பணியினை செய்து வருகின்றேன். கோட்டங்களில் சுகாதார சீர்கேடு ஏற்படா வண்ணம் தினசரி தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என பணிந்து கூறுகின்றேன். நான் ஒரு போதும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்பட காரணமாக இருந்திட்டதில்லையென பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

**குற்றச்சாட்டு-3க்கான தன் விளக்கம் :**

பெருநகர சென்னை மாநகராட்சியில் நான் பணி நியமனம் செய்யப்பட்டு நான் வகித்திட்ட பதவி பணிகளில் எவ்வித புகார்களும் எழா வண்ணம் எனது பணியினை செவ்வன செய்து வருகின்றேன் எனவும், நான் ஒரு போதும் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களது நடத்தை விதிகளை மீறியதில்லை என பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தனியர் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு அளித்த மேல்முறையீட்டு மனுவில், மேற்குறிப்பிடப்பட்டுள்ள தனது விளக்கங்களை மறு பரிசீலனை செய்து கனிவுடனும் கருணையுடனும் ஏற்று தனது எதிர்கால பதவி பணி நலனை கருத்தில் கொண்டு தனக்கு தண்டனையாக **"ஒரு வருடம் ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து"** வழங்கப்பட்ட ஆணையினை ரத்து செய்திடுமாறும், இனிஎதிர்வரும் காலத்தில் தவறுகள் நிகழாவண்ணம் தனது பணியினை செவ்வன செய்திடுவேன் எனவும் தெரிவித்துள்ளார்.

ஆகவே, திரு.T. சுரேஷ், ஓட்டுநர் மாற்றுப்பணி அடிப்படையில் துப்புரவு ஆய்வாளர், கோட்டம்-182, பகுதி-38, மண்டலம்-13 அவர்களின் மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வேண்டி சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களுக்கு சமர்ப்பித்த முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 22.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"Earlier punishment confirmed"என சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் ஆணை அளிக்கப்பட்டது".**

*******

**பொ.து.ந.க.எண்.இ6/23233/2019**

**தீர்மானஎண்.544/2021** **நாள்:03-07-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை திரு.A. இளஞ்செழியன், ஓட்டுநர் (மாற்றுப்பணி அடிப்படையில் துப்புரவு ஆய்வாளர்), பகுதி-40A, கோட்டம்-177, மண்டலம்-13 - தனது கடமையை சரிவர மேற்கொள்ளாதது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி வகுப்பு 3ஆம் மற்றும் 4ஆம் நிலைப்பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(1)ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தி விளக்கம் கோரப்பட்டது - இறுதி ஆணையாக தனியரின் ஊதிய உயர்வினை ஓர் ஆண்டிற்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து ஆணையிடப்பட்டது - தனியரின் மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வழங்குதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பகுதி-40A, கோட்டம்-177ல் மாற்றுப்பணி அடிப்படையில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்து வரும் திரு.A. இளஞ்செழியன் ஓட்டுநர் அவர்களை, கோட்டம்-177, நேரு நகரில் மூன்று சக்கர மிதிவண்டி மூலம் வீடு வீடாக சென்று குப்பைகள் சேகரிப்பதை கண்காணிக்காமல் இருப்பது கண்டறியப்பட்டது. இது தொடர்பாக, தனியர் மீது பெருநகர சென்னை மாநகராட்சி வகுப்பு 3ஆம் மற்றும் 4ஆம் நிலைப்பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 1983, 9(1)ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தி, 26.10.2018 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டு விளக்கம் கோரப்பட்டது. தனியர் 19.11.2018 நாளிட்ட விளக்கக்கடிதத்தில் 9(1)ன் கீழ்வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

**குற்றச்சாட்டு எண்.1**

திரு.A. இளஞ்செழியன், துப்புரவு ஆய்வாளர், கோட்டம்-177 எனும் நீங்கள் நேரு நகரில் மூன்று சக்கர மிதிவண்டிகள் மூலம் வீடு வீடாக சென்று குப்பைகள் சேகரிப்பதை கண்காணிக்காமல் இருந்துள்ளீர்கள். மேலும், அது தொடர்பாக தவறாக தினசரி அறிக்கை அளித்துள்ளீர்கள்.

**குற்றச்சாட்டு எண்.1க்கு தனியரின் விளக்கம் :**

கோட்டம்-177க்குட்பட்ட நேரு நகர் பகுதியில் அதிகப்படியான குடியிருப்புகள் உள்ளதால் அங்கு இலகுரக வாகனம் மூலமாக குப்பை சேகரிக்கும் பணி நடைபெறுகிறது. இதை நான் அங்கு சென்று ஓட்டுநரிடமும் துப்புரவு பணியாளரிடமும் அனைத்து வீடுகளிலும் குப்பை சேகரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தி வருகிறேன்.

**குற்றச்சாட்டு எண்.2**

நீங்கள், மூன்று சக்கர மிதிவண்டிகள் மூலம் வீடு வீடாக சென்று குப்பைகள் சேகரிப்பதை கண்காணிக்காமல் இருந்துள்ளதால், அங்கு வசிக்கும் பொது மக்கள் தன் வீட்டு குப்பைகளை கண்ட இடத்தில் கொட்டுவதற்கும், சுகாதார சீர்கேடு ஏற்படுவதற்கும் காரணமாக இருந்துள்ளீர்கள்.

**குற்றச்சாட்டு எண்.2க்கு தனியரின் விளக்கம் :**

இலகுரக வாகனம் ஓட்டுநர் மற்றும் துப்புரவு பணியாளர்கள் மற்றும் தூய்மை இந்தியா பரப்புரையாளர் மூலமும் பொது மக்களுக்கு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மண்டல அலுவலர்-13 அவர்கள் நடத்திய ஆய்வு கூட்டத்தில் அறிவுரை பெறப்பட்டுள்ளது.

**குற்றச்சாட்டு எண்.3**

உங்களுக்கு பணிக்கப்பட்ட பணியினை சரிவர செய்யாமல் பணியில் மெத்தனமாக இருந்துள்ளதால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்பட காரணமாக இருந்துள்ளீர்கள்.

**குற்றச்சாட்டு எண்.3க்கு தனியரின் விளக்கம் :**

எனக்கு பணிக்கப்பட்ட பணியை தவறாமல் செய்து வருகிறேன் இது தவிர்த்து தினசரி 5 முதல் 10 காலி மனைகள் சுத்தம் செய்து வருகிறேன். மேலும், 178 வார்டு பணிகளையும் கவனித்து வருகிறேன். இதனால் சில சிரமங்கள் உள்ளது. இனி இது போன்ற தவறு என்னால் சென்னை மாநகராட்சிக்கு ஏற்படாமல் பார்த்துக் கொள்வேன் என்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பொ.து.ந.க.எண்.இ6/ 23233/2019**

**குற்றச்சாட்டு எண்.4**

மேற்கண்ட செயலின் மூலம் நீங்கள் பெரு நகர சென்னை மாநகராட்சி பணியாளர்களின் நடத்தை விதி 20ஐ மீறியுள்ளீர்கள்.

**குற்றச்சாட்டு எண்.4க்கு தனியரின் விளக்கம்**

நான் துப்புரவு ஆய்வளராக பணியில் சேர்ந்த நாள் முதல் இது வரை எந்தவித புகாருமின்றி என் பணியை செவ்வனே பணிபுரிந்து வருகிறேன் என்பதையும், சென்னை மாநகராட்சி பணியாளர்கள் நடத்தை விதி 20ஐ மீறி நடக்கவில்லை. மேலும், எனது குறிப்பாணையினை ரத்து செய்யும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனை தொடர்ந்து 16.02.2019 நாளிட்ட வட்டார துணை ஆணையர்(தெற்கு) அவர்களின் செயல்முறை ஆணையில், இந்நேர்வு தொடர்பாக திரு.A. இளஞ்செழியன், ஓட்டுநர் (மாற்றுப்பணி துப்புரவு ஆய்வாளர்) கோட்டம்-177 என்பவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு, குற்றச்சாட்டிற்கு தனியர் அளித்துள்ள விளக்கம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. தனியர் அளித்துள்ள விளக்கம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகயில்லை என்பதால் தனியருக்கு தண்டனையாக **"ஒரு வருடம் ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து"** ஆணை பிறப்பிக்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியருக்கு தண்டனையாக**"ஒரு வருடம் ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து"** ஆணை பிறப்பிக்கப்பட்ட செயல்முறை ஆணையினை பெற்றுக் கொண்ட தனியர் தனக்கு வழங்கப்பட்ட தண்டனையை ரத்து செய்ய கோரி, 25.03.2019 நாளிட்ட மேல்முறையீட்டு மனுவினை சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு அளித்துள்ளார்.

தனியர் தனது மேல்முறையீட்டு மனுவில், தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு தன் விளக்கங்களை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

**குற்றச்சாட்டு-1க்கான தன் விளக்கம் :**

கோட்டம்-177க்குட்பட்ட நேரு நகர் பகுதியில் சுமார் 2000க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. அவற்றில் சேகரமாகும் குப்பை கழிவுகளை போதிய மூன்று சக்கர மிதிவண்டிகள் வாயிலாக அகற்றிட தினமும் நடவடிக்கை மேற்கொள்ளும் "ராம்கி" ஒப்பந்ததார நிறுவனத்தார் வாயிலாக இலகுரக வாகனம் மூலம் தினமும் குப்பை கழிவுகள் அகற்றிடும் தூய்மை பணி நடைபெற்று வருகிறது. தூய்மை பணி நடைபெறுவதனை அனுதினமும் பார்வையிட்டு எங்கு குப்பை கழிவுகள் அதிகமுள்ளதோ தினமும் சேகரித்திட சொல்லி மூன்று சக்கர மிதி வண்டி பணியாளர்களுக்கும், இலகுரக வாகன பணியாளர்களுக்கும், ராம்கி நிறுவன அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டு அன்றாட தினசரி அறிக்கைகளை உதவி செயற்பொறியாளர் மூலம் மண்டல அலுவலகத்திற்கு உதவி செயற்பொறியாளர் ஆய்வு மேற்கொண்ட நிலையில் அறிக்கை முறையாக சமர்ப்பிக்கப்பட்டது.

**குற்றச்சாட்டு-2க்கான தன் விளக்கம் :**

நேரு நகர் பகுதி அமைந்துள்ள இடம் கோட்டம்-177ல் இருப்பினும் கோட்டம்-174ல் வசிக்கும் பொது மக்கள் வேளச்சேரி செல்வதற்காக அவ்வழியே பயணித்திடுவார்கள் என பணிந்து தெரிவிக்கப்படுகிறது. மேலும், கோட்டம்-177 தூய்மை பணியாளர்கள், இலகுரக வாகன பணியாளர்கள் மற்றும் தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல பணியாளர்கள் வாயிலாக முறையே தூய்மை இந்தியா திட்ட பணி மற்றும் குப்பை கழிவுகளை முறையே மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து தூய்மை பணியில் ஈடுபடுத்தும் குப்பை சேகரிக்கும் பணியாளர்களிடம் வழங்கிட பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே நேரு நகர் பகுதியில் குப்பை சேகரிக்கும் பணி முறையே நடைபெற்று வருகிறது எனவும் பணிந்து தெரிவிக்கப்படுகிறது. கோட்டம்-174க்குட்பட்ட பகுதி வாழ் மக்கள் வேளச்சேரி செல்வதற்காக நேரு நகர் பகுதியினை பயன்படுத்தி வருவதால் ஆங்கே இரு சக்கர வாகனம் மூலம் செல்லும் தருவாயில் மதியழகன் தெருவில் ராஜ்பவன் கால்வாய் ஓரத்தில் குப்பை கழிவுகளை வீசிவிட்டு சென்று விடுகின்றனர். நேரு நகர் பகுதியில் குப்பை கழிவுகள் அகற்றும் பணி காலை 10.00 மணியளவில் முழுவதிலும் முடிந்து விட்ட போதிலும் மாலை 3.30 மணியளவில் இரண்டாம் கட்ட தூய்மை பணி நடைபெறும் தருவாயில் குப்பை கழிவுகள் முழுவதும்அகற்றப்பட்டு வருகிறது என பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

**பொ.து.ந.க.எண்.இ6/ 23233/2019**

**குற்றச்சாட்டு-3க்கான தன் விளக்கம் :**

பெருநகர சென்னை மாநகராட்சியில் தான் கடந்த 21.11.2019 அன்று துப்புரவு ஆய்வாளர்(பொறுப்பு) பதவி பணியமர்வு செய்திட்டு இந்நாள் வரை எனது பதவி பணிதனில் எவ்வித புகார்களும் எழாத வகையில் எனது பணியினை செவ்வன சென்து வருகின்றேன் எனவும், கோட்டம்-177ல் துப்புரவு ஆய்வாளர் பதவி வகித்திட்ட போதிலும் கோட்டம்-178ன் கூடுதல் பொறுப்பினையும் வகித்து வருகின்றேன். இவ்விரு கோட்டங்களிலும் அன்றாடம் அத்தனை தூய்மை பணிகளையும் கள ஆய்வு மேற்கொண்டு தூய்மை பணிகளில் தேக்க நிலை ஏற்படாவண்ணம் எனது பணியினை செய்து வருகின்றேன். கோட்டம்-177 மற்றும் கோட்டம்-178ல் பொது மக்கள் புகார்கள் ஏழாவண்ணம் எனது பணியினை செவ்வன செய்து வருவது மட்டுமன்றி, பெருநகர சென்னை மாநகராட்சியில் நான் நியமனம் செய்யப்பட்ட நாள் முதல் இன்று வரை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்பட காரணமாக இருந்ததில்லை என பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு-4க்கான தன் விளக்கம் :**

பெருநகர சென்னை மாநகராட்சியில் தான் பணி நியமனம் செய்யப்பட்டு நான் வகித்திட்ட பதவி பணிகளில் எவ்வித புகார்களும் ஏழாதவண்ணம் எனது பணியினை செவ்வன செய்து வருவது மட்டுமின்றி நான் ஒரு போதும் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் நடத்தை விதிகளை மீறியதில்லையென பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தனியர் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு அளித்த மேல்முறையீட்டு மனுவில், மேற்குறிப்பிடப்பட்டுள்ள தனது விளக்கங்களை மறு பரிசீலனை செய்து கனிவுடனும் கருணையுடனும் ஏற்று தனது எதிர்கால பதவி பணி நலனை கருத்தில் கொண்டு தனக்கு தண்டனையாக ஒரு வருடம் ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து" வழங்கப்பட்ட ஆணையினை ரத்து செய்திடுமாறும், இனிஎதிர்வரும் காலத்தில் தவறுகள் நிகழாவண்ணம் தனது பணியினை செவ்வன செய்திடுவேன் எனவும் தெரிவித்துள்ளார்.

ஆகவே, திரு.A. இளஞ்செழியன், ஒட்டுநர், மாற்றுப்பணி அடிப்படையில் துப்புரவு ஆய்வாளர், கோட்டம்-177, பகுதி-40A, மண்டலம்-13 அவர்களின் மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வேண்டி சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களுக்கு சமர்ப்பித்த முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 22.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"Censure Imposed" என சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி ஆணை அளிக்கப்பட்டது".**

*******

**பொ.து.ந.க.எண்.ஈ13/40735/2018**

**தீர்மானஎண்.545/2021** **நாள்:03-07-2021**

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை - மண்டலம்-10, கோட்டம்-128ல் பணிபுரிந்த திரு.ஆர்.மனோகரன், உதவி பொறியாளர் 16.11.2018 அன்று துணை ஆணையர் (பணிகள்) அவர்கள் களஆய்வு மேற்கொண்ட போது, கண்டறியப்பட்ட குறைபாடுகள் காரணமாக தனியர் மீது பெருநகர சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4 ஆம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 1983ஆம் ஆண்டு துணை விதி 9(1)ன் கீழ் காரணம் கேட்கும் குறிப்பாணை வழங்கப்பட்டு - விளக்கம் பெறப்பட்டது – இறுதி ஆணையாக 'கண்டனம்' தண்டனை வழங்கப்பட்டது – தண்டனையை எதிர்த்து அளித்துள்ள மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வழங்குதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10, கோட்டம்-128ல் 16.11.2018 அன்று துணை ஆணையர் (பணிகள்) அவர்கள் களஆய்வு மேற்கொண்ட போது கண்டறியப்பட்ட குறைபாடுகள் காரணமாக திரு.ஆர்.மனோகரன், உதவி பொறியாளர் அவர்கள் மீது பெருநகர சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ஆம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 1983 ஆம் ஆண்டு துணைவிதி 9(1)ன் கீழ் காரணம் கேட்கும் குறிப்பாணை வழங்கப்பட்டது, தனியர் விளக்கம் சமர்ப்பித்ததை கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு, தனியர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபணமானதால், துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் 09.03.2020 நாளிட்ட செயல் முறை ஆணையில் தனியருக்கு **"கண்டனம்"** தண்டனை வழங்கப்பட்டது.

மேற்படி, இறுதியாணை பெற்றுக்கொண்ட தனியர், 21.05.2020 நாளிட்ட தனது மேல் முறையீட்டு மனுவினை சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களுக்கு கீழ்கண்டுள்ளவாறு சமர்ப்பித்துள்ளார்.

**Charge No.1**

During the inspection of the senior officials at Dn-128, Zone-X, on 16.11.2018, it is noticed that, at Tharachand Park the sitting bench, children play apparatus were found broken and pruning of plants was also not done. It has been instructed to remove and replace/rectify the same. But, you have failed to comply the instructions of the senior officials, even after the lapse of two days, which clearly shows your disobedience in carrying out the instructions of the senior officials.

**Charge No.2**

The senior officials have also instructed to remove the debris at various locations in div-128, Zone-X, (i.e) at Swarnambika Koil Street, Pachaiamman Koil Street. But, you have not taken any steps to remove the debris, even after the lapse of two days, which clearly shows your disobedience in carrying out the instructions of the senior officials.

**Charge No.3**

That, for the non-compliance of the instructions of the senior officials clearly shows your lethargic attitudes in performing the official duties in the capacity as Division Engineer.

**Charge No.4**

That, you have violated the rule 20 of the Madras Corporation Servants (Class III & IV) Conduct Bye Laws 1983.

**"குற்றஞ்சாட்டு எண்.1 முதல் 4க்கு தனியரின் மேல்முறையீட்டு மனுவின் விளக்கம்**

I submit that, I have not used the word that I accept the charges anywhere in my explanations to the show cause notice issued to me. Hence, the punishment awarded to me on the presumption that I accept the charges is not correct.

That apart, in the fourth charge added in the proceedings awarding the punishment, that you have failed to issue the lock and seal notice to the owner of the building at Door No.Ah-112, 4th street, Anna Nagar, Chennai-40 even after the completion of one month for de-sealing as ordered by Government, in the Government Lr.No.3948/UD-VI(2)/2017-8 Housing and Urban Development Department, dated. 21.04.2017 has not been actually mentioned as a charge in the Show Cause Notice requiring the appellant to show cause. Therefore I did not show any reason or explanation to the above charge. Moreover, the above building does not fall in the Division 128, for which the appellant is the Junior Engineer. Hence, the punishment awarded to the appellant is not correct.

I, further submit that, the disciplinary authority did not mention any reason for rejecting the explanations. I have been obedient to my higher officers and without any evidence or proof concluded that the charges are proved.

And with all that, the Disciplinary Authority did not conduct in house inquiry of the charges framed against me by appointing inquiry officer. Had it been conducted the appellant would have the opportunity of personal hearing and would have convinced the inquiry officer that the charges are neither proved nor substantiated. Hence, there is absence of natural justice and as a result, the entire proceedings of the Disciplinary Authority has become ultra vires, null and void and un-enforceable and liable to be set aside.

In the above circumstances, I respectfully prays that the Respectful Special Officer-in-Council, Greater Chennai Corporation, the appellate authority, may be pleased to consider this appeal and set aside and quash the orders of the Deputy Commissioner (Works), Greater Chennai Corporation, the Disciplinary Authority, awarding the punishment of Censure, in the Proceedings of the Deputy Commissioner (Works), vide G.D.C.No.E13/ 40735/2018, Dt. 09.03.2020 and pass such further or other order as the Special Officer-in-Council, the appellant authority, may deem fit and proper in the circumstances of the case and render justice.

The appellant further prays that the Special Officer – in –Council may be pleased to pass interlocutory orders, staying the operation of the orders of the Deputy Commissioner (Works), appealed herein, pending disposal of the appeal to meet the ends of justice."

எனவே, திரு.ஆர்.மனோகரன், உதவி பொறியாளர், கோட்டம்-128, மண்டலம்-10 (தற்போது கோட்டம்-143, மண்டலம்-11) அவர்கள், வகுப்பு 3ஐ சார்ந்த பணியாளர் என்பதால் தனியர் சமர்ப்பித்துள்ள மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வேண்டி சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களுக்கு சமர்ப்பித்த முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 27.06.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"Appeal is rejected" என சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் ஆணை அளிக்கப்பட்டது".**

*******

**ம.அ.5/சு.து/சு2/ந.க.எண். 1459/2021**

**தீர்மானஎண்.546/2021** **நாள்:03-07-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 5 சுகாதாரப் பிரிவு - கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு 744 தற்காலிகமாக பணியாளர்கள் 01.06.2021 முதல் 31.07.2021 வரை 61 நாட்களுக்கு நியமனம் செய்து ஊதியம் வழங்க அனுமதி.**

24.03.2021 அன்று நடைபெற்ற ஆணையர் அவர்களின் கலந்தாய்வு கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியில் கொரோனா நோய் தடுப்பு பணிக்காக வீடு வீடாக சென்று கணக்கெடுப்பு செய்ய பணியாளர்களை (FEVER SURVEY WORKERS) மாத ஊதிய அடிப்படையில் ரூ.12,121/- என நிர்ணயம் செய்து 61 நாட்களுக்கு (01.06.2021 முதல் 31.07.2021 வரை) பணியமர்த்திக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் மண்டலம் - 5 க்குட்பட்ட கோட்டம்- 49 முதல் 63 முடிய அனைத்து தெருக்களிலும் வீடு வீடாக சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் போன்ற அறிகுறிகள் ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும், மேலும், கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளிலுள்ள வீடுகளில் பொருளாதாரம் சுய விவரம் குறித்த கண்கெடுப்பு செய்ய, 744 பணியாளர்களை (FEVER SURVEY WORKERS) 61 நாட்களுக்கு (01.06.2021 முதல் 31.07.2021 வரை) நியமிக்க வேண்டியுள்ளது. அதன் விவரம் கோட்ட வாரியாக கீழ்கண்டவாறு

| வ.எண். | கோட்டம் | தற்போது தேவைப்படும் FSW பணியாளர்கள் 01.06.2021 முதல் 31.07.2021 வரை |
|---|---|---|
| 1 | 49 | **41** |
| 2 | 50 | **62** |
| 3 | 51 | **35** |
| 4 | 52 | **42** |
| 5 | 53 | **49** |
| 6 | 54 | **48** |
| 7 | 55 | **50** |
| 8 | 56 | **45** |
| 9 | 57 | **58** |
| 10 | 58 | **85** |
| 11 | 59 | **44** |
| 12 | 60 | **48** |
| 13 | 61 | **60** |
| 14 | 62 | **37** |
| 15 | 63 | **40** |
| **மொத்தம்** | | **744** |

எனவே, மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில்,

1. மண்டலம் - 5 ல் கொரோனா நோய் தடுப்பு பணிக்காக கோட்டம் - 49 முதல் 63 முடிய அனைத்து தெருக்களுக்கும் வீடு வீடாக சென்று காய்ச்சல், இருமல், சளி, தொண்டை எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் போன்ற அறிகுறிகள் ஏதேனும் உள்ளதா என கணக்கெடுக்கவும் மேலும், கொரோனா கட்டுப்பாட்டு பகுதிகளிலும் வீடுகளில் பொருளாதாரம் சுய விவரம் குறித்த கணக்கெடுப்பு செய்ய 744 பணியாளர்களை (FEVER SURVEY WORKERS), 01.06.2021 முதல் 31.07.2021 வரை இரண்டு மாத காலத்திற்கு பணியமர்த்த அனுமதி வேண்டியும்,

2. பணியாளர்களுக்கு (FEVER SURVEY WORKERS) ஊதியமாக ஒரு நபருக்கு நாளொன்றுக்கு 391 X 744 X 61 = ரூ.1,77,45,144/- (ரூபாய் ஒரு கோடியே எழுபத்து ஏழு லட்சத்து நற்பத்தி ஐந்தாயிரத்து நூற்று நாற்பத்து நான்கு மட்டும்) வழங்கவும்,

3. இச்செலவின தொகையான கணக்கு தலைப்பு 20-21-07, கணக்கு குறியீடு எண்.230-701-203 நிதியின் கீழ் மொத்த தொகை **391x744x61=** ரூ. 1,77,45,144/- நிதி ஒதுக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 01.07.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**பொ.து.ந.க.எண்.இ7/14306/2021 &**
**ம.சே.து.ந.க.எண்.எப்5/0631/2021**

**தீர்மானஎண்.547/2021** **நாள்:03-07-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறை - திருமதி. வி. சித்ரா, நகர சுகாதார செவிலியர், அத்திப்பட்டு நகர ஆரம்ப சுகாதார நிலையம், அம்பத்தூர் மருத்துவ மண்டலம் - 7 (ஊதியம் திரு.வி.க.நகர் மருத்துவ மண்டலம் - 6) அவர்கள் 03.07.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறை, அம்பத்தூர் மருத்துவ மண்டலம், அத்திப்பட்டு நகர ஆரம்ப சுகாதார நிலையம், (ஊதியம் திரு.வி.க.நகர் மருத்துவ மண்டலம் - 6) நகர சுகாதார செவிலியராக பணிபுரியும் திருமதி. வி. சித்ரா அவர்கள் தனக்கும், தன் கணவருக்கும் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் தன்னால் தொடர்ந்து பணியாற்ற இயலவில்லை எனத் தெரிவித்து 05.04.2021 நாளிட்ட கடிதத்தினை ஏற்று தனக்கு தன் விருப்ப ஓய்வு வேண்டி *05.04.2021* நாளிட்ட சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களுக்கு அளித்த மனுவின் மூலம் கோரியுள்ளார்.

திருமதி. வி. சித்ரா அவர்கள் *08.11.1990* அன்று நகர சுகாதார செவிலியராக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். இவருக்கு நகர சுகாதார செவிலியர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தியும், தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் இல்லை. தனியரது தாய்மொழி தமிழ் ஆகும்.

மண்டல மருத்துவ அலுவலர், திரு.வி.க.நகர் மருத்துவ மண்டலம் அவர்களின் *07.05.2021* நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது முன்பண நிலுவைத் தொகை, தணிக்கை தடை, குற்றவியல் நடவடிக்கை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்பாளர் *-2* மருத்துவ சேவைகள் துறை அவர்களின் *26.04.2021* நாளிட்ட குறிப்பில் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர மருத்துவ அலுவலர் அவர்களின் *04.06.2021* நாளிட்ட குறிப்பில், தனியர் இந்நாள் வரை பணிப்புரிந்த காலத்தில் உள்ளாட்சி தணிக்கைத்துறை ஆவணங்களின்படி, தணிக்கைப்பத்திகள் நிலுவையில் ஏதும் இல்லை என தெரிவித்து, மேலும் 2019 – 2020 மற்றும் 2020 – 2021 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கை தடை புத்தகம் வெளி வந்தவுடன் தணிக்கைதடை நிலுவை குறித்து பின்னர் தெரியவரின் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என நிபந்தனையுடன் தனியருக்கு சான்று அளிக்கப்படுகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கூட்டுறவு சங்க *10.06.2021* நாளிட்ட கடிதத்தில், தனியர் இக்கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக உள்ளார் கடன் தொகை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர் அவர்களின் 05.05.2021 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் தனியர் மீது இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர், மாநில விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு அவர்களின் 26.04.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் தன் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த நாளன்று 51 வயதினை பூர்த்தி செய்துள்ளார். அன்னாரின் மொத்த பணிக்காலம் 30 ஆண்டுகள் 06 மாதங்கள் *25* நாட்கள் ஆகும் தனியர் சம்பளமில்லா விடுப்பு 30 நாட்கள் துய்த்துள்ளார். தனியரின் பிறந்த நாள் – 10.12.1969. அரசு பணிவிதிகளின்படி தனியர் வயது முதிர்வில் ஓய்வு பெறும் தகுதியான நாள் 31.12.2029 ஆகும்.

அரசாணை எண்.350, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை நாள்:07.10.1991ன்படியும், அரசாணை எண்.376, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை, நாள்:11.12.1995ன்படியும், தனியர் 30 ஆண்டுகள் 06 மாதங்கள் 25 நாட்கள் பணிநிறைவு செய்துள்ளதாலும், தன் விருப்ப ஓய்விற்கு 90 நாட்கள் முன்னறிவிப்பு கடிதம் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் வழங்கியுள்ளதாலும், சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதி பெற்று தனியரை தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கலாம்.

**பொ.து.ந.க.எண்.இ7/14306/2021 &**

**ம.சே.து.ந.க.எண்.எப்5/0631/2021**

எனவே, மேலே தெரிவிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் திருமதி. வி. சித்ரா, நகர சுகாதார செவிலியர், அத்திப்பட்டு நகர ஆரம்ப சுகாதார நிலையம், அம்பத்தூர் மருத்துவ மண்டலம் - 7 (ஊதியம் திரு.வி.க.நகர் மருத்துவ மண்டலம் – 6) அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, உள்ளாட்சி நிதி தணிக்கை தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது ஆகியவை பின்னர் தெரியவரின் இதனை தனியரது ஓய்வூதிய பணிக்கொடை தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தனியரை 03.07.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 01.07.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**S.W.M.C.NoA7/ 1791/2021**

**Resolution No.548 /2021** **Date:06-07-2021**

**Greater Chennai Corporation - Solid Waste Management Department – Reclamation of Kodungaiyur Dumping Ground through Bio-mining – Transaction Advisory Consultant to be appointed for the project – Letter to be addressed to TNUIFSL for appointment of Transaction Advisory Consultant – For orders.**

The Greater Chennai Corporation intends to reclaim the Kodungaiyur dumping ground as per the solid waste management rules 2016 and applicable rules and regulations

Proposal for the project of Reclamation of Kodungaiyur dumping ground through Biomining has been requested to be placed in State High Powered Committee for approval of funds from SBM vide Letter from Commissioner Greater Chennai Corporation to Commissioner of Municipal Administration, Dated.19.02.2021, with an approximate estimate amount of RS.777.20 Crores.

In this regard, Greater Chennai Corporation requires to appoint a Transaction Advisory Consultant for the following services related to Reclamation of Kodungaiyur dumping ground through Biomining process.

(a) Preparation of Detailed Feasibility Report (DFR) and bid documents, legal documents, proceedings, communication note etc as required by the GCC and strictly adhering to TNID Act and TNTT Act & Rules.

(b) To study in detail the technical, financial, legal, regulatory, environmental and social feasibility of the project on a sustainable basis.

(c) To prepare the REOI, RFQ,RTP,RFP, Concession agreement or Agreement and other documents, forms, applications etc as per the requirement.

(d) Assist GCC / GOTN/ in the bid process management until signing of the contracts with the qualified bidders / concessionaire / contractor as per the project design.

The detailed scope of work of the consultant is enclosed herewith for reference.

For the above requirements, Greater Chennai Corporation may request TNUIFSL, to appoint a Transaction Advisory Consultant for successful completion of the project.

Hence,

(1) To approve, to appointment of Transaction Advisory Consultant through TNUIFSL

(2) To Send a letter to The Chairman and Managing Director, TNUIFSL for appointment of Transaction Advisory Consultant.

**S.W.M.C.NoA7/ 1791/2021**

(3) If approved, the draft letter addressed to TNUIFSL submitted herewith may please be signed.

Sl.No. 1 to 3 above, orders of the Special Officer- Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Principal Secretary/Commissioner's Note dated.03.07.2021 is read.

**"Sl.No. 1 to 3 are approved by Special Officer-Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council."**

***********

.

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/1060/2021**

**தீர்மான எண்.549/2021** **நாள்:07-07-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - கொரோனா நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை பணி- பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி கொரோனா தடுப்பு பணிக்காக பல்வேறு வகையான வாகனங்கள் 20.04.2021 முதல் 31.05.2021 வாடகை முறையில் அமர்த்தப்பட்டது- வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்தப்பட்டதற்கான பணிக்காலம் 31.05.2021 அன்றுடன் முடிவடைய உள்ள நிலையில் 01.06.2021 முதல் 15.07.2021 வரையிலான காலத்திற்கு கொரோனா தடுப்பு பணிக்காக பல்வேறு வகையான வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்த நிர்வாக அனுமதி மற்றும் 01.06.2021 முதல் வாகனங்கள் தனியார் நிறுவனங்கள் மூலம் வாடகை முறையில் பணியமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதி.**

கடந்த ஆண்டு மார்ச் மாதம் 2020-ல் உலக சுகாதார நிறுவனம், "கொரோனா வைரஸ்" (Corona Virus) மூலம் ஏற்படும் நோயினை பெரும் பரவலான தொற்று நோய் (Pandemic) என அறிவித்து, அனைத்து உலக நாடுகளும் தகுந்த கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கைகான பணியினை போர்கால அடிப்படையில் மேற்கொள்ளுமாறு தெரிவித்தது. இது தொடர்பாக, இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசும், கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களை பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சியிலும் கடந்த ஆண்டு மார்ச்-2020 – லிருந்து கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் கொரோனா தொற்று பாதித்த மக்களுக்கு சிகிச்சை அளித்து அத் தொற்றிலிருந்து மீட்டு எடுப்பது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

இந்நிலையில் கடந்த மார்ச்-2021 மாதம் முதல் கொரோனா நோய் தொற்றின் தாக்கம் இரண்டாவது அலையாக பரவல் தொடங்கியுள்ளதால், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தொற்று பரவாமல் இருக்க பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது,.

இதன் ஒரு பகுதியாக மேற்கண்ட கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை பணியினை மேற்கொள்ள தேவையான பல்வேறு வகையான வாகனங்கள் தனியார் நிறுவனங்களிடமிருந்து வாடகைக்கு அமர்த்தி வரப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு:

- கொரோனா நோய்க்கான தடுப்பு பணியினை தீவிரப்படுத்தும் விதமாக, தடுப்பூசி போடப்படும் இடங்களுக்கு வர இயலாத வயதானவர்களை வாகனங்கள் மூலம் அழைத்து வந்து தடுப்பூசி போடும் பணிகளை மேற்கொள்ள 12 seater Tourister அல்லது அதற்கு இணையான பயணியர் வாகனங்கள் பணியமர்த்தப்பட்டது.
- கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட மக்களை அவர்களது இருப்பிடத்திலிருந்து Screening Center –க்கு அழைத்து வருவதற்கு 12 seater Tourister அல்லது அதற்கு இணையான பயணியர் வாகனங்கள் பணியமர்த்தப்பட்டது.
- கொரோனா தொற்று பாதித்த மக்களை Screening Center-ல் பரிசோதனை செய்து தொற்றின் தன்மைக்கேற்ப Covid Care Center அல்லது அவர்களது இருப்பிடத்திற்கு அழைத்து செல்வதற்கு12 seater Tourister அல்லது அதற்கு இணையான பயணியர் வாகனங்கள் பணியமர்த்தப்பட்டது.
- Covid Care Center-லிருந்து கொரோனா தொற்றிலிருந்து மீண்ட மக்களை அவர்களது இருப்பிடத்திற்கு அழைத்து செல்வதற்கு 12 seater Tourister அல்லது அதற்கு இணையான பயணியர் வாகனங்கள் பணியமர்த்தப்பட்டது.
- மருத்துவ அதிகாரிகளுக்கு அவரவர் பணிக்கு வந்து செல்ல Tata Indica அல்லது அதற்கு இணையான வாகனங்கள் பணியமர்த்தப்பட்டது.
- Screening Center –களில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களின் பயன்பாட்டிற்கென Swift அல்லது அதற்கு இணையான வாகனங்கள் பணியமர்த்தப்பட்டது
- கொரோனா தொற்று அறிகுறி உள்ள நபர்களிடமிருந்து மாதிரிகளை சேகரித்து (Swap Test) அதனை உடனுக்குடன் பரிசோதனை மையத்தில் வழங்கும் பணிக்கென LCV வகை வாகனங்கள் பணியமர்த்தப்பட்டது.

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/1060/2021**

- தடுப்பூசிகளை தடுப்பூசி மையங்களில் நாள்தோறும் வழங்குவதற்கென *Tata Indica* அல்லது அதற்கு இணையான வாகனங்கள் பணியமர்த்தப்பட்டது
- அன்றாடம் மேற்கொள்ளப்படும் கொரோனா தடுப்பு பணிகளை காட்சிபடுத்தும் பணிக்காக மக்கள் தொடர்பு அலுவலகத்திற்கு *Tavera* அல்லது அதற்கு இணையான வாகனங்கள் பணியமர்த்தப்பட்டது.

மேற்கண்ட கொரோனா தடுப்பு பணிக்காக பல்வேறு வகையான வாகனங்கள் மார்ச்-2021 முதல் மே-2021 வரையிலான காலத்திற்கு வாடகைக்கு அமர்த்த சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மானம் எண்.476/2020 நாள்.08.05.2021 பெறப்பட்டு வாகனங்கள் வாடகைக்கு பணியமர்த்தப்பட்டு வரப்படுகிறது. இந்நிலையில், தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் பரவல் குறைந்து வந்தாலும், மேலே தெரிவிக்கப்பட்டுள்ள பணிகளை 01.06.2021 முதல் 15.07.2021 வரை தொடர வேண்டியுள்ள நிலையில், தற்போதைய கொரோனா பாதிப்பு குறைந்துள்ளதற்கு ஏற்ப கீழ்கண்டவாறு வாகனங்களின் எண்ணிக்கையை தேவைக்கேற்ப குறைத்து 01.06.2021 முதல் 15.07.2021 காலத்திற்கு வாடகைக்கு வாகனங்கள் அமர்த்த தீர்மானிக்கப்பட்டது.

**அட்டவணை-1**

| SL. No | Purpos | Type of Vehicle | Existing Allotment | | Proposed Reduction from 01.06.2021 | Revised Allocation After Reduction from 01.06.2021 | Remarks |
|---|---|---|---|---|---|---|---|
| | | | Total No of vehicles (Nos.) | Allotment | | | |
| 1 | For Positive Patient Shifting (Home to Screening Center) | Tempo Traveller or Equvalent | **108** | **Unit - 46X2=92 Nos. Unit - additional 41 to 43 =3Nos. One Vehicle for each zone Except Z1 & ZXI -13 Nos. Total :- 108** | **62** | **46** | **Unit - 46X1=46 Nos.** |
| 2 | **Screening Centers** Patient Shifting From Screening Centers to CCC | Tempo Traveller or Equvalent | **60** | **Total No. of Screening Centers -22 Nos. Total No. of Vehicles Arranged in Screening Centers - 60 Nos.** | **10** | **50** | **Vehicle can be reduced in the following Screening centers** Thiruvattiyur - 2 Nos. Madhavaram -1 No. CDH - 2 Nos. Island Ground -2 Nos. ESI Ayanavaram -1 No. Teachers university - 2 Nos. **Total 10 Nos.** |
| 3 | **Covid Care Center** (covid care Center to Home ) | Tempo Traveller or Equvalent | **40** | **40** | **0** | **40** | **-** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | Patient Shifting From 5 MCHs to various Screening Centers | Tempo Traveller or Equvalent | **17** | **17** | **17** | **0** | **stopped from 01.06.2021** |
| 5 | Shifting Aged persons for Vaccination (From Division to Vaccination Centers) | Tempo Traveller or Equvalent | **46** | **Unit - 46X1=46 Nos.** | **46** | **0** | **stopped from 01.06.2021** |
| 6 | Distribution of Vaccine to vaccination centers | Indica or Equvalent | **16** | **16** | **0** | **16** | |
| 7 | Transporting sample from sample collection to labs | Indica or Equvalent | **16** | **16** | **0** | **16** | |
| 8 | Division Health Officer **(DHO)** | Indica or Equvalent | **183** | **183** | **0** | **183** | |
| 9 | Vehicle for Transporting of Medical officers to screening centers | Swift or Equivalent | **12** | **12** | **0** | **12** | |
| 10 | PRO Office (for video Coverage) | Tavera or Equvalent | **1** | **1** | **0** | **1** | |
| 11 | Zonal Enforcement Team | Innova or Equvalent | **15** | **15** | **0** | **15** | |
| 12 | Tele Counciling | Tavera or Equvalent | **7** | **7** | **0** | **7** | |
| 13 | GCC Control Room (Transporting Doctors) | Tavera or Equvalent | **3** | **3** | **0** | **3** | |
| 14 | Revenue Department - Control Room Staff Transportation | Tempo Traveller or Equvalent | **1** | **1** | **0** | **1** | |
| 15 | EDP Cell (for attending Covid related works) | Tavera or Equvalent | **1** | **1** | **0** | **1** | |
| 16 | Deputy Collector(Posted for Covid War Room) | Tavera / Innova / indica | **10** | **10** | **0** | **10** | |
| 17 | For Covid War Room (Transporting doctors) (Night Shift) | Tavera or Equvalent | **2** | **2** | **0** | **2** | |
| 18 | For Vaccination (Disabled Persons ) | Indica or Equvalent | **12** | **12 one vehicle to Zone IV to XV (Deployed from 31.05.2021)** | **0** | **12** | |
| 19 | For Covid Care Center (Siddha) Medical Officers Transporatation | Tavera or Equvalent | **2** | **2** | **0** | **2** | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 20 | Night Shelter | Tempo Traveller or Equvalent | **8** | **8** | **0** | **8** | |
| 21 | Food Transportation for Homeless People | Tata Ace | **6** | **6** | **0** | **6** | |
| 22 | O/o. Chief Vector Control Officer | Tavera or Equvalent | **1** | **1** | **0** | **1** | |
| **OVER All TOTAL** | | | **567** | **567** | **135** | **432** | |

பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தமிழ் நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல்-16(a)ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதாலும், இப்பணி அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்படுவதால் தற்போதைய *Covid-19* பணிக்குத் தேவைப்படும் மேற்கண்ட பல்வேறு வகையான வாகனங்கள் வாடகைக்கு அமர்த்த வாகனங்களை வாடகை முறையில் வழங்கும் தனியார் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரி மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் வாடகை முறையில் வாகனங்கள் வழங்கும் தனியார் நிறுவனங்களிடம் விலை புள்ளி கோரப்பட்டு 26.05.2021 அன்று விலைப்புள்ளி திறக்கப்பட்டது. இதில் 14 நிறுவனங்கள் கலந்து கொண்டனர். இவர்களில் திருவாளர்கள் *Anantha Travels, Jyothi Cabs, M/s Bhurani Travels, M/s D.S.T. Travels , M/s AN Cabs., M/s DST Travels., M/s. New Pandian Travels Pvt. Ltd., M/s. D Taxi Industrial Co-op. Soc. Ltd., M/s. SSJV Travels,* ஆகிய நிறுவனத்தார் குறைந்த விலை புள்ளி வழங்கியிருந்தனர்.

இந்நிலையில் 2021 சட்டமன்ற தேர்தல் பணிக்கென, *Tata Indica. Tourister,* போன்ற பல்வேறு வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்த வாடகை கட்டணம் நிர்ணயிக்க வேண்டி, பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள், போக்குவரத்து துறை அதிகாரிகள், காவல்துறை (போக்குவரத்து துறை) அதிகாரிகள் ஆகியோர் கொண்ட குழு கூடி நடத்தப்பட்ட கலந்தாய்வுக் கூட்டத்தில் சந்தை விலை மற்றும் காவல்துறை (போக்குவரத்து) ஆணையர் நிர்ணயித்துள்ள 2020-21 ஆம் ஆண்டிற்கான வாடகை கட்டணம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு *Minutes of the Meeting by Addl. District Election Officer/Deputy Commissioner (Works) held on* 27.02.2021ல் தெரிவித்துள்ள வாடகை கட்டணத்தினை அடிப்படையாக கொண்டு மேற்கண்ட நிறுவனங்களை அதற்கு இணையாக விலை குறைப்பு வழங்குமாறு கோரப்பட்டது. அதனை ஏற்றுக் கொண்ட அந்நிறுவனங்கள் கீழ்கண்டவாறு விலைகுறைப்பு வழங்கியுள்ளனர்.

**அட்டவணை-2**

| Vehicle Type | Name of the Company | 10 Hours & 100 Kms. (Exclu. GST) | Extra Hour charges | Extra KM charges |
|---|---|---|---|---|
| **Tavera, Xylo, Tata Sumo (A/c)** | M/s Anantha Travels | **2200** | **220** | **9** |
| | M/s Jyothi Cabs | **2200** | **220** | **9** |
| | M/s AN Cabs | **2200** | **220** | **9** |
| | Burhani Travels | **2200** | **220** | **9** |
| | D.S.T. Travels | **2200** | **220** | **9** |
| | New Pandian Travels (P) Ltd | **2200** | **220** | **9** |
| | M/s D Taxi Industrial Co-Operative Service Society | **2200** | **220** | **9** |
| | M/s SSJV Travels | **2200** | **220** | **9** |
| **Tata Indica** | M/s Anantha Travels | **1400** | **140** | **8** |
| | M/s Jyothi Cabs | **1400** | **140** | **8** |
| | M/s AN Cabs | **1400** | **140** | **8** |
| | M/s Burhani Travels | **1400** | **140** | **8** |
| | D.S.T.Travels | **1400** | **140** | **8** |
| | New Pandian Travels (P) Ltd | **1400** | **140** | **8** |
| | M/s D Taxi Industrial Co-Operative Service Society | **1400** | **140** | **8** |
| | M/s SSJV Travels | **1400** | **140** | **8** |

| | | | | |
|---|---|---|---|---|
| **Mahindra Tourister or Equivalent** | M/s Anantha Travels | **3000** | **300** | **14** |
| | M/s Jyothi Cabs | **3000** | **300** | **14** |
| | M/s AN Cabs | **3000** | **300** | **14** |
| | M/s Burhani Travels | **3000** | **300** | **14** |
| | D.S.T.Travels | **3000** | **300** | **14** |
| | New Pandian Travels (P) Ltd | **3000** | **300** | **14** |
| | M/s D Taxi Industrial Co-Operative Service Society | **3000** | **300** | **14** |
| | M/s SSJV Travels | **3000** | **300** | **14** |

| Vehicle Type | Name of the Company | 24 Hours packages | | |
|---|---|---|---|---|
| | | Rental Charges | Rental Charges | Rental Charges |
| **Tempo Traveller** | M/s Anantha Travels | 2900 | 600 | 7 |
| | M/s Jyothi Travels | 2900 | 600 | 7 |
| | M/s AN Cabs | 2900 | 600 | 7 |
| | M/s Burhani Travels | 2900 | 600 | 7 |
| | D.S.T.Travels | 2900 | 600 | 7 |
| | New Pandian Travels (P) Ltd | 2900 | 600 | 7 |
| | M/s D Taxi Industrial Co-Operative Service Society | 2900 | 600 | 7 |
| | M/s SSJV Travels | 2900 | 600 | 7 |

மேற்கண்ட விலைப்புள்ளி அடிப்படையில் 01.06.2021 முதல் 15.07.2021 வரையிலான 45 நாட்களுக்கு அட்டவணை-1ல் தெரிவித்துள்ள 432 பல்வேறு வகையான வாகனங்கள் வாடகைக்கு அமர்த்தி பணி மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், கொரோனா நோய் தொற்றின் தாக்கம் குறைந்ததால் 11.06.2021 முதல் கீழ்கண்ட அட்டவணையில் வரிசை எண் 2 ல் கண்டுள்ள 50 வாகனங்களை 17 வாகனங்களாகவும் மற்றும் வரிசை எண் எண் 3ல் கண்டுள்ள40 வாகனங்கள் 20 வாகனங்களாகவும் குறைத்திடவும், மேலும், வரிசை எண் 15-ல் கண்டுள்ள பணிக்கான வாகனங்கள் முற்றிலுமாக விலக்கிக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி 11.06.2021 முதல் 367 வாகனங்கள் கொரோனா தடுப்பு பணிக்கென பணியமர்த்தப்படவுள்ளது.

இதனடிப்படையில் வாகனங்கள் வாடகை முறையில் பணியமர்த்துவதற்கான தோராய செலவீனம் கீழ்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.

<u>அட்டவணை-3</u>

| Sl. No | Purpose | Type of Vehicle | No. of Vehicles | Total No of days (01.06.21 to 15.07.21) | Hire Charges per day per vehicle Exclu. GST) Rs. | Total Amount Rs. (Exclu .GST) |
|---|---|---|---|---|---|---|
| 1 | For Positive Patient Shifting (Home to Screening Center) | Tempo Traveller or Equvalent | **46** | 45 days | 4000/- (Rent =2900 driver Bata = 600/- Per K.M 7x70 = 490) | 82,80,000 |
| 2. | **Screening Centers** Patient Shifting From Screening Centers to CCC | Tempo Traveller or Equvalent | **50** | 10 days **(1.6.21to 10.6.21)** | 4000/- (Rent=2900 driver Bata = 600/- Per K.M 7x70 = 490) | 20,00,000 |
| | | | **17** | 35 days | | 23,80,000 |
| 3 | **Covid Care Center** (covid care Center to Home) | Tempo Traveller or Equvalent | **40** | 10 days **(1.6.21to 10.6.21)** | Rs.3000/- for 10 Hrs & 100 Kms. Appx. Working hours per day 12 hrs & 120 Kms= 3000+600=3600/- | 14,40,000 |
| | | | **20** | 35 days | | 25,20,000 |
| 4. | Distribution of Vaccine to vaccination centers | Indica or Equvalent | **16** | 45 days | Rs.1400/- for 10 Hrs & 100 Kms. Appx. Working hours per day 12 hrs & 120 Kms= 1400+280=1680/- | 12,09,600 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | Transporting sample from sample collection Center to labs | Indica or Equvalent | **16** | 45 days | | 12,09,600 |
| 6 | Division Health Officer **(DHO)** | Indica or Equvalent | **183** | 45 days | | 1,38,34,800 |
| 7 | Vehicle for Transporting of Medical officers to screening centers | Swift or Equivalent | **12** | 45 days | Rs.1600/- for 10 Hrs & 100 Kms. Appx. Working hours per day 12 hrs & 120 Kms= 1600+320=1920/- | 10,36,800 |
| 8 | PRO Office (for video Coverage) | Tavera or Equvalent | **1** | 45 days | 2200/- (10 hrs 100 Kms) | 99,000 |
| 9 | Zonal Enforcement Team | Innova or Equvalent | **15** | 45 days | 2500/-(10hrs 100Kms) | 16,87,500 |
| 10 | Tele Counciling | Tavera or Equvalent | **7** | 45 days | Rs.2200/- for 10 Hrs & 100 Kms. Appx. Working hours per day 12 hrs & 120 Kms= 2200+440=2640/- | 8,31,600 |
| 11 | GCC Control Room (Transporting Doctors) | Tavera or Equvalent | **7** | 45 days | Rs.2200/- for 10 Hrs & 100 Kms. Appx. Working hours per day 12 hrs & 120 Kms= 2200+440=2640/- | 8,31,600 |
| 12 | Revenue Department - Control Room Staff Transportation | Tempo Traveller or Equvalent | **1** | 45 days | 4000/- | 1,80,000 |
| 13 | EDP Cell (for attending Covid related works) | Tavera or Equvalent | **1** | 45 days | Rs.2200/- for 10 Hrs & 100 Kms. Appx. Working hours per day 12 hrs & 120 Kms= 2200+440=2640/- | 1,18,800 |
| 14 | Deputy Collector(Posted for Covid War Room) | Tavera / Innova / indica | **10** | 45 days | 5Nos.of Tavera- Rs.2640(12 Hrs 120 Kms)<br>5Nos. of Indica - Rs1680/- ( 12 hrs 120 Kms) | 5,94,000 +<br>3,78,000 =<br>9,72,000 |
| 15 | For Vaccination (Disabled Persons ) | Indica or Equvalent | **12** | 10 days (1.6.21 to 10.6.21) | Rs.1400/-( 10 Hrs 100Kms) | 1,68,000 |
| 16 | Night Shelter | Tempo Traveller or Equvalent | **8** | 45 days | 3000/- (10 hrs 100 Kms) | 10,80,000 |
| 17 | Food Transportation for Homeless People | Tata Ace | **6** | 45 days | 1800/- | 4,86,000 |
| 18 | O/o. Chief Vector Control Officer | Tavera or Equvalent | **1** | 45 days | 2200/-/-(10hrs 100Kms) | 99,000 |
| | Total | | | | | 4,04,64,300 |
| | GST@5% | | | | | 20,23,215 |
| | Grand Total | | | | | 4,24,87,515 Say 4.25 Crore |

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/1060/2021**

மேற்கண்ட அட்டவணையின்படி COVID-19 தடுப்பு பணிக்கு தேவையான பல்வேறு வகையான (TATA Indica, Tavera, & Tourister) வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்துவதற்கான தோராய செலவீனம் ரூ.4,25,00,000/- (Inclu.GST@5%) என கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும், ரோட்டரி கிளப் மூலம் 15 Tempo Traveller வகை வாகனம் கொரோனா தடுப்பு பணிக்கென இலவசமாக வழங்கியுள்ளனர். இவ்வாகனங்கள் குறைக்கப்பட்ட வாகனங்களுக்கு மாறாக பயன்படுத்தப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

கொரோனா வைரஸ் பரவல் தற்பொழுது குறைந்து வரும் நிலையில்அவ்வப்பொழுது ஏற்படும் தேவைக்கேற்ப வாகனங்களின் எண்ணிக்கையினை குறைத்திடலாம் எனவும் மற்றும் பணியமர்த்தபடும் வாகனங்களுக்கு மட்டும் பட்டித் தொகை தீர்வு செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதற்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை பிரிவு கணக்கு குறியீட்டு எண் 40-41-01ன் கீழ் கொரோனா பணிக்கென வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்துவதற்கென வழங்கப்பட்டுள்ள கணக்கு குறியீட்டு எண் 230-70-12-04 என்னும் தலைப்பின் கீழ் 2021-22 ஆம் நிதி ஆண்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. கொரோனா நோய் தடுப்பு பணிக்காக வாடகைக்கு பணியமர்த்தப்பட்ட 567 எண்ணிக்கையிலான பல்வேறு வகையான வாகனங்களின் பணிக்காலம் 31.05.2021 அன்றுடன் முடிவடைந்த நிலையில், மேற்கொண்டு தேவையின் அடிப்படையில் 01.06.2021 முதல் 10.06.2021 வரை 10 நட்களுக்கு 432 வாகனங்களும், மற்றும் 11.06.2021 முதல் 15.07.2021 வரை 35 நாட்களுக்கு 367 வாகனங்களும் கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு ரூ.4.25 கோடி (Inclu.GST) (ரூபாய் நான்கு கோடியே இருபத்தைந்து லட்சம் மட்டும்) தோராய மதிப்பீட்டில் வாடகை முறையில் அமர்த்த மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்,

| Sl. No | Purpose | Type of Vehicle | No. of Vehicles | Total No of days (01.06.21 to 15.07.21) | Hire Charges per day per vehicle Exclu. GST) Rs. | Total Amount Rs. (Exclu .GST) |
|---|---|---|---|---|---|---|
| 1 | For Positive Patient Shifting (Home to Screening Center) | Tempo Traveller or Equvalent | **46** | 45 days | 4000/- (Rent =2900 driver Bata = 600/- Per K.M 7x70 = 490) | 82,80,000 |
| 2. | **Screening Centers** Patient Shifting From Screening Centers to CCC | Tempo Traveller or Equvalent | **50** | 10 days **(1.6.21to 10.6.21)** | 4000/- (Rent=2900 driver Bata = 600/- Per K.M 7x70 = 490) | 20,00,000 |
| | | | **17** | 35 days | | 23,80,000 |
| 3 | **Covid Care Center** (covid care Center to Home) | Tempo Traveller or Equvalent | **40** | 10 days **(1.6.21to 10.6.21)** | Rs.3000/- for 10 Hrs & 100 Kms. Appx. Working hours per day 12 hrs & 120 Kms= 3000+600=3600/- | 14,40,000 |
| | | | **20** | 35 days | | 25,20,000 |
| 4. | Distribution of Vaccine to vaccination centers | Indica or Equvalent | **16** | 45 days | Rs.1400/- for 10 Hrs & 100 Kms. Appx. Working hours per day 12 hrs & 120 Kms= 1400+280=1680/- | 12,09,600 |
| 5 | Transporting sample from sample collection Center to labs | Indica or Equvalent | **16** | 45 days | | 12,09,600 |
| 6 | Division Health Officer **(DHO)** | Indica or Equvalent | **183** | 45 days | | 1,38,34,800 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | Vehicle for Transporting of Medical officers to screening centers | Swift or Equivalent | **12** | 45 days | Rs.1600/- for 10 Hrs & 100 Kms. Appx. Working hours per day 12 hrs & 120 Kms= 1600+320=1920/- | 10,36,800 |
| 8 | PRO Office (for video Coverage) | Tavera or Equivalent | **1** | 45 days | 2200/- (10 hrs 100 Kms) | 99,000 |
| 9 | Zonal Enforcement Team | Innova or Equivalent | **15** | 45 days | 2500/-(10hrs 100Kms) | 16,87,500 |
| 10 | Tele Counciling | Tavera or Equivalent | **7** | 45 days | Rs.2200/- for 10 Hrs & 100 Kms. Appx. Working hours per day 12 hrs & 120 Kms= 2200+440=2640/- | 8,31,600 |
| 11 | GCC Control Room (Transporting Doctors) | Tavera or Equivalent | **7** | 45 days | Rs.2200/- for 10 Hrs & 100 Kms. Appx. Working hours per day 12 hrs & 120 Kms= 2200+440=2640/- | 8,31,600 |
| 12 | Revenue Department - Control Room Staff Transportation | Tempo Traveller or Equivalent | **1** | 45 days | 4000/- | 1,80,000 |
| 13 | EDP Cell (for attending Covid related works) | Tavera or Equivalent | **1** | 45 days | Rs.2200/- for 10 Hrs & 100 Kms. Appx. Working hours per day 12 hrs & 120 Kms= 2200+440=2640/- | 1,18,800 |
| 14 | Deputy Collector(Posted for Covid War Room) | Tavera / Innova / indica | **10** | 45 days | 5Nos.of Tavera- Rs.2640(12 Hrs 120 Kms) 5Nos. of Indica - Rs1680/- ( 12 hrs 120 Kms) | 5,94,000 + 3,78,000 = 9,72,000 |
| 15 | For Vaccination (Disabled Persons ) | Indica or Equivalent | **12** | 10 days (1.6.21 to 10.6.21) | Rs.1400/-( 10 Hrs 100Kms) | 1,68,000 |
| 16 | Night Shelter | Tempo Traveller or Equivalent | **8** | 45 days | 3000/- (10 hrs 100 Kms) | 10,80,000 |
| 17 | Food Transportation for Homeless People | Tata Ace | **6** | 45 days | 1800/- | 4,86,000 |
| 18 | O/o. Chief Vector Control Officer | Tavera or Equivalent | **1** | 45 days | 2200/-/-(10hrs 100Kms) | 99,000 |
| | | | | | Total | 4,04,64,300 |
| | | | | | GST@5% | 20,23,215 |
| | | | | | Grand Total | 4,24,87,515 Say 4.25 Crore |

2. பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தமிழ் நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதி 1998ல்-16(a)ல் ஒளிவு மறைவில்லா ஒப்பம் கோருவதற்கு விலக்கு அளித்துள்ளதாலும் இப்பணி அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்படுவதால், கொரோனா நோய் தொற்று தடுப்பு பணிக்கென பல்வேறு வகையான வாகனங்களை தனியார் நிறுவனங்களிடமிருந்து விலை புள்ளி பெற்று கீழ்கண்ட கட்டண விகிதத்தில் வாடகை முறையில் அமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

| Type Of Vehicles (Air- conditioned) | 24 Hrs | 10 Hours, &100 Kms (Exclu.GST) | Extra Hour charges (Exclu.GST) | Extra KM charges (Exclu.GST) | Remarks |
|---|---|---|---|---|---|
| **TAVERA, XYLO, TATA SUMO or equivalent** | - | 2200.00 | 220.00 | 9.00 | Rates approved by the committee consist of RTO's ,Police Officials and Tamilnadu Van owner Association Members |
| **MARUTI SWIFT DZIRE / ETIOS GD / HYUNDAI XCENT or equivalent** | - | 1600.00 | 160.00 | 9.00 | |
| **TATA INDICA or equivalent** | - | 1400.00 | 140.00 | 8.00 | |
| **12+1 Seater Mahindra Tourister (Non- A/c)** | | 3000.00 | 300.00 | 14.00 | |
| **12+1 Seater Tempo Traveller / Mahindra Tourister (Non- A/c)** | 4000 | - | - | - | Hire charges Hire charges already givenFrom June-2020 as per **Police Commissionerate Rate (Rental Charges 2910 + Driver Bata Rs.600 + Km Charges Rs.9 per Km.)** Since these vehicles are specially partitioned for Corona affected Persons |

3. மேற்கண்ட கட்டண விகிதத்தில் கொரோனா தடுப்புக்கு தேவையான பல்வேறு வகையான வாகனங்கள் குறைந்த விலைப்புள்ளி அளித்திருந்து திருவாளர்கள் *Anantha Travels, Jyothi Cabs, M/s Bhurani Travels, M/s D.S.T. Travels , M/s AN Cabs., M/s DST Travels., M/s. New Pandian Travels Pvt. Ltd., M/s. D Taxi Industrial Co-op. Soc. Ltd., M/s. SSJV Travels,* ஆகிய நிறுவனங்களிடமிருந்து வாடகைக்கு அமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

4. பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி தேவையின் அடிப்படையில் மேற்கண்ட விலைப்புள்ளிக்கு வாகனங்கள் வாடகைக்கு வழங்குவதற்கு சம்மதித்த இதர நிறுவனங்களிடமிருந்து வாகனங்கள் வாடகைக்கு அமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

5. கொரோனா வைரஸ் பரவல் தற்பொழுது குறைந்து வரும் நிலையில் அவ்வப்பொழுது ஏற்படும் தேவைக்கேற்ப வாகனங்களின் எண்ணிக்கையினை குறைத்திடலாம் எனவும் மற்றும் பணியமர்த்தப்படும் வாகனங்களுக்க மட்டும் பட்டித் தொகை தீர்வு செய்யவும்,

6. இதற்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை பிரிவு கணக்கு குறியீட்டு எண்.40-41-01ன் கீழ் கொரோனா பணிக்கென வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்துவதற்கென வழங்கப்பட்டுள்ள கணக்கு குறியீட்டு எண்.230-70-12-04 என்னும் தலைப்பின் கீழ் 2021-22 ஆம் நிதி ஆண்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளவும்,

7. இனம் 1 முதல் 5 வரை ஏற்பின், இயந்திர பொறியியல் துறை பிரிவு, கணக்கு குறியீட்டு எண்.40-41-01ன் கீழ் கொரோனா பணிக்கென வாகனங்கள் வாடகை முறையில் அமர்த்துவதற்கென வழங்கப்பட்டுள்ள கணக்கு குறியீட்டு எண் 230-70-12-04 என்னும் தலைப்பின் கீழ் ரூ.4,25,00,000/. நிதி ஒதுக்கீடு செய்து வழங்க, நிதி ஆலோசகர் அவர்களை கோர அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 01.07.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**இ.பொ.து.ந.க.எண்.W5/016/2020**

**தீர்மானஎண்.550/2021** **நாள்:07-07-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - - பொது தொழிற்சாலை - பொது சுகாதாரம் பூச்சி தடுப்பு துறை - மத்திய மலேரியா பண்டக சாலையில் உள்ள பழுதடைந்த 20 வகையான உபகரணங்களை கொண்ட ஒரே தொகுப்பாக விற்பனை செய்ய M/s. MSTC Ltd, (மத்திய அரசு நிறுவனம்) சேவை நிறுவனம் மூலம் 16.06.2021 அன்று மின்னணு ஏலம் நடைபெற்றதில் உயர்ந்த விலை (ரூ.14,00,420/-) கோரிய திருவாளர்கள். JK Trading Corporation., நிறுவனத்திற்கு விற்பனை ஆணை வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திரப்பொறியியல் துறை, பொது தொழிற்சாலை, பொது சுகாதாரம் பூச்சி தடுப்பு துறை, மத்திய மலேரியா பண்டக சாலையில் உள்ள பழுதடைந்த 20 வகையான உபகரணங்களை ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யும் பொருட்டு மதிப்பாய்வு செய்வதற்கு மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்/பாலங்கள்) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தொழில்நுட்பக்குழு **17.02.2021** அன்று மத்திய மலேரியா பண்டக சாலை கிடங்கில் அவை அனைத்தும் (Condemned) பயனற்றவை என கழிவு செய்யப்பட்ட நிலையில் அரிப்பு ஏற்பட்டு இரும்பு துகள்களாக சிதற வாய்ப்பு உள்ளதாலும், கொசு உற்பத்திக்கு காரணமாக உள்ள நிலையில் இருப்பதாலும் மேற்கண்ட பயனற்ற உபகரணங்களை மொத்த மதிப்பாக ரூ.5,92,514.5/- (அல்லது) ரூ.5,93,000/- விலை நிர்ணயம் செய்யப்பட்டு ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி மின்னணு ஏலம் மூலம் விற்பனை செய்து தீர்வு செய்யலாம் என இக்குழுவின் அங்கத்தினர்களால் பரிந்துரைக்கப்பட்டது.

அதன்படி, 02.03.2021. அன்று மின்னணு ஏலம் நடத்த திருவாளர்கள். MSTC Ltd., சேவை நிறுவனத்திற்கு 20.02.2021. நாளிட்ட மின்னஞ்சல் கடிதம் அனுப்பப்பட்டது. இதனிடையில் தமிழக அரசு சட்டமன்ற தேர்தல் (2021) முன்னிட்டு அடுத்த அறிவிப்பு வரும் வரை மின்னணு ஏலம் நடத்த தள்ளி வைக்கப்பட்டது.

மீண்டும், 16.06.2021 அன்று மறு-மின்னணு ஏலம் நடத்த திருவாளர்கள். MSTC Ltd., சேவை நிறுவனத்திற்கு 02.06.2021 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

அதன்படி, 16.06.2021 அன்று மின்னணு ஏலம் நடைபெற்றதில் உயர்ந்த விலை கோரிய நிறுவனத்தின் விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | விவரம் | தொழில்நுட்ப குழு மதிப்பீடு செய்த தொகை | மின்னணு ஏலத்தில் கோரிய உயர்ந்த விலை | உயர்ந்த விலை கோரியுள்ள ஏலதாரர் |
|---|---|---|---|---|
| 1 | கழிவு செய்யப்பட்ட 20 வகையான பயனற்ற உபகரணங்களை ஒரே தொகுப்பாக விற்பனை செய்ய | ரூ.5,93,000/- | ரூ.14,00,420/- | M/s. JK Trading Corporation., |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையை ஆய்வு செய்ததின் அடிப்படையில் மத்திய மலேரியா பண்டக சாலையில் உள்ள கழிவு செய்யப்பட்ட 20 வகையான பயனற்ற உபகரணங்களை ஒரே தொகுப்பாக விற்பனை செய்ய மின்னணு ஏலத்தில் உயர்ந்த விலை கோரிய ஏலதாரர் M/s. JK Trading Corporation., அவர்களின் உயர்ந்த விலையான ரூ.14,00,420/- தொழில்நுட்ப குழு மதிப்பீட்டில் ஒப்பிடும்போது (+) 136.15% கூடுதலாகும். ஆதலால் ஏலத்தில் அதிக தொகை கோரியுள்ள M/s. JK Trading Corporation., நிறுவனத்தாருக்கு மேற்கண்ட பொருட்களை விற்பனை செய்ய பரிந்துரைக்கப்படுகிறது.

மேலும், மின்னணு ஏலத்தில் அதிக விலை கோரியுள்ள திருவாளர்கள். JK Trading Corporation., நிறுவனத்தார் மொத்த தொகையையும் ரூ.16,69,021/-யில் (DD No.203290 dated.19.06.2021 drawn on Axis Bank) (100% பொருள் தொகையான ரூ.14,00,420/- மற்றும் GST18% ரூ.2,52,076/- வருமான வரி 1% ரூ.16,525/- உட்பட மொத்த தொகை ரூ.16,69,021/-) திருவாளர்கள்.

**இ.பொ.து.ந.க.எண்.W5/016/2020**

*MSTC Ltd*., நிறுவனம் பெற்றுக் கொண்டதாகவும், பெருநகர சென்னை மாநகராட்சியின் உறுதிப்படுத்தல் கடிதம் கிடைத்த உடன் அதிக விலை கோரிய ஏலதாரரிடமிருந்து மொத்த தொகையினை காசோலையாகவும் மற்றும் விற்பனை ஆணையும் அனுப்பி வைக்கப்படும் எனவும் திருவாளர்கள். *MSTC Ltd*., நிறுவனம் தங்கள் மின்னஞ்சல் மூலம் தெரிவித்துள்ளனர்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திரப்பொறியியல் துறை, பொது தொழிற்சாலை, பொது சுகாதாரம் பூச்சி தடுப்பு துறை, மத்திய மலேரியா பண்டக சாலையில் உள்ள பழுதடைந்த *20* வகையான உபகரணங்களை ஒரே தொகுப்பாக விற்பனை செய்ய திருவாளர்கள். *MSTC Ltd*., சேவை நிறுவனம் மூலம் மின்னணு ஏலம் *16.06.2021* அன்று நடத்தப்பட்டு திருவாளர்கள். *JK Trading Corporation*., அவர்கள் கோரிய உயர்ந்த விலை ரூ.*14,00,420/-* விலையானது அதிகபட்ச நிர்ணய விலை ரூ.*5,93,000/-* மதிப்பைவிட *(+136.15%)* கூடுதலாக இருப்பதால் அதனை ஏற்று திருவாளர்கள். *JK Trading Corporation*., நிறுவனத்தாருக்கு விற்பனை ஆணை வழங்கவும்,

2. மேற்கண்ட கழிவு செய்யப்பட்ட *20* வகையான பயனற்ற உபகரணங்களை விற்பனை செய்யும் பொருட்டு, மின்னணு ஏலத்தில் அதிக விலை ரூ.*14,00,420/-* கோரிய திருவாளர்கள். *JK Trading Corporation*., நிறுவனத்தார் பொருள் தொகை ரூ.*14,00,420/-* மற்றும் *GST 18%* ரூ.*2,52,076/-* வருமான வரி *1%* ரூ.*16,525/-* உட்பட மொத்த தொகையான ரூ.*16,69,021/-*ஐ திருவாளர்கள். *MSTCLtd*., நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு, தனித்தனியாக செலுத்துச்சீட்டின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திய பின் மேற்கண்ட பயனற்ற உபகரணங்களை உள்ளது உள்ளபடி நிலையில் எடுத்து செல்ல திருவாளர்கள். *JK Trading Corporation*., அவர்களுக்கு அனுமதி வழங்கிடவும்,

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 01.07.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**பொ.து.ந.க.எண்.இ6/13787/2020 &**
**தி.க.மே.து.ந.க.எண்.அ5/1628/2020**

**தீர்மானஎண்.553/2021** **நாள்:07-07-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திடக்கழிவு மேலாண்மைத்துறை - 2020-2021ம் பட்டியலாண்டில் துப்புரவு மேற்பார்வையாளர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி 2020-2021 ஆம் பட்டியல் ஆண்டிற்கான துப்புரவு மேற்பார்வையாளர் காலிப்பணியிடங்களை 7வது ஊதியக்குழு பரிந்துரையின்படி, ரூ.35400-112400 என்ற ஊதிய விகிதம் மற்றும் இதர அனுமதிக்கப்பட்ட படிகளுடன் நிரப்புவதற்கான பட்டியல் 01.03.2020 என்ற மைய நாளிட்டு (Crucial Date) தயாரிக்கப்பட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ம் நிலைப் பணியாளர்களுக்கான சார்நிலை பணி துணை விதிகள் 2009ல் துப்புரவு மேற்பார்வையாளர் பதவி உயர்வுக்கு நியமன முறை மற்றும் கல்வித் தகுதி கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**துப்புரவு மேற்பார்வையாளர் பதவிக்கான நியமன முறை**

| பதவியின் பெயர் | நியமன முறை | நிர்ணயிக்கப் பட்ட தகுதிகள் | ஊதிய விகிதம் மற்றும் நாள் | குறிப்பு |
|---|---|---|---|---|
| துப்புரவு மேற்பார்வையாளர் | 1. துப்புரவு ஆய்வாளர் பதவிகளிலிருந்து பதவி உயர்வு மூலம்<br><br>2. துப்புரவு ஆய்வாளர் பதவியில் இரண்டு ஆண்டு காலம் பணி முடித்திருக்க வேண்டும். | குறைந்த பட்ச பொது கல்வி தகுதி | ரூ.35,400-1,12,400<br><br>நிர்ணய நாள் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 1ம் நாள் | பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு. |

திடக்கழிவு மேலாண்மை துறையின் 20.07.2020 நாளிட்ட சுற்றறிக்கையில் 2020-2021 ம் பட்டியலாண்டில் ஏற்பட்டுள்ள/ஏற்படவுள்ள துப்புரவு மேற்பார்வையாளர் காலிப்பணியிடங்களை நிரப்பிடும் பொருட்டு தகுதி வாய்ந்த துப்புரவு ஆய்வாளர்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு அனைத்து துறைகள் மற்றும் மண்டலங்களை கேட்டுக்கொள்ளப்பட்டது. அவ்வாறு கேட்டுக்கொண்டதில் 21 துப்புரவு ஆய்வாளர்களின் விவரங்கள் பெறப்பட்டு பணி மூப்பு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

**துப்புரவு மேற்பார்வையாளர் பதவி உயர்வுக்கான காலிப்பணியிடங்களின் விவரங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | **Total cadre strength** | **50 Nos** |
| | (i) Temporary | - NIL – |
| | (ii) **Permanent** | **50 Nos** |
| 2. | Number of vacancies of retirements (For 12 months as in para 14 of G.O.Ms.No.603, Personnel and Administrative Reforms (Per.M) Department, Dated 12th June 1985) (or on the crucial date prescribed in the rules) | **01 Nos** |
| 3. | 5 percent leave reserve vacancies with reference to the working strength (Not applicable for direct recruitment) | - NIL – |
| 4. | Number of likely promotions<br>Conservancy Supervisor to Junior Enigneer | **01** |
| 5. | Number of new posts likely to be sanctioned during the panel period and the number of posts sanctioned earlier but not included in the previous year estimate | - NIL – |
| | **Vacancies** | **2 Nos** |

**பொ.து.ந.க.எண்.இ6/13787/2020 &**
**தி.க.மே.து.ந.க.எண்.அ5/1628/2020**

| | | |
|---|---|---|
| 6. | Number of vacancies to be provided for unexpected contingencies on a staggered scale as indicated in G.O.Ms.No.103, Personnel and Administrative Reforms (S) Department, Dated 9th October 1994. | |
| | When the total vacancies arrived at with reference General rule 4 are between — Provision for unexpected contingencies as a percentage of total vacancies | |
| | 1 to 10 — 40% | |
| | 11 to 20 — 30% | |
| | 21 to 40 — 20% | |
| | 41 to 100 — 15% | |
| | 100 and above — 10% | |
| | **Promotion Vacancies 02 x 40%= (0.8) 1No** | **1 No** |
| | **Deduct** | |
| 7. | Number of posts disbanded during the recruitment year | - NIL – |
| 8. | Number of vacancies apportioned for direct recruitment | - NIL – |
| | **Total (02+1=03)** | **03 Nos** |
| 9. | Number of persons who have been promoted against leave vacancies and subsequently reverted to the lower cadre from the approved list already drawn-up. | - NIL – |
| 10. | Number of persons who have been deputed to other posts for a specified period and subsequently revered to the lower cadre for want of vacancy. | - NIL – |

2020-2021 ஆம் பட்டியலாண்டில் துப்புரவு மேற்பார்வையாளர் பதவிக்கான (Estimate Vacancies) காலிப்பணியிடங்களின் மதிப்பீடு 3 ஆகும். ஆகவே பணி மூப்புப் பட்டியலில் இடம் பெற்றுள்ள 21 துப்புரவு ஆய்வாளர்களின் பணிப்பதிவேடுகளை ஆய்வு செய்ததில் கீழ்க்கண்ட விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டது.

| வ. எண் | பணிமூப் பட்டியலில் வ.எண். | துப்புரவு ஆய்வாளர்களின் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் மண்டலம் | குற்றச்சாட்டின் தன்மை | | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | | | 9(1) | 9(2) | |
| 1. | 1 | திரு. P. பிரகாஷ் ராவ், துப்புரவு ஆய்வாளர் மண்டலம்-2. | 1. தனியர் மீது 9(1)ன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் இறுதி ஆணையாக ஊதிய உயர்வினை 6 மாதம் திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து வடக்கு வட்டார துணை ஆணையர் அவர்களால் 24.08.2017 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டுள்ளது.<br>2.தனியரின் மீது 9(1) ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கையின் இறுதி ஆணையாக 6 மாதம் திரண்டபயனின்றி ஊதிய உயர்வினை நிறுத்தம் செய்து வடக்கு வட்டார துணை ஆணையர் அவர்களின் 18.07.2018 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டுள்ளது. | - | தனியருக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் 5 ஆண்டுகளுக்குள் இருப்பதால் பதவி உயர்வு வழங்க இயலாது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. |

**பொ.து.ந.க.எண்.இ6/13787/2020 &**

**தி.க.மே.து.ந.க.எண்.அ5/1628/2020**

**01.03.2020ஐ மைய நாளாகக் கொண்ட 2020-2021ம் ஆண்டு துப்புரவு மேற்பார்வையாளர் பதவிக்கான தற்காலிக தெரிவுப் பட்டியல்**

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | தற்போதுள்ள பதவியில் பணியில் சேர்ந்த நாள் | கல்வித்தகுதி |
|---|---|---|---|
| 1. | R.செல்வராஜ்<br>துப்புரவு ஆய்வாளர்<br>மண்டலம் - 7 | 16.04.2010 | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 2. | C. மணி<br>துப்புரவு ஆய்வாளர்<br>மண்டலம் - 5 | 28.01.2016 | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 3. | P.மகாதேவன்<br>துப்புரவு ஆய்வாளர்<br>மண்டலம் - 8 | 29.01.2016 | 10ம் வகுப்பு தேர்ச்சி |

திடக்கழிவு மேலாண்மைத்துறையின் 16.02.2021 நாளிட்ட சுற்றறிக்கை மூலம் மேற்படி தற்காலிக தெரிவுப்பட்டியல் குறித்து வட்டார துணை ஆணையர்கள்/மண்டல அலுவலர்கள் தங்களின் கீழ் பணிபுரியும் அனைத்து துப்புரவு ஆய்வாளர்களுக்கும் சுற்றுக்கு விட்டு, இத்தற்காலிக தெரிவுப்பட்டியல் குறித்து பெறப்படும் ஆட்சேபணைக் கருத்துக்களை உரிய ஆவணங்களுடன் 04.03.2021 தேதிக்குள் திடக்கழிவு மேலாண்மைத்துறைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறு கேட்டுக் கொள்ளப்பட்டதனை தொடர்ந்து, மண்டலம்-7 மற்றும் 11 ஆகியவற்றிலிருந்து ஆட்சேபணைகள் பெறப்பட்டது. அவ்வாறு பெறப்பட்ட ஆட்சேபணைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து விவரங்கள் கீழ்கண்டவாறு அளிக்கப்படுகிறது.

| வ. எண் | துப்புரவு ஆய்வாளர் பெயர் /மண்டலம் | ஆட்சேபணை | எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரம் |
|---|---|---|---|
| 1 | R.செல்வராஜ்<br>துப்புரவு ஆய்வாளர்<br>மண்டலம் - 7 | தனியர் தனக்கு தற்காலிகமாக துப்புரவு மேற்பார்வையாளர் பதவி உயர்வுக்கு விருப்பமில்லை என கடிதம் அளித்துள்ளார். | தனியர் தனக்கு தற்காலிகமாக பதவி உயர்வுக்கு விருப்பமில்லை என தெரிவித்துள்ளதால், தமிழ்நாடு மாநில சார்நிலை பணியாளர்களுக்கான பணி விதிகள் 57(2) ன் படி தற்காலிக தெரிவுப்பட்டியலில் வ.எண்.1 ல் இடம் பெற்றிருந்த தனியரின் பெயர் இறுதி தெரிவுப்பட்டியலில் காண்பிக்கப்படவில்லை |
| 2 | திரு. R ஆனந்தன்<br>துப்புரவு ஆய்வாளர்<br>மண்டலம்-11 | தற்காலிக தெரிவு பட்டியலில் தனதுபெயர் சேர்க்கப்படாததால் தெரிவு பட்டியலில் தனது பெயரை சேர்க்குமாறு தெரிவித்துள்ளார்.. | தனியரின் பெயர் பணி மூப்பு அடிப்படையில் இளையவராக உள்ளதால் (மூப்பு நிலை பட்டியல் வ.எண்.10ல்) தனியரின் பெயர் தற்காலிக தெரிவுப்பட்டியலில் காண்பிக்கப்படவில்லை |

தற்காலிக தெரிவு பட்டியலில் வ.ண். 1ல் இடம்பெற்றிந்த திரு.R.செல்வராஜ், துப்புரவு ஆய்வாளர், மண்டல- 7 அவர்கள் தனக்கு தற்காலிகமாக துப்புரவு மேற்பார்வையாளர் பதவி உயர்வு வேண்டாம் என கடிதம் அளித்துள்ளதால், பணி மூப்பு பட்டியலில் வ.எண். 5ல் இடம்பெற்றிருந்த திரு. M. எபினேசன், துப்புரவு ஆய்வாளர், மண்டலம்-2 அவர்களின் பெயர் இறுதி தெரிவு பட்டியலில் வரிசை எண். 3 ல் காண்பிக்கப்பட்டுள்ளது.

ஆகவே மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் 2020-2021 ஆம் ஆண்டின் 01.03.2020ஐ மைய நாளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட துப்புரவு மேற்பார்வையாளர் பதவிக்கான தகுதி வாய்ந்த 3 நபர்கள் அடங்கிய இறுதி தெரிவுப்பட்டியல் கீழ்கண்டவாறு அமைகிறது .

**பொ.து.ந.க.எண்.இ6/13787/2020 &**

**தி.க.மே.து.ந.க.எண்.அ5/1628/2020**

**01.03.2020 ஐ மைய நாளாகக் கொண்ட 2020-2021ம் ஆண்டு துப்புரவு மேற்பார்வையாளர் பதவிக்கான இறுதி தெரிவுப் பட்டியல்**

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | தற்போதுள்ள பதவியில் பணியில் சேர்ந்த நாள் | கல்வித்தகுதி |
|---|---|---|---|
| 1 | C. மணி<br>துப்புரவு ஆய்வாளர்<br>மண்டலம் - 5 | 28.01.2016 | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 2 | P.மகாதேவன்<br>துப்புரவு ஆய்வாளர்<br>மண்டலம் - 8 | 29.01.2016 | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 3 | M. எபினேசன்<br>துப்புரவு ஆய்வாளர்<br>மண்டலம் - 2 | 29.01.2016 | 10ம் வகுப்பு தேர்ச்சி |

எனவே,

அ) தற்காலிக தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.1ல் இடம் பெற்று துப்புரவு மேற்பார்வையாளர் பதவி உயர்வு தற்காலிகமாக வேண்டாம் என தெரிவித்துள்ள திரு. R.செல்வராஜ் துப்புரவு ஆய்வாளர், மண்டலம் –7 அவர்களின் கோரிக்கையினை தமிழ்நாடு மாநில சார்நிலை பணியாளர்களுக்கான பணிவிதிகள் 57(2) ன் படி ஏற்று தனியருக்கு பதவி உயர்வு வேண்டாமென தெரிவித்துள்ளது மூன்றாண்டு காலத்திற்கு நடைமுறையில் இருக்கும் எனத் தெரிவித்து தனியருக்கு ஆணை வழங்கவும்,

ஆ) பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்களுக்கான திருத்தப்பட்ட சார்நிலை துணை விதிகள் 2009ன் படி 01.03.2020ஐ மைய நாளாகக் கொண்ட 2020–2021 ஆண்டிற்கான துப்புரவு மேற்பார்வையாளர் பதவிக்கு துப்புரவு ஆய்வாளர் மூப்பு நிலை வரிசையின் அடிப்படையில் தகுதி பெற்றுள்ள 3 நபர்கள் அடங்கிய இறுதி தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

இ) இறுதி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள 3 நபர்களுக்கு பட்டியலாண்டில் ஏற்பட்டுள்ள/ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களில் PB-2-Level-11- ரூ.35,400–1,12,400 என்ற காலமுறை ஊதியம் மற்றும் அனுமதிக்கப்பட்ட இதர படிகளுடன் துப்புரவு மேற்பார்வையாளராக பதவி உயர்வு வழங்கவும்,

மேற்கண்ட அ முதல் இ. வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 02.07.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“துப்புரவு மேற்பார்வையாளர் பதவி உயர்வு தெரிவுப்பட்டியல், அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**சு.து.ந.க.எண். பி2 / 3198-2 /2021**

**தீர்மானஎண்.554/2021** **நாள்:08-07-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - கொரோனா நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள - அவசர அவசியம் கருதி 110 மருத்துவ அலுவலர்களை ரூ.60,000/ மாத ஊதியத்தில், ஒரு வருட காலத்திற்கு சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி நேர்காணல் நடத்தி ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு பின்னேற்பு அனுமதி.**

நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) உலகமெங்கும் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உத்திரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சலினை கட்டுப்படுத்த பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது கோவிட் தொற்று நோயின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், இதற்கென பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளோடு கோவிட் தடுப்பூசி போடும் பணியினையும் தீவிரப்படுத்த வேண்டியுள்ளது. மேலும், காய்ச்சல் மருத்துவ முகாம்கள் 1 முதல் 15 மண்டலங்களில் நடத்த வேண்டியுள்ளது.

எனவே, அவசர அவசியம் கருதி ஆணையர் அவர்களின் 29.04.2021 நாளிட்ட ஆணையின்படி ஒப்பந்த அடிப்படையில் 150 மருத்துவ அலுவலர்களை ரூ.60,000/ மாத ஊதியத்தில், சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி பணியமர்த்த 28.04.2021 அன்று New Indian Express மற்றும் தினத்தந்தி பத்திரிக்கைகளில் விளம்பரம் அளித்து 29.04.2021 அன்று நேர்காணல் (Walk in interview) நடத்தப்பட்டு, இணை ஆணையர் (சுகாதாரம்) தலைமையில்,1.மாநகர நல அலுவலர்(பொ), 2.பெருநகர மருத்துவ அலுவலர் 3. கூடுதல் மாநகர நல அலுவலர்(பொ) தலைமையிடம், 4 கூடுதல் பெருநகர மருத்துவ அலுவலர்களை கொண்ட அலுவலர்களை கொண்ட குழு அமைத்து 109 ஒப்பந்த மருத்துவ அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

எனவே, முதற்கட்டமாக 110 மருத்துவ அலுவலர்களை ஒப்பந்த அடிப்படையில் சிறப்பு அதிகாரி/மன்றத்தின் பின்னேற்பு அனுமதி எதிர்நோக்கி பணியமர்த்த நிர்வாக அனுமதி பெறலாம்.

**தேவைப்படும் நிதி விவரம்**

| SNo | Name of the post | Mo's Monthly Salary (Rs) | Total Number Medical Officers | Period of contract | Total amount (Rs) |
|---|---|---|---|---|---|
| 1 | Medical Officer | 60,000 | 110 | 12 | 7,92,00,000 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் நோவல் கொரோனா நோய் தடுப்பு பணி மற்றும் கோவிட் தடுப்பூசி பணிகளை தீவிரப்படுத்தவும், சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தவும், அவசர அவசியம் கருதி பொதுமக்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்க 110 மருத்துவ அலுவலர்களை ஒப்பந்த அடிப்படையில் ரூ. 60,000/ மாத ஊதியத்தில் 1 முதல் 15 மண்டலங்களில் 29.04.2021 முதல் 28.04.2022 வரையில் ஒரு வருட காலத்திற்கு சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி நேரடி நியமனம் மூலம் பணியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டதிற்கு பின்னேற்பு அனுமதியும்,

**சு.து.ந.க.எண். பி2 / 3198-2 /2021**

2. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு நேரடியாக கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் 29.04.2021 முதல் 28.04.2022 வரையில் ஒரு வருட காலத்திற்கு சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி நேரடியாக 110 மருத்துவ அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு பின்னேற்பு அனுமதியும்,
3. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ. 7,92,00,000/- (ரூபாய் ஏழு கோடியே தொண்ணூற்றி இரண்டு லட்சம் மட்டும்) மேற்கொள்ள அனுமதிக்கும்,
4. சென்னை மாநகர நல சங்க விதிமுறைகளின்படி உறுப்பினர்/ செயலர் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, ஒப்பந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் மருத்துவ அலுவலர்களுடன் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளவும் மற்றும் சம்பந்தபட்ட மண்டல மருத்துவ அலுவலர்களின் வருகை சான்றின்படி சென்னை மாநகர நல சங்கத்திலிருந்து மாத ஊதியம் நேரடியாக அவர்களின் வங்கி கணக்கில் வழங்கவும் மற்றும் வருமான வரி பிடித்தம் செய்ய அனுமதியும்,
5. இச்செலவினம் பெருநகர சென்னை மாநகராட்சி கோவிட் நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-70-12-03 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதியும் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதிக்கும்,
6. 110 ஒப்பந்த மருத்துவ அலுவலர்களுக்கு ஒரு வருட காலத்திற்கு தேவைப்படும் ஊதிய தொகை ரூ. 7,92,00,000/- (ரூபாய் ஏழு கோடியே தொண்ணூற்றி இரண்டு லட்சம் மட்டும்) வரிசை எண் 5ல் தெரிவிக்கப்பட்டவாறு மாநகராட்சி கோவிட் நிதியிலிருந்து சென்னை மாநகர நல சங்கத்திற்கு முன்பணமாக வழங்கி மருத்துவ அலுவலர்களுக்கு ஊதியம் வழங்க அனுமதிக்கும் பின்னர் நேர் செய்ய அனுமதிக்கும்,

மேற்கண்ட *1* முதல் *6* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 04.07.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"*1* முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**<u>சு.து.ந.க.எண். பி2/3198-2/2021</u>**

**தீர்மானஎண்.555/2021** **நாள்:08-07-2021**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - நோவல் கொரோனா நோய் தடுப்பு பணி - பேரிடர் பணிகள் மேற்கொள்ளவும் - கோவிட் தடுப்பூசி பணிகளை தீவிரப்படுத்தவும், அவசர அவசியம் கருதி 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் 150 செவிலியர்களை ஒரு வருட காலத்திற்கு சென்னை மாநகர நல சங்கம் மூலமாக நேரடியாக ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதி.</u>**

நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) உலகமெங்கும் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உத்திரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சலினை கட்டுப்படுத்த பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது கோவிட் தொற்று நோயினை கட்டுப்படுத்த பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளோடு கோவிட் தடுப்பூசி போடும் பணியினையும் தீவிரப்படுத்த வேண்டியுள்ளது. மேலும் காய்ச்சல் மருத்துவ முகாம்கள் 1 முதல் 15 மண்டலங்களில் நடத்த வேண்டியுள்ளது.

எனவே, அவசர அவசியம் கருதி முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 22.05.2021 நாளிட்ட ஆணையின்படி ஒப்பந்த அடிப்படையில் 150 செவிலியர்களை ஒரு மாத ஊதியம் ரூ.15,000/ எனவும், சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி 27.04.2021 அன்று New Indian Express மற்றும் தினத்தந்தி பத்திரிக்கைகளில் விளம்பரம் அளித்து 29.04.2021 மற்றும் 30.04.2021 தேதிகளில் நேர்காணல் (Walk in interview) நடத்தப்பட்டு, இணை ஆணையர் (சுகாதாரம்) தலைமையில்,1.மாநகர நல அலுவலர்(பொ), 2.பெருநகர மருத்துவ அலுவலர் 3. கூடுதல் மாநகர நல அலுவலர்(பொ) தலைமையிடம், 4 கூடுதல் பெருநகர மருத்துவ அலுவலர்களை கொண்ட அலுவலர்களை கொண்ட குழு அமைத்து 150 செவிலியர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம், பணியாளர் இன்சூரன்ஸ், (Employee's State Insurance) மற்றும் பணியாளர் வருங்கால வைப்பு நிதி (Employee's Provident Fund), கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது.

| Employee's State Insurance | | Employee's Provident Fund | |
|---|---|---|---|
| Employer Contribution in the salary | Employee Contribution in the salary | Employer Contribution in the salary | Employee Contribution in the salary |
| 3.25% | 0.75% | 13% | 12.00% |

திட்ட இயக்குனர், மாநில நல சங்கம், அவர்களின் 07.09.2019 நாளிட்ட கடிதத்தில் சென்னை மாநகர நல சங்கம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு பணியாளர் இன்சூரன்ஸ், (Employee's State Insurance) பிடித்தம் செய்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

<u>சு.து.ந.க.எண். பி2/3198-2/2021</u>

எனவே, ஒப்பந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 150 செவிலியர்களை சென்னை மாநகர நல சங்கத்துடன் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்தம் மேற்கொண்டு, மண்டல மருத்துவ அலுவலர்கள் அளிக்கும் வருகை பதிவேட்டின்படி வருங்கால வைப்பு நிதி பிடித்தம் போக மீத மாத ஊதியத்தினை அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

<u>இதற்கென தேவைப்படும் நிதி விவரம்</u>

| Sl.No | Name of the Post | Salary per Month (Rs) | EPF (13%) (Rs) | Total (1+2+3) | Required Number | Total 12 months Rs (4x5x12) |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | Staff Nurses (For one year ) | 15000 | 1950 | 16950 | 150 | 3,05,10,000 |

(ரூபாய் மூன்று கோடியே ஐந்து லட்சத்து பத்தாயிரம் மட்டும்)

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் கொரோனா நோய் தடுப்பு பணி மேற்கொள்ள 150 செவிலியர்களை ரூ.15,000/ மாத ஊதியத்தில் சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டத்திற்கு பின்னேற்பு அனுமதியும்,
2. ,இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ. 3,05,10,000/- (ரூபாய் மூன்று கோடியே ஐந்து லட்சத்து பத்தாயிரம் மட்டும்) மேற்கொள்ள அனுமதியும்,
3. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு நேரடியாக கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி நேரடியாக 150 செவிலியர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதியும்,
4. சென்னை மாநகர நல சங்க விதிமுறைகளின்படி உறுப்பினர்/ செயலர் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, ஒப்பந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் செவிலியர்களுடன் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளவும் மற்றும் சம்பந்தப்பட்ட மண்டல மருத்துவ அலுவலர்களின் வருகை சான்றின்படி சென்னை மாநகர நல சங்கத்திலிருந்து வருங்கால வைப்பு நிதி பிடித்தம் போக மாத ஊதியம் நேரடியாக அவர்களின் வங்கி கணக்கில் வழங்க அனுமதியும்,
5. இச்செலவினம் பெருநகர சென்னை மாநகராட்சி கோவிட் நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-70-12-03 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதியும் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதிக்கும்,

6. 150 ஒப்பந்த செவிலியர்களுக்கு ஒரு வருட காலத்திற்கு தேவைப்படும் ஊதிய தொகை ரூ.3,05,10,000/- (ரூபாய் மூன்று கோடியே ஐந்து லட்சத்து பத்தாயிரம் மட்டும்) மாநகராட்சி கோவிட் நிதியிலிருந்து (பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-70-12-03) சென்னை மாநகர நல சங்கத்திற்கு முன்பணமாக வழங்கி செவிலியர்களுக்கு ஊதியம் வழங்கி பின்னர் நேர் செய்ய அனுமதிக்கும்,

மேற்கண்ட *1* முதல் *6* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 03.07.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"*1* முதல் *6* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

சு.து.ந.க.எண். பி2 /3346/2021

**தீர்மானஎண்.556/2021** **நாள்:08-07-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - கொரோனா நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள - 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் பரிசோதனை மையங்களில் (Covid Screening Centre) கொரோனா மாதிரிகள் எடுக்கவும் மற்றும் மண்டலங்களில் ஆய்வக பணிகள் மேற்கொள்ளவும், 100 எண்ணிக்கையில் ஆய்வக நுட்புனர்கள் (Lab Technicians), 07.05.2021 முதல் 06.05.2022 வரை ஒரு வருட காலத்திற்கு சென்னை மாநகர நல சங்கம் மூலமாக நேரடியாக ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி.**

நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) உலகமெங்கும் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் கட்டுப்படுத்தக்கூடிய தொற்று நோயாகவும் (Controllable Pandemic) அறிவித்துள்ளது. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் உத்திரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சலினை கட்டுப்படுத்த பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது கோவிட் தொற்று பரவாமல் தடுக்க, பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளோடு கோவிட் மாதிரிகள் எடுக்கும் பணியினையும் தீவிரப்படுத்த வேண்டியுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் SARI/ILI (Influenza Like illness) பாதிக்கப்பட்டவர்களை RT-PCR முறையில் பரிசோதனை செய்யவும், மேலும் பரிசோதனை மையத்திற்கு வரும் நபர்களுக்கு கொரோனா மாதிரிகள் (Nasopharyngeal/ Oropharygeal) எடுக்கவும் ஆய்வக நுட்பனர்கள் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுகின்றனர்.

எனவே, அவசர அவசியம் கருதி ஆணையர் அவர்களின் 04.05.2021 நாளிட்ட ஆணையின்படி, சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி 05.05.2021 அன்று New Indian Express மற்றும் தினத்தந்தி பத்திரிக்கைகளில் விளம்பரம் அளித்து 06.05.2021 மற்றும் 07.05.2021 தேதிகளில் நேர்காணல் (Walk in interview) நடத்தப்பட்டு, இணை ஆணையர் (சுகாதாரம்) தலைமையில்,1.மாநகர நல அலுவலர்(பொ), 2.பெருநகர மருத்துவ அலுவலர் 3. கூடுதல் மாநகர நல அலுவலர்(பொ) தலைமையிடம், 4 கூடுதல் பெருநகர மருத்துவ அலுவலர்களை கொண்ட அலுவலர்களை கொண்ட குழு அமைத்து 100 ஆய்வக நுட்புனர்கள் (Lab Technicians) ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டனர்.

இயக்குநர், பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்புத்துறை அவர்களின் 22.04.2020 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட பணிக்கென ஆய்வக தொழிற்நுட்பனர்கள் 50 எண்ணிக்கையில் அவர்களின் மாத ஊதியம் ரூ.12,000/த்துடன் பயண படியாக ரூ.3,000 சேர்த்து மாதம் ரூ.15,000/-த்தில் ஒப்பந்த அடிப்படையில் ஆறு மாத காலத்திற்கு பணியமர்த்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம், பணியாளர் இன்சூரன்ஸ், (Employee's State Insurance) மற்றும் பணியாளர் வருங்கால

வைப்பு நிதி (Employee's Provident Fund), கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது.

| Employee's State Insurance | | Employee's Provident Fund | |
|---|---|---|---|
| Employer Contribution in the salary | Employee Contribution in the salary | Employer Contribution in the salary | Employee Contribution in the salary |
| 3.25% | 0.75% | 13% | 12.00% |

திட்ட இயக்குனர் மாநில நல சங்கம், அவர்களின் 07.09.2019 நாளிட்ட கடிதத்தில் சென்னை மாநகர நல சங்கம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு பணியாளர் இன்சூரன்ஸ், (Employee's State Insurance) பிடித்தம் செய்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஒப்பந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 100 ஆய்வக நுட்பனர்களை சென்னை மாநகர நல சங்கத்துடன் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்தம் மேற்கொண்டு, மண்டல மருத்துவ அலுவலர்கள் அளிக்கும் வருகை பதிவேட்டின்படி வருங்கால வைப்பு நிதி பிடித்தம் போக மீத மாத ஊதியத்தினை அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

<u>இதற்கென தேவைப்படும் நிதி விவரம்</u>

| Sl.No | Name of the Post | Salary per Month (Rs) | EPF (13%) (Rs) | Total (1+2+3) | Required Number | Total 12 months Rs (4x5x12) |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | Lab Technicians (For one year ) | 15000 | 1950 | 16950 | 100 | 2,03,40,000 |

(ரூபாய் இரண்டு கோடியே மூன்று லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்)

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் கொரோனா நோய் தடுப்பு பணி மேற்கொள்ள 100 ஆய்வக நுட்புனர்கள் (Lab Technicians) மாத ஊதியம் ரூ.15000/த்தில் சென்னை மாநகர நல சங்கம் மூலமாக 07.05.2021 முதல் 06.05.2022 வரை ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டதிற்கு பின்னேற்பு அனுமதியும்,
2. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ.2,03,40,000/( ரூபாய் இரண்டு கோடியே மூன்று லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) மேற்கொள்ள அனுமதியும்,
3. சென்னை மாநகர நல சங்க விதிமுறைகளின்படி உறுப்பினர்/ செயலர் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, ஒப்பந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் ஆய்வக நுட்புனர்களுடன் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளவும் மற்றும் சம்பந்தப்பட்ட மண்டல மருத்துவ அலுவலர்களின் வருகை சான்றின்படி சென்னை மாநகர நல சங்கத்திலிருந்து வருங்கால வைப்பு நிதி பிடித்தம் போக மீத மாத ஊதியம் நேரடியாக அவர்களின் வங்கி கணக்கில் வழங்க அனுமதியும்,

4. இச்செலவினம் பெருநகர சென்னை மாநகராட்சி கோவிட் நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-70-12-03 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதியும் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதிக்கும்,
5. 100 ஒப்பந்த ஆய்வக நுட்புனர்களுக்கு ஒரு வருட காலத்திற்கு இவர்களுக்கு ஊதியம் வழங்க தேவையான ஊதிய தொகை ரூ.2,03,40,000/(ரூபாய் இரண்டு கோடியே மூன்று லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) மாநகராட்சி கோவிட் நிதியிலிருந்து (பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-70-12-03) சென்னை மாநகர நல சங்கத்திற்கு முன்பணமாக வழங்கி ஆய்வக நுட்புனர்களுக்கு ஊதியம் வழங்கி பின்னர் நேர் செய்ய அனுமதிக்கும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 04.07.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**சு.து.ந.க.எண். பி2/3198 /2021**

**தீர்மானஎண்.557/2021** **நாள்:08-07-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - கொரோனா நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள - அவசர அவசியம் கருதி 50 மருத்துவ அலுவலர்களை ரூ.60,000/ மாத ஊதியத்தில், ஒரு வருட காலத்திற்கு சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி நேர்காணல் நடத்தி ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு பின்னேற்பு அனுமதி.**

நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) உலகமெங்கும் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உத்திரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சலினை கட்டுப்படுத்த பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது கோவிட் தொற்று நோயின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், இதற்கென பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளோடு கோவிட் தடுப்பூசி போடும் பணியினையும் தீவிரப்படுத்த வேண்டியுள்ளது. மேலும் காய்ச்சல் மருத்துவ முகாம்கள் 1 முதல் 15 மண்டலங்களில் நடத்த வேண்டியுள்ளது.

எனவே, அவசர அவசியம் கருதி ஆணையர் அவர்களின் 30.04.2021 நாளிட்ட ஆணையின்படி ஒப்பந்த அடிப்படையில் 150 மருத்துவ அலுவலர்களை ரூ.60,000/ மாத ஊதியத்தில், சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி பணியமர்த்த 28.04.2021 அன்று New Indian Express மற்றும் தினத்தந்தி பத்திரிக்கைகளில் விளம்பரம் அளித்து 30.04.2021 அன்று நேர்காணல் (Walk in interview) நடத்தப்பட்டு, இணை ஆணையர் (சுகாதாரம்) தலைமையில்,1.மாநகர நல அலுவலர்(பொ), 2.பெருநகர மருத்துவ அலுவலர் 3. கூடுதல் மாநகர நல அலுவலர்(பொ) தலைமையிடம், 4 கூடுதல் பெருநகர மருத்துவ அலுவலர்களை கொண்ட அலுவலர்களை கொண்ட குழு அமைத்து 41 ஒப்பந்த மருத்துவ அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

எனவே, 50 மருத்துவ அலுவலர்களை ஒப்பந்த அடிப்படையில் சிறப்பு அதிகாரி/மன்றத்தின் பின்னேற்பு அனுமதி எதிர்நோக்கி பணியமர்த்த நிர்வாக அனுமதி பெறலாம்.

**தேவைப்படும் நிதி விவரம்**

| SNo | Name of the post | Mo's Monthly Salary (Rs) | Total Number Medical Officers | Period of contract | Total amount (Rs) |
|---|---|---|---|---|---|
| 1 | Medical Officer | 60,000 | 50 | 12 | 3,60,00,000 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் நோவல் கொரோனா நோய் தடுப்பு பணி மற்றும் கோவிட் தடுப்பூசி பணிகளை தீவிரப்படுத்தவும், சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தவும், அவசர அவசியம் கருதி பொதுமக்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்க 50 மருத்துவ அலுவலர்களை ஒப்பந்த அடிப்படையில் ரூ. 60,000/ மாத ஊதியத்தில் 1 முதல் 15 மண்டலங்களில் 30.04.2021 முதல் 29.04.2022 வரையில் ஒரு வருட காலத்திற்கு சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி நேரடி நியமனம் மூலம் பணியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,

2. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு நேரடியாக கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் 30.04.2021 முதல் 29.04.2022 வரையில் ஒரு வருட காலத்திற்கு சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி நேரடியாக 50 மருத்துவ அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு பின்னேற்பு அனுமதியும்,
3. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ.3,60,00,000/- (ரூபாய் மூன்று கோடியே அறுபது லட்சம் மட்டும்) மேற்கொள்ள அனுமதிக்கும்,
4. சென்னை மாநகர நல சங்க விதிமுறைகளின்படி உறுப்பினர்/ செயலர் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, ஒப்பந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் மருத்துவ அலுவலர்களுடன் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளவும் மற்றும் சம்பந்தபட்ட மண்டல மருத்துவ அலுவலர்களின் வருகை சான்றின்படி சென்னை மாநகர நல சங்கத்திலிருந்து மாத ஊதியம் நேரடியாக அவர்களின் வங்கி கணக்கில் வழங்கவும் மற்றும் வருமான வரி பிடித்தம் செய்ய அனுமதியும்,
5. இச்செலவினம் பெருநகர சென்னை மாநகராட்சி கோவிட் நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-70-12-03 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதியும் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதிக்கும்,
6. 50 ஒப்பந்த மருத்துவ அலுவலர்களுக்கு ஒரு வருட காலத்திற்கு தேவைப்படும் ஊதிய தொகை ரூ. 3,60,00,000/- (ரூபாய் மூன்று கோடியே அறுபது லட்சம் மட்டும்) வரிசை எண் 5 ல் தெரிவிக்கப்பட்டவாறு மாநகராட்சி கோவிட் நிதியிலிருந்து சென்னை மாநகர நல சங்கத்திற்கு முன்பணமாக வழங்கி மருத்துவ அலுவலர்களுக்கு ஊதியம் வழங்க அனுமதிக்கும் பின்னர் நேர் செய்ய அனுமதிக்கும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 03.07.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**க.து.ந.க.எண். அ1/2457/2021**

**தீர்மானஎண்.558/2021** **நாள்:08-07-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - சென்னைப்பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளிக் கட்டிடம், உட்கட்டமைப்பு மற்றும் பள்ளிகளில் உள்ள பொருட்களை பாதுகாப்பதற்கான தேவைகளை அந்தந்தப் பள்ளி தலைமையாசிரியரே மேற்கொள்ள அனுமதி - தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியை கல்வி அலுவலர் மூலம் நேரடியாக வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் 32 மேல்நிலைப் பள்ளிகளும், 38 உயர்நிலைப் பள்ளிகளும் 92 நடுநிலைப்பள்ளிகள் மற்றும் 119 தொடக்கப்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றது. இதில் 90,945 மாணவ / மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளிகளில் கற்றல், கற்பித்தல் பணிகள் ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் நிர்வாகப் பணிகள் மற்றும் அலுவலகப் பணிகளும் நடந்து வருகின்றன. இப்பணிகள் செவ்வனே நடைபெறுவதற்கும், பள்ளிகளில் மாணவ / மாணவியர்களின் பாதுகாப்பு மற்றும் பள்ளிகளின் பாதுகாப்பும் மிகவும் அவசியமாகும்.

பெருநகர சென்னை மாநகராட்சி அனைத்துப் பள்ளிகளிலும் மாணவ/மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளிக் கட்டிடம் மற்றும் பள்ளிகளின் உட்கட்டமைப்புப் பொருட்களின் பாதுகாப்பு மற்றும் இரவு நேரப் பாதுகாப்பு வழங்கப்படுவது அவசியமாகும். ஆணையர் அவர்களின் 09.06.2020 நாளிட்டஅனுமதியின்படி, பள்ளித் தலைமையாசிரியர்களே தங்கள் பள்ளிக்குத் தேவையான அனைத்து பாதுகாப்பு வசதிகளையும் 01.06.2020 முதல் 31.03.2021 வரை மேற்கொள்ளவும், மேலும் அவர்களுக்கு தேவைப்படும் நிதியை காவலர் செலவுகள் (Security Expenses) என்ற நிதி ஒதுக்கீட்டில் பெற்று கல்வி அலுவலர் அவர்களின் மூலம் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் வழியாக அளிப்பதற்கு அனுமதி பெறப்பட்டது. அதற்கு சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண். 368/2020, நாள் 10.06.2020ன்படி மன்றத்தின் அனுமதியும் பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டது. மேற்குறிப்பிட்ட பாதுகாப்புத் தேவைகளின் அனுமதி காலம் முடிவடைந்ததால், இணை ஆணையர்(கல்வி) அவர்களின் 03.04.2021 நாளிட்ட அனுமதி பெறப்பட்டு 01.04.2021 முதல் 30.04.2021 வரை ஒரு மாதத்திற்கு பாதுகாவலர் பணி நீட்டிப்பு செய்யப்பட்டு பள்ளிகளின் பாதுகாப்பு தேவைகள் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது மீண்டும் பள்ளித் தலைமையாசிரியர்களே தங்கள் பள்ளிக்குத் தேவையான அனைத்து பாதுகாப்பு வசதிகளையும் ஜூன் 2021 மாதம் முதல் மார்ச் 2022 மாதம் வரை (10 மாதம்) மேற்கொள்ளவும், மேலும் அவர்களுக்கு தேவைப்படும் நிதியை காவலர் செலவுகள் (Security Expenses) என்ற நிதி ஒதுக்கீட்டில் பெற்று கல்வி அலுவலர் அவர்கள் மூலம் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் வழியாக தலைமை ஆசிரியர்களுக்கு அளிக்க வேண்டியுள்ளது.

எனவே,

1. சென்னைப் பள்ளிகளில் மாணவ/மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளி சார் உட்கட்டமைப்பு பொருட்களின் பாதுகாப்புத் தேவைகளை சந்தித்திட மாணவ/மாணவர்களின் நலனுக்காக பள்ளியின் தலைமையாசிரியரே நேரடியாக பாதுகாப்பு ஏற்பாடுகளை ஜுன் 2021 மாதம் முதல் மார்ச் 2022 மாதம் வரை (10 மாதத்திற்கு) மேற்கொள்ள அனுமதியும்,

2. இப்பணியை மேற்கொள்வதற்காக பள்ளியின் தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியை பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் அந்தந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு கல்வி அலுவலர் மூலம் நேரடியாக வழங்க அனுமதியும்,
3. இச்செலவினங்களுக்காக ரூ.2,83,62,000/- (ரூபாய் இரண்டு கோடியே எண்பத்து மூன்று இலட்சத்து அறுபத்தி இரண்டாயிரம் மட்டும்) வழங்க அனுமதியும்,
4. இத்தொகையை தொடக்க/நடுநிலைப்பள்ளிகளுக்கு கணக்கு குறியீட்டு எண். 80-82-07, 220-11-03-11 Security Expenses என்ற நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ.2,00,00,000/- தொகையில் பெறுவதற்கும் மற்றும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணக்கு குறியீடு எண்.80-82-01, 220-11-03-12 Security Expenses என்ற நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 1,50,00,000/- தொகையில் பெறுவதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 05.07.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**சு.து.ந.க.எண். பி2 /3346-1/2021**

**தீர்மானஎண்.559/2021** **நாள்:13-07-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - கொரோனா நோய் தடுப்பு பணிகள் - 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் செயல்பட்டு வரும் 21 கொரோனா பரிசோதனை மையங்களில் (Covid Screening Centre) ஊடு கதிர் பரிசோதனை செய்ய 50 எண்ணிக்கையில் ஊடுகதிர் நுட்புனர்கள் (X-ray Technicians) ரூ.20,000/ மாத ஊதியத்தில் ஒரு வருட காலத்திற்கு சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி.**

நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) உலகமெங்கும் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் கட்டுப்படுத்தக்கூடிய தொற்று நோயாகவும் (Controllable Pandemic) அறிவித்துள்ளது. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உத்திரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சலினை கட்டுப்படுத்த பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது 21 கொரோனா பரிசோதனை மையங்கள் (Covid-19 Screening centre) செயல்பட்டு வருகின்றன. இதில் கேந்திரிய வித்யாலயாவில் அமைக்கப்பட்டுள்ள பரிசோதனை மையமானது 24 மணி நேரமும் செயல்படும் வகையில் அமைந்துள்ளது. இந்த பரிசோதனை மையங்களில் X-Ray Unit ஒன்றிக்கு 2- ஊடு கதிர் தொழிற் நுட்பனர்கள் (X-Ray Technicians) வீதம் ((two shift basis) இரண்டு பகுதி நேரமாக அதாவது 8 மணி முதல் 2 மணி வரையிலும் மற்றும் 2 மணி முதல் 10 மணி வரைக்கும்) பணியமர்த்த வேண்டியுள்ளது. கேந்திரிய வித்யாலயாவில் செயல்பட்டு வரும் மையத்திற்கு ஆறு ஊடுகதிர் நுட்பனர்கள் (X-Ray Technicians) தேவைப்படுகின்றனர். ஏற்கெனவே, ஒப்பந்த அடிப்படையில் 25 X Ray Technicians வெளி நிறுவனம் மூலம் பணி புரிந்து வருகின்றனர். எனவே, கூடுதலாக 50 ஊடுகதிர் நுட்பனர்கள் (X-Ray Technicians) பணியமர்த்த வேண்டியுள்ளது.

எனவே, அவசர அவசியம் கருதி ஆணையர் அவர்களின் 04/05/2021 நாளிட்ட ஆணையின்படி, ஒப்பந்த அடிப்படையில் 50 ஊடு கதிர் நுட்பனர்களை (X-Ray Technicians) ரூ.20,000/ மாத ஊதியத்தில், சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி 05.05.2021 அன்று New Indian Express மற்றும் தினத்தந்தி பத்திரிக்கைகளில் விளம்பரம் அளித்து 06.05.2021 மற்றும் 07.05.2021 தேதிகளில் நேர்காணல் (Walk in interview) நடத்தப்பட்டு, இணை ஆணையர் (சுகாதாரம்) தலைமையில்,1.மாநகர நல அலுவலர்(பொ), 2.பெருநகர மருத்துவ அலுவலர் 3. கூடுதல் மாநகர நல அலுவலர்(பொ) தலைமையிடம், 4 கூடுதல் பெருநகர மருத்துவ அலுவலர்களை கொண்ட அலுவலர்களை கொண்ட குழு அமைத்து 50 ஒப்பந்த ஊடுகதிர் நுட்பனர்கள் (X-Ray Technicians) தேர்வு செய்யப்பட்டனர்.

எனவே, 50 ஊடுகதிர் நுட்பனர்கள் (X-Ray Technicians) ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தியதற்கு சிறப்பு அதிகாரி/மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதி பெறலாம்.

<u>சு.து.ந.க.எண். பி2 /3346-1/2021</u>

திட்ட இயக்குனர் மாநில நல சங்கம், அவர்களின் 07.09.2019 நாளிட்ட கடிதத்தில் சென்னை மாநகர நல சங்கம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு பணியாளர் இன்சூரன்ஸ், (Employee's State Insurance) பிடித்தம் செய்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஒப்பந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 50 ஊடுகதிர் நுட்பனர்களை (X-Ray Technicians) சென்னை மாநகர நல சங்கத்துடன் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்தம் மேற்கொண்டு, மண்டல மருத்துவ அலுவலர்கள் அளிக்கும் வருகை பதிவேட்டின்படி பிடித்தம் ஏதுமின்றி மாத ஊதியத்தினை அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

<u>இதற்கென தேவைப்படும் நிதி விவரம்</u>

| Sl.No | Name of the Post | Salary Per Month (For Covid Duty) | Required Number | Total (Rs) |
|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 |
| 1 | X Ray Technicians (For one year) | 20000 | 50 | 1,20,00,000 |

(ரூபாய் ஒரு கோடியே இருபது லட்சம் மட்டும்)

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் கொரோனா நோய் தடுப்பு பணி மேற்கொள்ள 50 ஊடுகதிர் நுட்பனர்கள் (X-Ray Technicians) சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஒரு மாத ஊதியம் ரூ.20,000/த்தில் 07.05.2021 முதல் 06.05.2022 வரை ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,
2. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ.1,20,00,000/- (ரூபாய் ஒரு கோடியே இருபது லட்சம் மட்டும்) மேற்கொள்ள அனுமதியும்,
3. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு நேரடியாக கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி நேரடியாக 50 ஊடுகதிர் நுட்பனர்கள் (X-Ray Technicians) ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதியும்,
4. சென்னை மாநகர நல சங்க விதிமுறைகளின்படி உறுப்பினர்/ செயலர் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, ஒப்பந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் ஊடுகதிர் நுட்பனர்களுடன் (X-Ray Technicians) ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளவும் மற்றும் சம்பந்தப்பட்ட மண்டல மருத்துவ அலுவலர்களின் வருகை சான்றின்படி சென்னை மாநகர நல சங்கத்திலிருந்து மாத ஊதியம் நேரடியாக அவர்களின் வங்கி கணக்கில் வழங்க அனுமதியும்,

**சு.து.ந.க.எண். பி2 /3346-1/2021**

5. இச்செலவினம் பெருநகர சென்னை மாநகராட்சி கோவிட் நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-70-12-03 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதியும் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதிக்கும்,
6. 50 ஊடுகதிர் நுட்பனர்கள் (X-Ray Technicians) ஒரு வருட காலத்திற்கு தேவைப்படும் ஊதிய தொகை ரூ.1,20,00,000/- (ரூபாய் ஒரு கோடியே இருபது லட்சம் மட்டும்) மாநகராட்சி கோவிட் நிதியிலிருந்து (பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-70-12-03) சென்னை மாநகர நல சங்கத்திற்கு முன்பணமாக வழங்கி ஊடுகதிர் நுட்பனர்களுக்கு ஊதியம் வழங்கி பின்னர் நேர் செய்ய அனுமதிக்கும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 04.07.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது”.**

***********

**<u>பொ.து.ந.க.எண்.இ7/6365/2021 &</u>**

**<u>பொ.சு.து.ந.க.எண். சி2 / 3817 /2020</u>**

**தீர்மானஎண்.560 / 2021** **நாள்:13-07-2021**

**<u>பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - பொது சுகாதாரத்துறை - 2020-2021 ஆம் ஆண்டில் 01.07.2020 என்ற மைய நாளாகக் கொண்டு மருந்தாளுநர் (Pharmacist) பதவி உயர்வுக்கான இறுதி தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரம், மற்றும் குடும்ப நலத்துறை வகுப்பு -3 மற்றும் சார்நிலைப்பணிகளுக்கான வரைவு துணை விதிகள் 2009-ல், மருந்தாளுநர் (Pharmacist) பதவிக்கான கல்வித்தகுதியாக அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட பட்டயம் (மருந்தியல்), முடித்த கீழ்நிலை பதவிகளில் 5 ஆண்டுகள் பணி முடித்த தகுதிகாண்பருவம் முடித்தவர்களுக்கு 2020-ஆம் ஆண்டில் 01.07.2020-ஐ மைய நாளாகக் கொண்டு பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட வேண்டும். இப்பதவிக்கு அரசாணை நிலை எண்.303,, நிதி (ஊதியக்குழு) துறை, நாள்.11.10.2017ன்படி, Level 11, Rs.35400-1,12,400 என்ற ஊதிய விகிதம் மற்றும் அனுமதிக்கப்பட்ட இதர படிகளுடன் வழங்க சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.113/.2018, நாள். 02.02.2018ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது..

**<u>மருந்தாளுநர் (Pharmacist) காலிப்பணியிட விவரம்</u>**

<table>
<tr><td>1.</td><td>Total cadre strength</td><td>72 Nos</td></tr>
<tr><td></td><td>(i) Temporary</td><td>Nil</td></tr>
<tr><td></td><td>(ii) Permanent</td><td>72 Nos</td></tr>
<tr><td>2.</td><td>Number of vacancies on retirements (For 12 months as in para 14 of G.O.Ms.No.603, Personnel and Administrative Reforms (Per.M) Department, dated 12th June 1985) (or on the crucial date prescribed in the rules)</td><td>-Nil-</td></tr>
<tr><td>3.</td><td>5 percent leave reserve vacancies with reference to the working strength (Not applicable for direct recruitment)</td><td>-Nil-</td></tr>
<tr><td>4.</td><td>Number of likely promotion</td><td>-Nil-</td></tr>
<tr><td>5.</td><td>Number of new posts likely to be sanctioned during the period and the Number of posts sanctioned earlier but not included in the previous year estimate</td><td>-Nil-</td></tr>
<tr><td></td><td>Vacancies not filled by promotion due to non availability of eligible hands for 2019-2020 panel</td><td>23</td></tr>
<tr><td></td><td>Add</td><td></td></tr>
<tr><td>6.</td><td>Number of vacancies to be provided for unexpected contingencies on a staggered scale as indicated in G.O.Ms.No.103, Personnel and Administrative Reforms (S) Department, Dated 9th October 1994.
<table>
<tr><td>When the total vacancies arrived at with reference General rule 4 are between</td><td>Provision for unexpected contingencies as a percentage of total vacancies</td></tr>
<tr><td>1 to 10</td><td>40%</td></tr>
<tr><td>11 to 20</td><td>30%</td></tr>
<tr><td>21 to 40</td><td>20%</td></tr>
<tr><td>41 to 100</td><td>15%</td></tr>
<tr><td>100 and above</td><td>10%</td></tr>
</table>
Promotion Vacancies 20x23%= (4.6) 5 Nos</td><td>05Nos</td></tr>
<tr><td></td><td>Deduct</td><td></td></tr>
<tr><td>7.</td><td>Number of posts disbanded during the recruitment year</td><td>-</td></tr>
<tr><td></td><td>Total</td><td>28Nos</td></tr>
<tr><td>9.</td><td>Number of persons who have been promoted against leave vacancies and subsequently reverted to the lower cadre from the approved list already drawn-up</td><td>-</td></tr>
<tr><td>10.</td><td>Number of persons who have been deputed to other posts for a specific period and subsequently reverted to the lower cadre for want of vacancy.</td><td>-</td></tr>
</table>

**பொ.து.ந.க.எண்.இ7/6365/2021 &**
**பொ.சு.து.ந.க.எண். சி2 / 3817 /2020**

**மருந்தாளுநர் (Pharmacist) பதவியின் நியமனமுறை**

| வகை | பதவியின் பெயர் | நியமனமுறை | நிர்ணயிக்கப்படும் கல்வித்தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|
| 11 | மருந்தாளுநர் (Pharmacist) | 1, நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலைப் பணியாளர்கள் 5 ஆண்டுகள் பணிமுடித்திருப்பின் பதவி உயர்வு மூலம் (தகுதிகாண் பருவம் முடித்திருக்க வேண்டும்)<br><br>2. நேரடி நியமனம் | 1) அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட பட்டயம் (மருந்தியல்)<br>2) தமிழ்நாடு மருந்தாளுநர் அமைப்பில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் | 7-வது ஊதியக் குழுவின்படி, ஊதிய விகிதம்<br><br>Level- 11 Rs.35400-1,12,400<br>நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஜூலை முதல் நாள் |

2019 - 2020ம் ஆண்டில் இப்பதவிக்கு “இன்மை பட்டியலாக” வெளியிடப்பட்டது என்பதனை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பொது சுகாதாரத்துறையின் 16.09.2020 நாளிட்ட சுற்றறிக்கை மற்றும் 03,11,2020 நாளிட்ட நினைவூட்டு சுற்றறிக்கை வாயிலாக 2020-2021 ஆம் ஆண்டிற்கான பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏற்பட்டுள்ள மருந்தாளுநர் பதவிக்கான 28 எண்ணிக்கைக்கான காலிப்பணியிடங்களை நிரப்பும் வகையில் விவரங்கள் சேகரிக்கப்பட்டது.

மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர்-5 அவர்களது 28.09.2020 நாளிட்ட கடிதத்தின் மூலம், மண்டலம்-5 கோட்டம்-61 பணிபுரியும் திரு.D.M.சந்தோஷ் குமார், NFCP தொழிலாளி என்பவரது விவரங்கள் பொது சுகாதாரத்துறைக்கு வரப்பெற்றது. மேலும், இதர மண்டலங்கள் மற்றும் துறைகளில் இருந்து வரப்பெற்ற இன்மை அறிக்கைகளின் விவரங்கள் இணைக்கப் பட்டுள்ளது.

அதனடிப்படையில் மருந்தாளுநர் (Pharmacist) பதவியின் காலிப்பணியிடத்தை நிரப்பும் பொருட்டு 01.07.2020ஐ மைய நாளாகக்கொண்டு மருந்தாளுநர் (Pharmacist) பதவிக்கு கல்வித்தகுதியாக அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட பட்டயம் (மருந்தியல்), முடித்த கீழ்நிலை பதவிகளில் 5 ஆண்டுகள் பணி முடித்ததற்கான கல்வித் தகுதிகளை கொண்ட 01 நபர் அடங்கிய தற்காலிக தெரிவுப்பட்டியல் கீழ்கண்டவாறு வெளியிடப்பட்டது

**2020-2021 ஆம் ஆண்டின் மருந்தாளுநர் (Pharmacist) பதவிக்கான**
**தற்காலிக தெரிவுப்பட்டியல் விவரம்**

| வ. எண் | பெயர் / பதவி | தற்போது பணிபுரியுமிடம் | தற்போது உள்ள பதவியில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1 | திரு.M.D. சந்தோஷ்குமார் N.F.C.P. தொழிலாளி | கோட்டம் - 61 மண்டலம் -5 | 22.07.2014 |

மேற்கண்டவாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களது 11.01.2021 நாளிட்ட சுற்றறிக்கையின்படி வெளியிடப்பட்ட தற்காலிக தெரிவுப்பட்டியலை துறை / வட்டார / மண்டலங்களுக்கு சுற்றுக்கு விடப்பட்டு ஆட்சேபணை கருத்துக்கள் ஏதும் இருந்தால் 29.01.2021 தேதிக்குள் பொது சுகாதாரத்துறைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும், நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்கு பிறகு கிடைக்கப்பெறும் ஆட்சேபணைகளை கண்டிப்பாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது எனவும், அதனால் எற்படும் விளைவுகளுக்கு சம்மந்தப்பட்ட துறைத்தலைவர்கள் / மண்டல அலுவலர்களே பொறுப்பாவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. தற்போதைய நிலையில் இப்பொருள் சார்ந்து ஆட்சேபணைகள் ஏதும் பெறப்படவில்லை.

**பொ.து.ந.க.எண்.இ7/6365/2021 &**

**பொ.சு.து.ந.க.எண். சி2 / 3817 /2020**

மேற்கண்ட நபரின் பணிவிவரங்கள் பணிப்பதிவேட்டில் சரிபார்க்கப்பட்டுள்ளது. இத்தனியர் மருந்தாளுநர் (Pharmacist) பதவிக்கு உரிய கல்வித்தகுதிகளை பெற்றுள்ளதாகவும், இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றவியல் நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை எனவும், கடந்த ஐந்து ஆண்டுகளில் தண்டனை ஏதும் பெறவில்லை என்றும் மண்டல அலுவலர்-5 அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் 2020-2021 ஆண்டில் 01.07.2020ஐ மைய நாளாகக்கொண்டு மருந்தாளுநர் (Pharmacist) பதவி உயர்விற்கு தயாரிக்கப்பட்டுள்ள 01 நபர் அடங்கிய இறுதி தெரிவுப்பட்டியல் வெளியிட,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, வகுப்பு-3 மற்றும் 4-ம் நிலை பணியாளர்களுக்கான திருத்தப்பட்ட சார்நிலைப் பணிவிதிகள் 2009-ன்படி, 01.07.2020ஐ மைய நாளாகக் கொண்டு 2020 -2021-ம் ஆண்டிற்கான மருந்தாளுநர் (Pharmacist) பதவிக்கு கீழ்நிலை பதவிகளில் 5 ஆண்டுகள் பணி முடித்ததற்கான கல்வித் தகுதிகளை கொண்ட திரு.D.M.சந்தோஷ் குமார், NFCP தொழிலாளி, கோட்டம்-61, மண்டலம்-5 அவர்கள் பெயர் அடங்கிய இறுதி தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

2) இறுதி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள திரு.D.M.சந்தோஷ் குமார், NFCP தொழிலாளி, கோட்டம்-61, மண்டலம்-5 என்பவருக்கு பட்டியலாண்டில் ஏற்பட்டுள்ள மருந்தாளுநர் (Pharmacist) பதவிக்கான காலிப்பணியிடத்தில் அரசாணை நிலை எண்.303,, நிதி (ஊதியக்குழு) துறை, நாள்.11.10.2017ன்படி Level-11, Rs.35400-1,12,400 என்ற காலமுறை ஊதியம் மற்றும் அனுமதிக்கப்பட்டுள்ள இதரபடிகளுடன் பதவி உயர்வு வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 04.07.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“மருந்தாளுநர் (Pharmacist) பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியல், 1 முதல் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/14294/2021**

**தீர்மானஎண்.561/2021** **நாள்:13-07-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறை - டாக்டர். வி. சம்யுக்தா, துணை பெருநகர மருத்துவ அலவலர்/துணை இயக்குநர், பெருங்குடி மருத்துவ மண்டலம் - 14 அவர்கள் - தற்போது வகிக்கும் பதவியில் பதவியிறக்கம் செய்து மீண்டும் மருத்துவ அலுவலராக பணியமர்த்த அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 18.02.2017 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, டாக்டர். வி. சம்யுக்தா அவர்கள் துணை பெருநகர மருத்துவ அலுவலர்/துணை இயக்குநர் பதவி உயர்வு பெற்று, கடந்த 01.03.2017 அன்று ஆலந்தூர் மருத்துவ மண்டலத்தில பணியில் சேர்ந்து, தற்போது பெருங்குடி மருத்துவ மண்டலத்தில் பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில், தனியரின் 26.04.2021, 07.06.2021 மற்றும் 15.06.2021 கடிதங்களில், தனது உடல்நிலை சரியில்லாத காரணத்தால் துணை பெருநகர மருத்துவ அலுவலர்/துணை இயக்குநர் பதவியிலிருந்து நிரந்தரமாக பதவியிறக்கம் செய்து மீண்டும் மருத்துவ அலுவலராக பணியமர்த்துமாறு தெரிவித்துள்ளார்.

பெருநகர மருத்துவ அலுவலர் அவர்களின் 10.06.2021 நாளிட்ட கடிதத்தில், மேற்படி அளித்த கடிதத்தினை தொடர்ந்து, தனியர் பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறையில் மருத்துவ அலுவலராக 09.11.1989 அன்று பணியில் சேர்ந்து, தொடர்ந்து பதவி உயர்வு இல்லாமல் 20 வருடங்கள் மருத்துவ அலுவலராக பணிபுரிந்ததற்கு அரசாணை எண்.583ன்படி, பதவி உயர்வுடன் கூடிய ஊதிய நிர்ணயம் செய்து, தற்போது வரை வழங்கப்பட்டு வருகிறது என்றும், தனியர் துணை பெருநகர மருத்துவ அலுவலர்/துணை இயக்குநர் பதவி உயர்வு பெற்றதற்கு, எந்தவித ஊதிய உயர்வும் வழங்கப்படவில்லை என்றும்,

தனியர் கோரியபடி பதவியிறக்கம் செய்வதால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு எவ்வித நிதி இழப்பீடும் ஏற்பட வாய்ப்பில்லை என்றும், எனவே, டாக்டர். வி. சம்யுக்தா, துணை பெருநகர மருத்துவ அலுவலர்/துணை இயக்குநர் அவர்களை பதவியிறக்கம் செய்து மீண்டும் மருத்துவ அலுவலராக பணியமர்த்த சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதி பெற்று தர கோரி கோப்பு மற்றும் பணிப்பதிவேடு பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | பதவியின் பெயர் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறைப் படுத்தப்பட்ட நாள் | தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| 1 | மருத்துவ அலுவலர் | 09.11.1989 | 09.11.1989 | 09.11.11.1991 |
| 2 | மண்டல மருத்துவ அலுவலர் (துணை பெருநகர மருத்துவ அலுவலர்/ துணை இயக்குநர்) | 01.03.2017 | | |

மேலும், இது தொடர்பாக சமர்ப்பிப்பது யாதெனில், பதவியிறக்கம் செய்வதற்கான விதிமுறைகளான தமிழ்நாடு சார்நிலை பணி விதி 57 – ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

*"57. Relinquishment of rights by members:-*

*(1) Any person may, in writing, relinquish any right or privilege to which he may be entitled under this Act or the special rules if, in the opinion of the appointing authority, such relinquishment is not opposed to public interest; and nothing contained in this Act or the special rules shall be deemed to require the recognition of any right or privilege to the extent to which it has been so relinquished.*

*(2) Relinquishment of a right or privilege for a temporary period shall be accepted if it is made for a period of not less than three years, subject to the condition that after the expiry of the said period, the claim of the right or privilege relinquished will be with reference to the state of affairs that exist on the date of expiry of the period of relinquishment and without restoration of original seniority. If relinquishment of right or privilege is made permanently and is accepted, subsequent claim of the relinquished rights or privileges shall not be entertained".*

மேற்கண்ட தனியரின் கோரிக்கை *Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016, Tamil Nadu Act No. 14 of 2016 57* ன் படி ஏற்றுக்கொள்ளப்பட்டு, துணை பெருநகர மருத்துவ அலுவலர்/துணை இயக்குநர் பதவியிலிருந்து மருத்துவ அலுவலர் பதவிக்கு நிரந்தரமாக பதவி இறக்கம் செய்யப்பட வேண்டும். மேலும், அன்னார் பதவி உயர்வு வேண்டாம் என தெரிவித்துள்ளது நிரந்தரமாக நடைமுறையில் இருக்கும்.

ஆகவே, மேற்காண் விதிகளின்படி, டாக்டர். வி. சம்யுக்தா, துணை பெருநகர மருத்துவ அலுவலர்/துணை இயக்குநர் அவர்கள் அளித்த கோரிக்கையின் அடிப்படையில், துணை பெருநகர மருத்துவ அலுவலர்/ துணை இயக்குநர் பதவியிலிருந்து நிரந்தரமாக இறக்கம் செய்து, மருத்துவ அலுவலர் பதவியில் பணியமர்த்திட, சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 04.07.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"பெருநகர மருத்துவ அலுவலர்/ துணை இயக்குநர் பதவியிலிருந்து நிரந்தரமாக இறக்கம் செய்து, மருத்துவ அலுவலர் பதவியில் பணியமர்த்திட, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/2468/2021**

**தீர்மானஎண்.562/2021** **நாள்:13-07-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறை - டாக்டர்.எம்.கங்கா, மருத்துவ அலுவலர், கோடம்பாக்கம் மருத்துவ மண்டலம் - 10 - மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நேரடி நியமனம் - தகுதிகாண் பருவத்திற்குள் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் பணியமர்வு செய்யப்பட்டது - துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறாமை - பெருநகர சென்னை மாநகராட்சி பணியிலிருந்து பணியறவு செய்வதற்கு (Terminate from service) அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப அனுமதி.**

ஆணையர் அவர்களின் *17.02.2009* நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் டாக்டர்.*M*.கங்கா அவர்கள் மருத்துவ அலுவலராக *02.03.2009* அன்று பணியில் சேர்ந்துள்ளார் என்றும், மேற்படி, ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி தனியர் பணிநியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து தகுதிகாண்பருவம் முடிப்பதற்குள் வரையறுக்கப்பட்ட துறைத்தேர்வுகளான தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வு மற்றும் மருத்துவ தொகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தனியருக்கு *02.03.2009* அன்று பணிவரன்முறைபடுத்தி ஆணையிடப்பட்டுள்ளது என்றும்,

மேலும், தனியர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் மருத்துவ தொகுப்பில் *(Department Test in Tamilnadu Medical Code)* தேர்வில் டிசம்பர் *2010*ல் தேர்ச்சி பெற்றுள்ளார். மேலும், செயல் அலுவலருக்கான கணக்கு *(The Account test for Executive Offcer)* தேர்வில் இந்நாள் வரை தேர்ச்சி பெறவில்லை என்றும், இது குறித்து தனியரிடம் துணை பெருநகர மருத்துவ அலுவலர், கோடம்பாக்கம் மருத்துவ மண்டலம் அவர்களின் *28.12.2020* நாளிட்ட கடிதம் அளித்து விளக்கம் கோரப்பட்டதில், தனியர் தான் *Account test* தேர்வில் ஐந்து முறை தேர்வு எழுதினேன், *Account test* -க்கு தேவையான உண்மையான புத்தகங்கள் கிடைக்காத காரணத்தினால் தேர்வில் வெற்றி பெற இயலவில்லை என்றும், தேர்வு எழுத விரும்பி *TNPSC Office*-ல் விசாரித்ததில் *Notification 1 June 2017 only Medical Code* தேர்வு மட்டும் உள்ளதாக அறிவிக்கை தெரியப்படுத்தியதாகவும், *Account test* எழுத வேண்டும் எனில் அடுத்து வரும் தேர்வில் எழுதி வெற்றி பெறுவேன் எனத் தனியர் *29.12.2020* நாளிட்ட விளக்கக் கடிதம் அளித்துள்ளார் என்றும், பெருநகர மருத்துவ அலுவலர் அவர்களின் *11.01.2021* நாளிட்ட கடிதம் மூலம் தெரிவித்து மேல்நடவடிக்கைக்காக கோப்பு பெறப்பட்டது.

டாக்டர்.*M*.கங்கா, மருத்துவ அலுவலர் அவர்கள் அளித்த விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை எனவும், மேலும், தனியரின் கடிதத்தின் அடிப்படையில் *2017*க்கு பிறகு தேர்வுகள் எழுத எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிய வருகிறது.

மேலும், *Tamil Nadu State and Subordinate Services Rules* ன் படி கீழ்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

*26 (ii) Explanation – The maximum period upto which the probation of a Government servant shall be extended so as to enable him to acquire the test qualification, be fixed as five years. If he does not acquire the test qualification even within the maximum period of five years, he shall be reverted and the qualified and eligible juniors shall be considered for promotion. "* ***If such a person is appointed by direct recruitment and has not acquired the test***

***qualification even within the maximum period of five years, his probation shall be terminated."***

ஆகவே, டாக்டர். *M*. கங்கா, மருத்துவ அலுவலர், கோடம்பாக்கம் மருத்துவ மண்டலம்-*10* அவர்கள் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி பணிநியமனம் செய்யப்பட்டு தகுதிகாண்பருவ காலத்தினை ஐந்து ஆண்டுகள் வரை தகுதிகளை தளர்த்தி போதிய கால அவகாசம் அளித்தும் இதுநாள் வரை துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறாததாலும், இது குறித்து தனியரிடம் விளக்கம் கோரப்பட்டதில், தனியர் அளித்த விளக்கம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லாததாலும், மேற்கண்ட அரசு விதியின்படி, டாக்டர். *M*. கங்கா, மருத்துவ அலுவலர், கோடம்பாக்கம் மருத்துவ மண்டலம் - *10* அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவ அலுவலர் பணியிலிருந்து பணியறவு செய்வதற்கு *(Terminate from service)* அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 05.07.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"மருத்துவ அலுவலர் பணியிலிருந்து பணியறவு செய்வதற்கு *(Terminate from service)* அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**வ.து.ந.க.எண்.ஜி1/15592/2007**

**தீர்மானஎண்.563/2021** **நாள்:13-07-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய்துறை - சொத்துவரி - மன்றத்தின் அனுமதி பெற்று செல்போன் கோபுரங்கள் (Cell Phone Towers) மீது சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டது - சொத்து உரிமையாளர்கள் மற்றும் அலைபேசி கோபுரம் நிறுவும் நிறுவனத்தினர் தொடர்ந்த வழக்குகள் மீது மாண்புமிகு நீதி மன்றம் இடைக்கால உத்தரவு (Interim Stay order) பிறப்பித்தது - இடைக்கால உத்தரவினை ரத்து செய்ய எதிர் உறுதி ஆவணம் தாக்கல் செய்யப்பட்டது - வழக்குகள் W.P.Nos. 21040 to 21044/2010 and 10809/2012 மற்றும் W.P.Nos. 27969 to 27972/2010 and 11213 to 11215, 16225 of 2011 ஆகியவற்றின் மீது மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் சொத்துவரி விதிப்புகள் மேற்கொள்ள அனுமதி.**

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்-1919, பிரிவு-100ன்படி சென்னை மாநகரில் உள்ள கட்டடங்களுக்கு அந்தந்த பகுதிக்கான அடிப்படை தெரு கட்டண விகிதம் *(Basic Street Rate)* கணக்கில் கொள்ளப்பட்டு, கட்டடத்தின் பரப்பளவு மற்றும் பயன்பாடு அடிப்படையில் சொத்துவரி விதிக்கப்பட்டு வருகிறது.

சென்னை மாநகரில் உள்ள கட்டடங்களில் வாடகை அடிப்படையில் செல்போன் இணைப்புகளுக்காக டவர்ஸ்கள் அமைக்கப்படுகிறது. சொத்துவரி என்பது பெறப்படுகின்ற வாடகை அடிப்படையில் *(Reasonable letting Value)* நிர்ணயம் செய்யப்படுகிறது. கட்டடங்களில் டவர்ஸ் அமைக்கப்படுவதால் கட்டட உரிமையாளர்களுக்கு கூடுதலாக கிடைக்கப்பெறும் வாடகை தொகையினை கணக்கில் கொண்டு, சொத்துவரியினை நிர்ணயம் செய்ய, மாத வாடகைத் தொகை x 10.92 x 12.40 % என்றவாறு தனி கணக்கீட்டு முறையினை பின்பற்ற, மன்றத் தீர்மானம் எண்.38/2009, நாள் 27.01.2009-ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிலையில், மேற்படி தனி கணக்கீட்டு முறைக்கு மாற்றாக, மன்றத் தீர்மானம் எண். .406, நாள் 29.10.2009ல், இனம்-1ல், டவர்ஸ்கள் அமைக்கப்பட்டுள்ள அனைத்து கட்டடங்களுக்கும், ஒரே மாதிரியாக அரையாண்டு சொத்துவரி ரூ.15,000/-என்று நிர்ணயம் செய்திட அனுமதி அளிக்கப்பட்டது.

இவ்வலுவலக 12.11.2009 நாளிட்ட சுற்றறிக்கை வாயிலாக, மன்றத் தீர்மானம் எண்.406, நாள் 29.10.2009ன்படி, டவர்கள் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களுக்கு கூடுதலாக வரி விதிப்பு செய்ய உரிய மேல்நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு அனைத்து மண்டல அலுவலகங்களையும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

சென்னை மாநகராட்சியால், மேற்படி அலைப்பேசி கோபுரங்கள் *(Cell Phone Towers)* அமைந்துள்ள சொத்துக்களின் மீது விதிக்கப்பட்ட சொத்துவரியினை எதிர்த்து, மேற்படி மன்றத் தீர்மானம் மற்றும் சுற்றறிக்கையினை ரத்து செய்யுமாறு, சில சொத்துக்களின் (கட்டிடங்கள்/நிலங்களின்) சொத்து உரிமையாளர்கள் மற்றும் அலைப்பேசி கோபுரங்களை நிறுவும் தொலை தொடர்பு நிறுவனதாரர்களால், மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.Nos. 21040 to 21044/2010, 27969 to 27972/2010, 10809/2012 ,11213 to 11215/2011 மற்றும் 16225/2011 ஆகிய வழக்குகள் தொடரப்பட்டது.

மேற்படி வழக்குகளில், *WP Nos.21040 to 21044 of 2010, WP Nos. 27969 to 27972 of 2010 and WP No. 10809 of 2012* முதலிய வழக்குகளுக்கு, தனித் தனியாக மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் இடைக்கால தடை உத்தரவு *(Interim stay Order)* பிறப்பித்தது.

அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட 4வது மற்றும் 5வது மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி, அலைப்பேசி கோபுரங்கள் அமைந்துள்ள சொத்துக்கள் மீது வணிக ரீதியாக வரி

விதிப்பது குறித்து, பெருநகர சென்னை மாநகராட்சியால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் தற்போதைய நிலையினை, தெரிவிக்குமாறு அரசால் கேட்டுக் கொள்ளப்பட்டு வந்த நிலையில், உரிய விவரங்கள் அரசுக்கு அவ்வப்போது தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

இச்சூழ்நிலையில், அலைபேசி கோபுரங்கள் மீது, சொத்துவரி விதிக்கப்பட்டதைத் எதிர்த்து, சொத்து உரிமையாளர்கள் மற்றும் அலைபேசி கோபுரம் நிறுவும் நிறுவனத்தை சார்ந்தவர்களால் தொடரப்பட்ட வழக்குகள் ***W.P.Nos. 21040 to 21044/2010 and 10809/2012 மற்றும் W.P.Nos. 27969 to 27972/2010 and 11213 to 11215, 16225 of 2011*** ஆகியவற்றின் மீது, மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம், 16.04.2021 நாளிட்டு தீர்ப்பு வழங்கியுள்ளது.

மேற்படி 16.04.2021 நாளிட்டு தீர்ப்பின் பத்தி 11 மற்றும் பத்தி 12ல் கீழ்கண்டவாறு ஆணையிடப்பட்டுள்ளது.

11. In view of the facts and circumstances, the following order is passed:-

(1) The impugned circular with reference to uniform fixation of property tax alone stands quashed;

(2) In respect of assessment of property tax, the respondent- Corporation has to follow the mandatory procedures as contemplated under the relevant provisions of the CCMC Act, 1919 and accordingly, redetermine the property tax in respect of the BTS Towers installed in the premises of the respective writ petitioners by affording opportunity to them and pass appropriate orders on merit and in accordance with law, within a period of four months from the date of receipt of a copy of this order, enabling the writ petitioners to settle their property tax;

(3) For making reassessment of property tax under the relevant provisions of the CCMC Act, 1919, the writ petitioners are directed to submit copies of the lease agreement, license and other relevant documents, to the respondent-Corporation, within a period of four weeks from the date of receipt of a copy of this order along with objections or representations, if any.

12. With the above directions, all the writ petitions stand allowed in part. However, there shall be no order as to costs. Consequently, connected miscellaneous petitions are closed.

மேற்படி மாண்புமிகு சென்னை உயர் நீதி மன்றம் 16.04.2021 தேதியிட்ட உத்தரவின்படி கீழ்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

1) நீதி மன்ற ஆணையின்படி, மன்றத் எண்.406, நாள் 29.10.2009ன் மூலம், அலைப்பேசி கோபுரங்கள் அமைக்கப்பட்ட சொத்துக்களின் (கட்டிடங்கள்/நிலங்கள்) மீது, I/2009-10 முதல், அரையாண்டிற்கு ரூ.15,000/-, என விதிக்கப்பட்ட ஒரே மாதிரியான சொத்துவரியினை ரத்து செய்யப்பட வேண்டும்.

2) நீதிமன்ற ஆணை பெற்ற 4 மாதங்களுக்குள், சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்-1919ன்படி, உரிய சட்ட பிரிவுகள் மற்றும் விதிகளை பின்பற்றி, அலைப்பேசி கோபுரங்கள் அமைக்கப்பட்ட சொத்துக்களின் மீதான சொத்துவரியினை 2/2009-10 முதல் மறு நிர்ணயம் செய்து, மனுதாரர்களுக்கு, உரிய வாய்ப்புகள் வழங்கி, தகுதி மற்றும் சட்ட

விதிகளின்படி உரிய ஆணைகள் வழங்கப்பட வேண்டும் என்பதால், சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்,1919, பிரிவு-98-ன்படி, மேற்படி சொத்துவரி விதிப்பு தொடர்பான அறிவிப்பு, அரசிதழ் மற்றும் உள்ளூர் நாளிதழ்களில் வெளியிடப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

3) சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்-1919ன்படி, 2/2009-2010 முதல் சொத்துவரியினை மறு மதிப்பீடு செய்ய, நீதிமன்ற ஆணை பெற்ற நான்கு வார காலத்திற்குள் வழக்கு தொடர்ந்த மனுதாரர்கள் உட்பட அலைப்பேசி கோபுரங்கள் அமைந்துள்ள சொத்துக்களின் சொத்து உரிமையாளர்களால், குத்தகை ஒப்பந்தம், உரிமம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள், ஏதேனும் ஆட்சேபணைகள், மனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதால், மேற்படி ஆவணங்களை மனுதாரர்களிடமிருந்து பெற்று ஆய்வு செய்து, சொத்துவரியினை மறு மதிப்பீடு செய்ய மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தற்போது அலைப்பேசி கோபுரங்கள் அமைந்துள்ள சொத்துக்களின் (கட்டிடங்கள்/நிலங்கள்) எண்ணிக்கை 1739 ஆக உள்ளன. இந்த சொத்துக்களுக்கு 2/2009-10 முதல் சொத்துவரியினை மறு மதிப்பீடு செய்ய வேண்டும். ஏனெனில், ஏற்கெனவே 2/2009-10 முதல் இந்த சொத்துக்களுக்கு ஒரே மாதிரியான வரி விதிக்கப்பட்டதால், இதனை எதிர்த்து சொத்து உரிமையாளர்கள்/ அலைபேசி கோபுரம் நிறுவும் நிறுவனதாரர்களால் வழக்கு தொடுக்கப்பட்டு, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தடையாணை பெற்ற நிலையில், மேற்படி சொத்து உரிமையாளர்களில் பெரும்பாலானவர்களிடமிருந்து சொத்துவரி ஏதும் இதுநாள்வரை பெறப்படவில்லை. தற்போது மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தால் உரிய ஆணைகள் இந்த வழக்கில் (W.P.Nos. 21040 to 21044/2010 and 10809/2012 மற்றும் W.P.Nos. 27969 to 27972/2010 and 11213 to 11215, 16225 of 2011) பிறப்பிக்கப்பட்ட நிலையில், சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதிகள்-1919ன்படி உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு, மேற்படி 1739 சொத்துக்களுக்கு சொத்துவரி மறு மதிப்பீடு செய்து, சொத்து வரி வசூலிக்கப்பட வேண்டும்.

எனவே, மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம், வழக்குகள் <u>W.P.Nos. 21040 to 21044/2010 and 10809/2012 *மற்றும்* W.P.Nos. 27969 to 27972/2010 and 11213 to 11215, 16225 of 2011</u> ஆகியவற்றின் மீது, 16.04.2021 தேதியிட்டு வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில், பெரு நகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அலைப்பேசி கோபுரங்கள் (Cell Phone Towers) கொண்ட சொத்துக்களின் மீது, கீழ்கண்ட இனம்-1, 2, 3 மற்றும் 4ன்படி, நடவடிக்கைகள் மேற்கொள்ள சிறப்பு அதிகாரி-மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

எனவே,

1. மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம், வழக்குகள் ***W.P.Nos. 21040 to 21044/2010 and 10809/2012 மற்றும் W.P.Nos. 27969 to 27972/2010 and 11213 to 11215, 16225 of 2011*** ஆகியவற்றின் மீது, 16.04.2021 தேதியிட்டு வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில், முந்தைய சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில், ஏற்கனவே மதிப்பீடு செய்யப்பட்ட அலைப்பேசி கோபுரங்கள் (Cell Phone Towers) கொண்ட சொத்துக்களின் (கட்டிடங்கள்/நிலங்கள்) மீது, சொத்து உரிமையாளர்கள் பெறும் மாதாந்திர வாடகையினை, மாதாந்திர வாடகை மதிப்பாக

கொண்டு, ஆண்டு மதிப்பு கணக்கிட்டு, சொத்துவரியினை மறுமதிப்பீடு செய்யவும், தனி ஆணை வழங்கி, சொத்துவரியினை செலுத்த கோரவும்,

2. முந்தைய சென்னை மாநகராட்சி பகுதிகளில் சொத்துவரி மதிப்பீடு செய்யப்படாமல் விடுபட்டுள்ள ஏனைய அலைபேசி கோபுரங்கள் அமைந்துள்ள சொத்துக்கள் மற்றும் விரிவாக்கப்பட்ட மண்டலங்களில் உள்ள, அலைபேசி கோபுரங்கள் அமைந்துள்ள சொத்துக்கள் (கட்டிடங்கள்/நிலங்கள்) ஆகியவற்றின் மீது, சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதிகளின்படி, சொத்து உரிமையாளர்கள் பெறும் மாதாந்திர வாடகையினை, மாதாந்திர வாடகை மதிப்பாக கொண்டு, ஆண்டு மதிப்பு கணக்கிட்டு, சொத்துவரி மதிப்பீடு செய்து, வரி விதிப்புகள் மேற்கொள்ளவும்,
3. இனிவரும் காலங்களில், மேற்படி நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அலைப்பேசி கோபுரங்கள் கொண்ட சொத்துக்களின் (கட்டிடங்கள்/நிலங்கள்) மீது, சொத்து உரிமையாளர்கள் பெறும் மாதாந்திர வாடகையினை, மாதாந்திர வாடகை மதிப்பாக கொண்டு, ஆண்டு மதிப்பு கணக்கிட்டு, சொத்துவரி மதிப்பீடு செய்து, வரி விதிப்புகள் மேற்கொள்ளவும்,
4. இந்த சொத்துவரி விதிப்பு தொடர்பான அறிவிக்கையினை சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்-1919, பிரிவு-98ன்படி, அரசிதழ் மற்றும் உள்ளூர் நாளிதழ்களில் அறிவிப்புகளாக வெளியிடவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 05.07.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

சு.து.ந.க.எண். பி2 / 3613 /2021

தீர்மானஎண்.564/2021 நாள்:13-07-2021

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - கொரோனா நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள - அவசர அவசியம் கருதி 300 பயிற்சி மருத்துவர்களை ரூ.40,000/ மாத ஊதியத்தில், மூன்று மாத காலத்திற்கு சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி நேர்காணல் நடத்தி ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதி.**

நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) உலகமெங்கும் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உத்திரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சலின் தாக்கம் தற்போது அதிகரிக்க தொடங்கியுள்ளது. இதன் காரணமாக பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது கோவிட் தொற்று நோயின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், இதற்கென பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளோடு கோவிட் தடுப்பூசி போடும் பணியினையும் தீவிரப்படுத்த வேண்டியுள்ளது. மேலும் காய்ச்சல் மருத்துவ முகாம்கள் 1 முதல் 15 மண்டலங்களில் நடத்த வேண்டியுள்ளது.

எனவே, அவசர அவசியம் கருதி ஒப்பந்த அடிப்படையில் 300 இறுதியாண்டு படிக்கும் பயிற்சி மருத்துவர்களை ரூ.40,000/ மாத ஊதியத்தில், சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி பணியமர்த்த முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 13/05/2021 நாளிட்ட ஆணை பெறப்பட்டு, 12.05.2021 அன்று The Hindu மற்றும் தினமலர் பத்திரிக்கைகளில் விளம்பரம் அளித்து 13.05.2021 அன்று நேர்காணல் (Walk in interview) நடத்தப்பட்டு, இணை ஆணையர் (சுகாதாரம்) தலைமையில், 1.மாநகர நல அலுவலர்(பொ), 2.பெருநகர மருத்துவ அலுவலர் 3. கூடுதல் மாநகர நல அலுவலர்(பொ) தலைமையிடம், 4 கூடுதல் பெருநகர மருத்துவ அலுவலர்களை கொண்ட அலுவலர்களை கொண்ட குழு அமைத்து முதற்கட்டமாக 129 ஒப்பந்த பயிற்சி மருத்துவர்களும், இரண்டாம் கட்டமாக 126 பயிற்சி மருத்துவர்களும், மூன்றாம் கட்டமாக 45 பயிற்சி மருத்துவர்களும், நான்காம் கட்டமாக 124 பயிற்சி மருத்துவர்களும் தேர்வு செய்யப்பட்டனர். தற்போது பணி துறப்பு செய்தவர்கள் மற்றும் பணியில் சேராதவர்கள் போக தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சி மருத்துவர்களில் 300 பேர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

தேர்வு செய்யப்பட்டவர்கள் 1 முதல் 15 மண்டலங்களில் புதியதாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு தொலைபேசி அழைப்பு மையம் 1 முதல் 15 மண்டலத்திலும் ஏற்படுத்தப்பட்டு அங்கு இந்த பயிற்சி மாணவர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் வீட்டில்

தனிமைப்படுத்திக்கொண்டுள்ள நோயாளிகளுக்கு ஒரு நாளைக்கு இரண்டு முறை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆற்றுப்படுத்துதல்(Counseling) வழங்கி வருகின்றனர். மேலும், நோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீட்டிலேயே சோதனை மேற்கொள்ளுதல், தடுப்பூசி போடும் பணிகள் மேற்கொள்ளுதல், மண்டலங்களில் காய்ச்சல் முகாம்களில் பங்கு பெறுதல் மற்றும் இதர கோவிட் தடுப்பு நடவடிக்கைகளில் இந்த பயிற்சி மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர்,

எனவே, 300 பயிற்சி மருத்தவர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திதற்கு சிறப்பு அதிகாரி/மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறலாம்.

**<u>தேவைப்படும் நிதி விவரம்</u>**

| SNo | Name of the post | Mo's Monthly Salary (Rs) | Total Number Medical Officers | Period of contract | Total amount (Rs) |
|---|---|---|---|---|---|
| 1 | Trainee Medical Officer | 40,000 | 300 | 3 months | 3,60,00,000 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் நோவல் கொரோனா நோய் தடுப்பு பணி மற்றும் கோவிட் தடுப்பூசி பணிகளை தீவிரப்படுத்தவும், வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டுள்ள நோயாளிகளுக்கு ஒரு நாளைக்கு இரண்டு முறை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆற்றுப்படுத்துதல்(Counseling) மற்றும் இதர கொரோனா நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள 300 பயிற்சி மருத்துவர்களை ஒப்பந்த அடிப்படையில் ரூ. 40,000/ மாத ஊதியத்தில் 1 முதல் 15 மண்டலங்களில் மூன்று மாத காலத்திற்கு சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி நேரடி நியமனம் மூலம் பணியமர்த்தியத்திற்கு பின்னேற்பு அனுமதி பெறவும்,
2. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி நேரடியாக 300 பயிற்சி மருத்துவர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதியும்,

3. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ. 3,60,00,000/- (ரூபாய் மூன்று கோடியே அறுபது லட்சம் மட்டும்) மேற்கொள்ள அனுமதிக்கும்,
4. சென்னை மாநகர நல சங்க விதிமுறைகளின்படி உறுப்பினர்/ செயலர் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, ஒப்பந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் பயிற்சி மருத்துவர்களுடன் மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளவும் மற்றும் சம்பந்தபட்ட மண்டல மருத்துவ அலுவலர்களின் வருகை சான்றின்படி சென்னை மாநகர நல சங்கத்திலிருந்து மாத ஊதியம் நேரடியாக அவர்களின் வங்கி கணக்கில் வழங்கவும் மற்றும் வருமான வரி பிடித்தம் செய்ய அனுமதியும்,
5. இச்செலவினம் பெருநகர சென்னை மாநகராட்சி கோவிட் நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-70-12-03 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதியும் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதிக்கும்,
6. 300 ஒப்பந்த பயிற்சி மருத்துவர்களை மூன்று மாத காலத்திற்கு தேவைப்படும் ஊதிய தொகை ரூ.3,60,00,000/- (ரூபாய் மூன்று கோடியே அறுபது லட்சம் மட்டும்) வரிசை எண் 5 ல் தெரிவிக்கப்பட்டவாறு மாநகராட்சி கோவிட் நிதியிலிருந்து சென்னை மாநகர நல சங்கத்திற்கு முன்பணமாக வழங்கி மருத்துவ அலுவலர்களுக்கு ஊதியம் வழங்க அனுமதிக்கும் பின்னர் நேர் செய்ய அனுமதிக்கும்,

மேற்கண்ட *1* முதல் *6* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 04.07.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"*1* முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**E.D.P.C.NO.C2/1396/2018**

**Resolution No.565 /2021** **Date:13-07-2021**

**Greater Chennai Corporation - EDP Cell – Facility Management Services and Annual Maintenance Contract for Computer Hardware, Software and consumables in Ripon Building, three Regional Offices, 15 Zonal Offices, 200 Division Offices, 45 Unit Offices, Substations, Hospitals, Health Post, Schools and other locations within the limits of Greater Chennai Corporation – Based on the satisfactory of services - Extension of Contract for 3rd year (09.03.2021 to 08.03.2022) – For ratification orders.**

Presently, in Greater Chennai Corporation tender for providing Facility Management Services, Annual Maintenance Contract for Computer Hardware and Software in Ripon Building, three Regional Offices, 45 Unit Offices, 15 Zonal Offices, Substations, Hospitals, Health Post, Schools and other locations along with supply of Consumables was floated by EDP Cell in which M/s. Inspirisys Solutions Limited quoted the lowest rate of Rs. 6,34,86,217.66 (Rupees Six Crores Thirty Four Lakhs Eighty Six Thousand Two Hundred and Seventeen and Sixty Six Paisa Only) per annum following which based on approval of Council work order for the above work was placed to M/s. Inspirisys Solutions Limited for the period 09.03.2019 to 08.03.2020 with the following condition

“**M/s. Inspirisys Solutions Limited நிறுவனத்திற்கு மொத்த ரூ.6,34,86,217.66 (GST @ 18% உள்ளிட்டது) தொகைக்கு பணி ஆணை வழங்கவும் மற்றும் ஒரு வருட காலத்திற்கான ஒப்பந்தம் முடிந்தபின் தேவைப்படின் மேலும் ஒவ்வொரு வருடமும் உரிய அனுமதியுடன் மூன்று வருடங்களுக்கு மிகாமல் நீட்டிக்கவும்,”**

Subsequently, following the expiry of Ist year contract period, based on the satisfactory report received from Regional and Zonal offices, approval of Council was obtained and work order for IInd year extension (09.03.2020 to 08.03.2021) was placed to M/s. Inspirisys Solutions Limited on 21.12.2020 **“as per tender document condition for annual extension based on the performance for every year not exceeding three years**”

Further, during the end of IInd year contract period since the services offered by M/s. Inspirisys Solutions Limited was found to be satisfactory it was proposed to extend the contract for the IIIrd year (final extension period as per tender condition). However, since the Election dates were announced and as the Election code of conduct was in existence, file requesting council approval for IIIrd year extension period wasn’t initiated. Mean-while the second year contract period for the above mentioned tender expired on 08.03.2021. Now, since the existing Facility Management & Annual Maintenance contract services for Computer Hardware and Software in all locations of Greater Chennai Corporation has been expired and as the services offered by M/s. Inspirisys Solutions Limited is found to be satisfactory (satisfactory report received from all Regional and Zonal offices of Greater Chennai Corporation is enclosed) based on the existing tender condition it is now proposed to extend the existing Facility Management & Annual Maintenance contract services for Computer Hardware and Software in all locations of Greater Chennai Corporation for IIIrd year (09.03.2021 to 08.03.2022) with no change in rates.

Further, by extending the above contract to M/s. Inspirisys Solutions Limited (with no rate revision) Greater Chennai corporation can avail the below mentioned Cost advantages:

**E.D.P.C.NO.C2/1396/2018**

- Due to the deadly Covid -19 Pandemic situation, production and stock availability of both hardware and software related products have become a major challenge, as a result of which there is a huge increase / hike in rates. By extending the contract to the existing vendor at same work order rate (issued before 2 years) there is definitely item wise cost advantage to GCC.

**For Example:**

| Sl. No | Tonner model | Department rate (per item) | Present market rate (per item) | Cost Advantage (per item) |
|---|---|---|---|---|
| 1. | Canon LBP 3300 | 3781 | 4958 | 1177 |
| 2. | HP Laserjet pro 400 M 451 | 6254 | 12106 | 5852 |
| 3. | Canon 2525 | 1800 | 2818 | 1018 |
| 4. | Samsung ML 2826 (116 Drum unit) | 3500 | 4900 | 1400 |
| 5. | Toshiba T3008 | 6558 | 7500 | 942 |
| 6. | Samsung Multi express K2200 ND | 2780 | 2990 | 210 |
| 7. | RICOH SP 1200 | 2569 | 5018 | 2449 |

- The services of the Manpower deployed at Greater Chennai Corporation to provide Facility Management & Annual Maintenance work to the existing Computer Hardware and Software related items of Greater Chennai Corporation can be availed at the first year quoted rate (even if there is increase in staff salary as per market standards)

**For Example:**

| Sl. No | Description | No. of person | Department rate for manpower (per year) | Present ELCOT per year Rate Contract | Cost Advantage per person per year |
|---|---|---|---|---|---|
| 1. | Project Leader | 1 | 367027 | 649344 | 282317 |
| 2. | Database administrator | 1 | 382320 | 824376 | 442056 |
| 3. | Server Management | 1 | 382320 | 553500 | 171180 |
| 4. | Network Engineer | 1 | 305856 | 376860 | 71004 |
| 5. | Helpdesk Management | 1 | 152928 | 331608 | 178680 |
| 6. | FMS Engineer | 1 | 229392 | 376860 | 147468 |

- When it comes to Annual Maintenance of Hardware items (Computer & related accessories) every year the cost of the spare / item in the open market calculated based on the availability and age of the item. Where as in our case, since there is no change in first year AMC rates, the spare, service and maintenance of the Hardware items shall be availed at the 1st year contract rate quoted by the company.

**E.D.P.C.NO.C2/1396/2018**

Now, considering the above mentioned cost benefits and since the services offered by M/s. Inspirisys Solutions Limited is found to be satisfactory (satisfactory report received from all Regional and Zonal offices of Greater Chennai Corporation is enclosed) based on the tender terms and conditions, it is now proposed to extend the existing Facility Management & Annual Maintenance contract services for Computer Hardware and Software for all locations of Greater Chennai Corporation for the final extension period (as per tender condition) (i.e) for Third year (09.03.2021 to 08.03.2022) with no change in rates.

Hence,

1. To ratify the action taken for extending the Facility Management and Annual Maintenance Contract Services for Computer Hardware, Software and consumables in Ripon Building, three Regional Offices, 15 Zonal Offices, 200 Division Offices, 45 Unit Offices, Substations, Hospitals, Health Post, Schools and other locations within the limits of Greater Chennai Corporation contract to M/s. Inspirisys Solutions Limited for final extension period (as per tender condition) (i.e) for Third year (09.03.2021 to 08.03.2022) at Rs. 6,34,86,217.66 (Rupees Six Crores Thirty Four Lakhs Eighty Six Thousand Two Hundred and Seventeen and Sixty Six Paisa Only) with no change in rates.
2. To issue work order to M/s. Inspirisys Solutions Limited for the extension of third year contract and to make payment to the contractor.
3. To incur the expenditure under the budget Account Code of 220-53-01-02 (e-Gov Design and Consultancy Charges – Vendors) and 220-21-04-02 (Printing and Stationery – Computer Consumables – Department Purchase) of EDP Cell for the financial year 2021-22.

Sl.No. 1 to 3 above, orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Principal Secretary/Commissioner's Note dated.05.07.2021 is read.

**"Sl.No. 1 to 3 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

*******

**E.D.P.C.No.C2/1094/2020**

**Resolution No.566 /2021** **Date:13-07-2021**

**Greater Chennai Corporation - IT Cell – Short e - Tender called for Selection of agency for Social media management, Community response management, Content Creation & Promotion for Greater Chennai Corporation for one year – To cancel the tender – For approval.**

The Chennai Municipal Corporation officially Greater Chennai Corporation is the civic body that governs the city of Chennai. All projects of Greater Chennai Corporation are Citizen centric and are designed / implemented for the wellness of public. In recent days, many innovative and sustainable projects of Greater Chennai Corporation require the attention of Public which could be achieved only through strategic publicity and advertising. The main idea behind advertising & publicizing is to make the efforts of Greater Chennai Corporation reach a large group of public and in return to make more people benefited. Now, since Internet has consolidated itself as a very powerful medium in transforming the way of communication and has become the Universal source of information for millions of people, it is now proposed to adopt digital media for publicizing the Citizen Centric projects of Greater Chennai Corporation among Chennai Citizens.

Now, considering the above facts, decision was taken and tenders were floated for fixing the agency for Social media management, Community response management, Content Creation & Promotion for Greater Chennai Corporation for a period of one year, following which M/s.KS Smart Solutions Private Limited was identified as qualified bidder and LOA for the above tender was issued on 25.02.2021

Subsequently, security deposit of Rs.4,62,535/- was submitted and file procedures for agreement execution has been initiated and is yet to signed. Mean while, letter to M/s. KS Smart Solutions Private Limited to start the work and deploy manpower (committed in the above tender) was sent on 19.03.2021 and no response was received. Further, 2 reminder letters (to start the work) were sent to M/s. KS Smart Solutions Private Limited on 10.05.2021 & 09.06.2021 but no reply was received in this regard.

Hence, a final reminder letter mentioning **" M/s. KS Smart solutions Private Limited is once again requested to start the work immediately, failing which order shall be terminated based on tender terms & conditions without no further notice "** was sent on 26.06.2021.

Now, since **M/s. KS Smart solutions Private Limited** has not reverted or started the work till date it is now proposed to cancel the above tender.

Hence, to cancel the tender called for Selection of agency for Social media management, Community response management, Content Creation & Promotion for Greater Chennai Corporation for one year since **M/s. KS Smart solutions Private Limited** has not started the work till date. Orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Principal Secretary/Commissioner's Note dated.06.07.2021 is read.

**"Approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

***********

**S.W.M.C.No:A7/1406/2019**

**Resolution No.567 /2021** **Date:13-07-2021**

**Greater Chennai Corporation - Solid Waste Management Department - Draft Plastic Waste Management Bye-Laws, 2020 - Government instructions to incorporate amendment issued in G.O.(MS) No. 37, Environment and Forests (EC2) Department. dated: 05.06.2020 - Amendment incorporated – For approval.**

Greater Chennai Corporation prepared the draft Plastic Waste Management Bye-Laws, 2020 based on the Plastic Waste Management Rules, 2016 and submitted to the Government for approval.

The clause 14 (b) (b) of the Plastic Waste Management Bye-Laws, 2020 mentions " The plastic bag which constitute or form an integral part of packaging in which goods are sealed prior to use at manufacturing / processing units" as in G.O.(MS)No.84,Environment and Forests (EC2) Department, dated: 25.06.2018.

The G.O.(MS)No.37,Environment and Forests (EC2) Department, dated: 05.06.2020, has issued directions for deleting section 1 (b) (b) of G.O.(MS)No.84 (14 (b) (b) of draft Bye-Laws, 2020) and inserting the following:

"Alternatives to the use and throwaway plastics other than compostable plastics shall be examined and tested by the Central Institute of Plastic Engineering and Technology (CIPET) and necessary approval or consent shall be obtained from the Tamil Nadu Pollution Control Board".

The above amendment has been incorporated in the draft Plastic Waste Management Bye-Laws, 2020 and the revised Bye-Laws submitted for approval.

Hence,

